பக்கங்கள்: 20

விலை:20 ரூபா

# காலைக்கதிர்

Kalaikkathir

விடியல் 01 | வள்ளுவர் ஆண்டு 2047 | கார்த்திகை 11, சனிக்கிழமை 26.11.2016 | கதிர் 21

தலைவர் பிரபாவின்

62 ஆவது

பிறந்தநாள் இன்று



# துயிலும் இல்லங்களில் உணர்வுபூர்வ அஞ்சலி

## கட்சி பேதங்கள் கடந்து நாளை ஒன்றுபட்டு கூடுவதற்கு அழைப்பு

யாழ்ப்பாணம், நவம்பர் 26

**இராணுவக் கட்டுப்பாட்டிலிருந்து விடுவிக்கப்பட்ட மாவீரர் துயிலும் இல்லங்களில் நாளை மாலை இடம்பெறும் - யுத்தத்தில் உயிரிழந்த உறவுகளுக்கு நினைவு கூரும் - நிகழ்வில் கட்சி, அணி பேதங்கள் கடந்து ஒன்றுதிரண்டு பங்குபற்றுமாறு பொதுமக்கள் சார்பில் அழைப்பு விடுக்கப்பட்டிருக்கின்றது.**

**யுத்தத்தில் உயிரிழந்த உறவுகளுக்கு அஞ்சலி செலுத்தும் நிகழ்விலாவது தமிழ்ச் சமுதாயம் கன்னை பிரிந்து மோதாமல் ஒன்றுபட்டு செயற்பட வேண்டும் என்றும் கோரிக்கை விடுக்கப்பட்டிருக்கின்றது.**

இராணுவப் பிடியிலிருந்து சிலமாவீரர்துயிலும்இல்லங்கள் விடுவிக்கப்பட்டுள்ளன.

கிளிநொச்சி மாவட்டத்தில் கனகபுரம்மற்றும்முழங்காவில் பகுதிகளிலும் –

மன்னார்மாவட்டத்தில்பண்டிவிரிச்சான், ஆண்டான்குளம்,

பக்கம் 20 >>>


## வன்னிவேளாங்குளத்தில் இன்று துயிலும் இல்லம் சிரமதானம்

யாழ்ப்பாணம், நவ.26

முல்லைத்தீவு மாவட்டம் வன்னி வேளாங்குளத்தில் உள்ள மாவீரர் துயிலும் இல்லமும் இரா ணுவப் பிடியிலிருந்து விடுவிக்கப்பட்டிருக்கிறது.அந்தத் துயிலும் இல்லம் இன்று சிரமதானப்பணிமூலம்துப்புரவுசெய்யப்படும் என சில தகவல்கள் தெரிவித்தன.

அந்தப் பணிகளைத்தமிழ்த் தேசியக்கூட்டமைப்பின்தேசியப் பட்டியல் நாடாளுமன்ற உறுப்

பக்கம் 20 >>>



யாழ். பல்கலையில் நேற்று உணர்வுபூர்வ நினைவேந்தல்!
(விரிவான செய்தி 3 ஆம் பக்கத்தில்)

## கனகபுரம், முழங்காவில் துயிலும் இல்லங்கள் நேற்று சிரமதானப் பணி மூலம் துப்புரவு

யாழ்ப்பாணம், நவ.26

தமிழர்தேசம் எங்கும் நாளை கொண்டாடப்படும் மாவீரர் தினத்தை முன்னிட்டு கிளிநொச்சி மாவட்டத்தில் அமைந்துள்ளகனகபுரம்மாவீரர்துயிலும் இல்லம் மற்றும் முழங்காவில் மாவீரர் துயிலும் இல்லம் ஆகியன நேற்றைய தினம் தமிழ் மக்களால் சிரமதானப் பணி மூலம் துப்புரவு செய்யப்பட்டன.

யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரனால்ஒழுங்குசெய்யப்பட்டஇந்த சிரமதானப்பணிகளில்நூற்றுக் கணக்கான மக்கள் கலந்து கொண்டுஉணர்வுபூர்வமாக துப்புரவுப் பணிகளில் ஈடுபட்டனர்.

இறுதிப் போருக்கு முற்பட்ட காலத்தில் மாவீரர் துயிலும் இல்லங்கள்தமிழ்மக்களால்வழிபாட்டிடங்கள் போன்று பராமரிக்கப்பட்டு வந்தன.பின்னர் தமிழர் தேசம் முழுவதும் இராணுவத்தின் கட்டுப்பாட்டில் வந்ததை

பக்கம் 20 >>>

சிரமதானப் படங்கள்
4, 8ஆம் பக்கத்தில்

## தமிழ் இயக்கத்திடம் ஆயுதப் பயிற்சி பெற்ற ராஜித மாவீரர் நினைவு கூரலைக் கொச்சைப்படுத்தலாமா?

### ஆதங்கத்துடன் விசனம் தெரிவிக்கின்றார் சிவாஜிலிங்கம்

கொழும்பு நவ.26

"தமிழ் இயக்கங்களிடம் ஆயுதப் பயிற்சி பெற்றவர்கள் வடக்கு மாகாண ஆளுநர் ரெஜினோல்ட் குரேயும் அமைச்சர் ராஜித சேனாரத்னவும்.

அப்படிப்பட்ட அமைச்சர் ராஜித சேனாரத்ன கடந்த காலத்தை மறந்து, அதே ஆயுதப் போராட்டத்தில் மரணித்த மாவீரர்களை நினைவு கூருவதைக் கொச்சைப்படுத்துகிறார். இது ஆச்சரியமாகவும் கவலையாகவும் இருக்கின்றது."

– இவ்வாறு கூறியிருக்கின்றார் வடக்கு மாகாண சபை உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம்.

நேற்று மாலை யாழ். ஊடக அமையத்தில் தாம் நடத்திய செய்தியாளர் மாநாட்டிலேயே இப்படிக் கேள்வி எழுப்பினார்.

குரேயும் ராஜிதவும் முன்னர் விஜேகுமாரதுங்கவின் ஸ்ரீலங்கா மக்கள் கட்சியில் மும்முரமாகச் செயற்பட்டவர்கள்.

பக்கம் 20 >>>

## ஒற்றையாட்சியின் கீழ்தான் தீர்வு மற்றுமோர் அமைச்சரும் அறிவிப்பு

கொழும்பு, நவ.26

ஒற்றையாட்சி முறைமையின் கீழேயே மாகாணங்களுக்கு அதிகாரப் பரவலாக்கல் என்று மற்றுமோர் அமைச்சரும் நேற்று அறிவித்திருக்கின்றார்.

மின்வலு மற்றும் மீள் புத்தாக்க சக்தி அமைச்சர் அஜித் பீ.பெரேராவே இதனை நேற்றுத் திட்டவட்டமாக அறிவித்திருக்கின்றார்.

உத்தேச புதிய அரசமைப்பில் மாகாணங்களுக்கு அதிகாரங்களைப்பகிர்வது குறித்து ஆராயப்படுகின்றது.

ஆனாலும்நாட்டின்ஒற்றையாட்சி முறைமை, பௌத்தத்துக்கு மேலிடம் ஆகிய விடயங்களில்

பக்கம் 20 >>>

அளப்பு அருணாசலம்



**பொங்கிடும் கடற்கரை ஓரத்திலே**
**மழை பொழிந்திடும் கார்த்திகை மாதத்திலே**
**மங்களம் தங்கிடும் நேரத்திலே**
**எம் மன்னவன் பிறந்தான் ஈழத்திலே...!**

## உறவுகளுக்கு அஞ்சலி செலுத்தும் உரிமை உண்டு என்கிறார் மாவை

யாழ்ப்பாணம், நவ.26

"உயிர்நீத்தஆத்மாக்களுக்கு அஞ்சலிசெலுத்தும் உரிமை உறவுகளுக்கு உண்டு இதனை அனைவரும் அங்கீகரிக்க வேண்டும்"

–இவ்வாறு தெரிவித்திருக்கிறார் இலங்கைத்தமிழரசுக்கட்சியின்தலைவரும்யாழ்.மாவட்ட நாடாளுமன்றஉறுப்பினருமான மாவை சேனாதிராஜா.

தாம் வெளியிட்ட அறிக்கை ஒன்றிலேயே அவர் இவ்வாறு தெரிவித்திருக்கிறார். அதில் அவர் மேலும் தெரிவித்துள்ளவை வருமாறு:-

இனப் போரில் போராளிகள் உள்ளிட்டபொதுமக்கள்இலட்சக் கணக்கானோர் தம்முயிரை அர்ப்பணித்துள்ளனர்.

அவ்வாறுஉயிர் நீத்த உறவு

பக்கம் 20 >>>

## பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் இனிமேல் கைதுகள் இடம்பெறா!

### அமைச்சர் மனோ கணேசன் உறுதி

கொழும்பு, நவ.26

இலங்கையில் இனிமேல் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைதுகள் எவையும் இடம் பெறாது என அமைச்சர் மனோ கணேசன் உறுதியளித்துள்ளார்.


யாழ்ப்பாணத்தில் வன்முறைச் சம்பவங்களுடன் தொடர்புடையவர்கள் என்று குற்றம் சுமத்தப்பட்டிருந்த ஆவா குழுவின் உறுப்பினர்கள் சிலர் பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டிருந்தனர்.

இந்நிலையில் நேற்று முன்தினம் காலை குறித்த இளைஞர்களின்உறவினர்கள்யாழ்ப்பாணத்தில் இருந்து வந்து அமைச்சர் மனோ கணேசனின் அலுவலகத்தில் இவ்விடயம் தொடர்பாக அவரைச் சந்தித்து உரையாடியிருந்தனர்.

இதன்போது கைது செய்யப்பட்டுள்ள இளைஞர்களுக்கு எதிரான பயங்கரவாதத் தடைச் சட்

பக்கம் 20 >>>

# வட்டுவாகல் கடற்படைத் தள காணி தொடர்ந்தும் சுவீகரிப்பு நடவடிக்கை!



முல்லைத்தீவு, நவ.26

முல்லைத்தீவு மாவட்டம் வட்டுவாகல் கடற்படைத் தளம் அமைந்துள்ள நிலப்பகுதியை புதிய சரத்தின் கீழ் அபகரிக்கும் பொது அறிவித்தல் நேற்று மாலை பிரதேச செயலாளரினால் பகிரங்கப் படுத்தப்பட்டுள்ளது.

முல்லைத்தீவு மாவட்டம் வட்டுவாகல் பகுதியில் உள்ள பொதுமக்களுக்குச் சொந்தமான 617 ஏக்கர் நிலப்பரப்பில் அமைந்துள்ள கடற்படை முகாம் பகுதி முழுமையாக அபகரிக்க இதுவரை காலமும் காணி சுவீகரிப்புப் சட்டத்தின் 38 ஏ யின் கீழ் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

இவ்வாறு பல முறை இடம்பெற்ற முயற்சிகள் அனைத்தும் மக்களின் போராட்டங்கள் காரணமாக தடுக்கப்பட்டிருந்தன.

இருப்பினும் குறித்த பிரதேசத் தினை சுவீகரிக்கும் முயற்சியினை மட்டும் கடற்படையும் பாதுகாப்பு அமைச்சும் தொடர்ந்த வண்ணமே உள்ளன. இதன் பிரகாரம் பாதுகாப்பு அமைச்சின் உத்தரவிற்கமைய பிரதேச செயலாளரினால் மீண்டும் சுவீகரித்தல் உத்தரவு பகிரங்கப்படுத்தப் பட்டுள்ளது.

அதேவேளை முகாமைச் சூழ உள்ள பாதுகாப்பு அரண்கள் அனைத்தும் சீமெந்துக் காப்பரண்களாகவும் மாற்றப்படுகின்றன.

இவ்வாறு கடற்படையுள்ள பிரதேசத்தை கடற்படையினரின் பாவனைக்கு வழங்குவது குறித்து மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவிலும் விவாதிக்கப்பட்டது.

முடிவில் குறித்த 617 ஏக்கர் நிலத்தையும் எக்காரணம் கொண்டும் கடற்படையினருக்கு வழங்க முடியாது என்றே தீர்மானிக்கப்பட்டது. இருந்த போதிலும் தற்போது ஒருங்கிணைப்புக்குழுக்கூட்ட முடிவுக்கு முரணாக மீண்டும் சுவீகரிக்கும் முயற்சி இடம்பெறுகின்றமை குறிப்பிடத்தக்கது. (உ81)

## யாழ்.நகரில் மும்பை தொடுகை சிகிச்சை நிபுணர்

இலங்கைக்கு பல தடவைகள் வந்து பெரும் எண்ணிக்கையானவர்களுக்கு - சிகிச்சையும் பயிற்சியும் அளித்த இந்தியாவின் மும்பையைச் சேர்ந்த தொடுகை சிகிச்சை நிபுணர் டாக்டர் சசிகாந்த்சேத் இன்று சனிக் கிழமை முதல் யாழ். நகரில் சிகிச்சையளிக்க வந்துள்ளார். இவர் தொடுகை சிகிச்சை தொடர்பான பயிற்சியையும் வழங்குவார்.

நீரிழிவு , இருதய மற்றும் சிறுநீரகம் உட்பட பல நோய்களுக்கு தொடுகை சிகிச்சை அளித்து தலைநகரிலும் கண்டி உட்பட பல பகுதி களிலும் பலருக்கு சிகிச்சை யளித்து குணப்படுத்தியுள்ளார். குறிப்பாக முள்ளந் தண்டு , முழங்கால் நோவுக்கு சிரட்டை அகற்றாமல் சிகிச்சை அளிக்கும் புதிய முறை குறித்து கருத்தரங்கு நடத்த தயாராகவுள்ளார்.

அவரிடம் சிகிச்சையும் பயிற்சியும் பெற விரும்புவோர் 0754778312 என்னும் கைத் தொலைபேசி இலக் கத்துடன் தொடர்பு கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

# வடக்கு மக்கள் தம் நிலத்துக்காக இன்றும் போராடும் நிலைமை

## காணிகளைக் கையளிக்குமாறு கோருகிறார் சாந்தி எம்.பி

வடபகுதித் தமிழ் மக்கள் தமது சொந்த நிலங்களைப் பெற்றுக் கொள்வதற்காக உண்ணாவிரதம் இருப்பதும் வீதி வீதியாகச் சென்று ஆர்ப்பாட்டங்களை நடத்துவதும் தொடர்கின்றன என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சாந்தி சிறிஸ்கந்தராசா தெரிவித்துள்ளார்.

அடுத்த வருடத்திற்கான, வரவு செலவுத்திட்டத்தின் வன ஜீவராசிகள் அமைச்சு மற்றும் காணி அமைச்சிற்கான நிதி ஒதுக்கீடு தொடர்பான விவாதம் நேற்று நாடாளுமன்றில் இடம்பெற்றது. அதில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

கேப்பாபுலவு மக்களின் காணிகளுக்குள் மக்கள் செல்ல முடியாதவாறு இராணுவம் முகாம்களை அமைத்து நிலை கொண்டுள்ளது. இவற்றை விடுவித்து, மக்களை தமது பூர்வீக காணிகளில் வாழக்கூடிய ஓர் இயல்பு நிலையை உருவாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும்.

வனவளத் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்படும் பல நடவடிக்கைகள் மக்களை பல்வேறு துன்புறுத்தலுக்கு உள்ளாக்குகின்றன. தமது காணிகள் என தெரிவித்து திடீரென வன வளப்பாதுகாப்பு அதிகார சபை மக்களின் நிலங்களைக் கையக்கட்டுத்துவதுடன், எல்லைகளையும் நிறுவுகின்றனர்.

வனவளப்பாதுகாப்புதிணைக்களத்தின் காணி கையகப்படுத்தல் தொடர்பான வர்த்தாமானி பிரசுரத்தை மீளப்பெற்று, பூர்விகமாக வாழ்ந்த மக்களுக்கே காணிகளை வழங்கி அவர்களின் நிம்மதியான வாழ் விற்கு நடவடிக்கை எடுக்கவேண்டும்.

முல்லைத்தீவு மாவட்டத்தின் கொக்கிளாய், கொக்குத்தொடுவாய், கருநாட்டுக்கேணியில் வாழ்ந்த தமிழ் மக்கள் 1984 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 29 ஆம் திகதி பலவந்தமாக வெளியேற்றப் பட்டனர். அதன் பின்னர் குறித்த காணிகள் சிங்கள மக்களுக்கு வழங்கப்பட்டுள்ளன.

அங்கு வாழ்ந்த மக்கள் அனைத்து வளங்களையும் வசதிகளையும் இழந்து இன்று நாளாந்தக் கூலி வேலைக்குச் சென்று வருகின்றனர். - என்றார் அவர். (ம-81)

# கடற்றொழில் திணைக்கள ஊழியர் மோ.சைக்கிள் விஷமிகளால் எரிப்பு



முல்லைத்தீவு மாவட்ட கடற்றொழில் நீரியல் வள திணைக்களத்தில் பணிபுரியும் உத்தியோகத்தர் ஒருவரின் மோட்டார் சைக்கிள் ஒன்று நேற்று இரவு இனம் தெரியாத நபர்களால் திணைக்கள வளாகத்தில் வைத்து தீவைத்து எரிக்கப்பட்டுள்ளது.

சம்பவம் குறித்து தெரிய வருவதாவது:

முல்லைத்தீவு கடற்கரை வீதியில் உள்ள கடற்றொழில் நீரியல் வள திணைக்களத்தில் கடமையாற்றும் உத்தியோகஸ்தர் ஒரு வரின் மூன்று லட்சம் ரூபா பெறு மதியிலான மோட்டார் சைக்கிளை அலுவலக வளாகத்தில் நிறுத்திவிட்டு அவர் விடுதியில் தூக்கத்தில் இருந்த வேளையில் நள்ளிரவில் வந்த இனம்தெரியாத நபர்கள் காவோலைகளை மோட்டார் சைக்கிளின் மேல் போட்டு தீ வைத்து விட்டு தப்பி சென்றுள்ளனர்.

சம்பவம் தொடர்பில் திணைக்கள அதிகாரிகளால் முல்லைத் தீவு விசேட குற்றத்தடுப்பு பிரிவில் முறையிட்டமையைத் தொடர்ந்து விசேட குற்றத் தடுப்பு பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

அண்மைக்காலமாக முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள கொக்கிளாய், நாயாறு போன்ற பிரதேசங்களில் உள்ள களப்புக்களில் சட்டவிரோத மீன்பிடியில் ஈடுபடும் மீனவர்களை அவர்களின் மீன்பிடி உபகரணங்களோடு கைது செய்து நீதிமன்றில் முற்படுத்தும் நடவடிக்கையில் முல்லை மாவட்ட நீரியல்வள திணைக்களத்தின் அதிகாரிகள் ஈடுபட்டு வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது. (உ81)

# இலங்கையர்கள் இருவர் தாய்லாந்தில் கைது

தாய்லாந்து நவ.26

ஆட்கடத்தல், மோசடிகளை மேற்கொள்ளல் மற்றும் பெண்களைக் கடத்திச் சென்று விபச்சாரத்தில் ஈடுபடுத்தல் முதலிய நடவடிக்கைகளை மேற்கொண்டனர் என்ற குற்றச்சாட்டில் இலங்கையைச் சேர்ந்த இருவர் தாய்லாந்து பட்டாயாவில் வைத்துக் கைது செய்யப்பட்டுள்ளனர்.

ஹார்ஷ குமார (வயது34) மற் றும் மதுர துஸார (வயது26) ஆகியோரே நவம்பர் 12 ஆம் திகதி கைது செய்யப்பட்டனர்.

மேற்படி இருவரும் கடந்த ஒக்டோபர் மாதம் 30 ஆம் திகதி 20 வயதான இலங்கைப் பெண்ணொருவரை பட்டாயாவுக்கு கடத்திச் சென்று வன்கொடுமைக்கு உட்படுத்தினர் எனக் கூறப்படுகின்றது. குறித்த இலங்கைப் பெண், அவர்கள் தன்னை பாலியல் வன்கொடுமைக்கு உட்படுத்தினர் என்று தாய்லாந்து பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளார்.

ஐக்கிய அரபு ராஜ்ஜியத்திற்கு செல்லவிருந்த தன்னை இந்த இருவரும் பட்டாயாவிற்கு கடத்திக் கொண்டு சென்றனர் என்று அந்தப் பெண் முறைப்பாட்டில் தெரிவித்துள்ளார்.

இந்த முறைப்பாட்டின் அடிப்படையிலேயே இலங்கையர் இருவரும் கைது செய்யப்பட்டனர்.

அவர்கள் மீது ஆட்கடத்தல், கடத்தல்கள், மோசடிகளை மேற் கொள்ளல் மற்றும் பாலியல் தொழிலுக்கு வற்புறுத்தல் முதலிய குற்றச்சாட்டுகள் பதிவாகியுள்ளன.

அந்தப் பெண்ணின் குற்றச்சாட்டுகளை சந்தேக நபர்கள் மறுத்துள்ள நிலையில், அவர்களின் வங்கி கணக்கு விவரங்களைக்கொண்டு விசாரணைகளைத் தாங்கள் முன்னெடுக்கவுள்ளனர் எனப் பட்டாயா பொலிஸார் தெரிவித்தனர். (ம)

# பட்ஜெட்டுக்கு எதிராக வைத்தியர்கள் போராட முடிவு

2017ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டத்தில் வைத்தியத்துறைக்கென பரிந்துரைக்கப்பட்டுள்ள சில விடயங்களுக்கு எதிர்ப்புத் தெரிவித்து நாடளாவிய ரீதியில் பணிப் பகிஷ்கரிப்பில் ஈடுபடவுள்ளதாக அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் கூறியுள்ளது.

கொழும்பில் நேற்று வெள்ளிக்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே, அச்சங்கத்தின் ஊடகப் பேச்சாளர்கள் சமந்த ஆனந்த, இவ்வாறு தெரிவித்தார்.

அவசர நோயாளர்களுக்குப் பாதிப்பு ஏற்படாத வகையில் இந்தப் போராட்டத்தை நடத்துவது என்றும் முடிவெடுக்கப் பட்டுள்ளது. (ம)

# கருத்தோவியக் கண்காட்சி

கொழும்பு நவ.25

பிரபல கருத்தோவிய (காட்டூன்) கலைஞர் கமிலஸ் பெரேராவின் கலைவாழ்வின் நிறைவை முன்னிட்டு ஏற்பாடு செய்யப்பட்ட கருத்தோவியக் கண்காட்சி ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவி னால் நேற்று வெள்ளிக்கிழமை பிற்பகல் கொழும்பு பண்டாரநா யக்கா ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் திறந்து வைக்கப்பட்டது.

'சுஜமன்', 'தெக்கொத் பத்மாவதி', 'தேபானிஸ்', 'கொட்வின் ஐயா', 'தொங் சேத்தங்', 'மகொடிஸ்துமா', 'டிக்கா', 'சிரிபிரிஸ்', 'சுவீற்றி', 'மிஸ்டர்லவாரிஸ்' எனும் பாத்திரங்களின்பெயர்களில் கமிலஸ் பெரேராவினால் வரையப்பட்ட, மக்களால் வரவேற்கப்பட்ட 250 கருத்தோவியங்கள் இக்கண் காட்சியில் காட்சிப்படுத்தப்பட்டுள் ளது.


இக்கண்காட்சி இன்றும் நாளையும் முற்பகல் 9.00 மணியிலிருந்து இரவு 8.00 மணிவரை பார்வைக்காகத் திறந்திருக்கும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

அமைச்சர்களான கயந்த கருணாதிலக, தயாசிறி ஜயசேகர, பீ.ஹரிசன் ஆகியோர் உள்ளிட்ட பிரமுகர்களும் கமிலஸ் பெரேராவின் இரசிகர்கள் பெருமளவானோரும் இந்நிகழ்வில் பங்கு பற்றினர் என்று ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது. (ம)

## யாழ். பல்கலையில் மாவீரர் நாள் நிகழ்வு







மாவீரர் நாளை முன்னிட்டு நேற்று பல்கலைக்கழக சமூகத்தினர் அஞ்சலி நிகழ்வுகளை ஏற்பாடு செய்திருந்தனர். பல்கலைக்கழக வளாகத்திலுள்ள திலீபன் நினைவுச் சமாதியைச் சூழ மரக்கன்று நடும் நிகழ்வும் கைலாசபதி கலையரங்கில் மாவீரர்களுக்கு சுடர்கள் ஏற்றி அஞ்சலி செலுத்தும் நிகழ்வும் இடம்பெற்றன. (இ-12)

## யாழ்.பல்கலைக்கழக வளாகத்தில் மாவீரர் நினைவு சுவரொட்டிகள்




யாழ்ப்பாணம், நவ. 26

தமிழீழ விடுதலைப் புலிகளின் மாவீரர் நாள் மற்றும் விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனின் 62 ஆவது பிறந்த நாளை நினைவுகூரும் வகையிலான துண்டுப் பிரசுரங்கள் யாழ்.பல்கலைக்கழக வளாகத்தில் ஒட்டப்பட்டிருந்தன என்று தெரி விக்கப்படுகிறது.

இந்தச் சுவரொட்டிகள் யாழ். பல்கலைக்கழக கட்டடங்களின் சுவர்களில் ஒட்டப்பட்டிருந்தன. யாழ்.பல்கலைக்கழக சமூகம் என்ற அடையாளப் படுத்தலுடன் இனிய பிறந்த நாள் வாழ்த்து என்றும் சுவரொட்டியில் குறிப்பிடப்பட்டிருந்தது.

இந்த நிலையில், இச்சுவரொட்டிகள் பல்கலைக்கழக பாதுகாப்பு ஊழியர்களால் அகற்றப்பட்டுள்ளன. இச்சம்பவம் தொடர்பாக செய்தி சேகரிப்புப் பணிக்குச் சென்ற ஊடகவியலாளர்களையும் திருப்பி அனுப்பியிருந்தனர். பல்கலைக்கழக பதிவாளரின் அறிவுறுத்தலுக்கமையவே ஊடகவியலாளர்களை திருப்பி அனுப்புகிறோம் என்று அவர்கள் கூறினர். (இ-10)

## 60 வருடங்கள் புனரமைக்காமல் உருமாறிய பூம்பத்தை கிளை வீதிகள்

### நிலைமையை விளக்கி முதலமைச்சருக்கு கடிதம்

யாழ்ப்பாணம், நவ.26

வலி.தென்மேற்கு பிரதேசத்தில் பண்டத்தரிப்பு பட்டினத்தில் வடலியடைப்பு பகுதியில் பூம்பத்தை வீதியில் 60 வருடங்களுக்கு மேலாகப் புனரமைக்கப்படாமல் போக்குவரத்துச் செய்யமுடியாமல் உருமாறியிருக்கும் 2 கி.லோ மீற்றர் நீளமான கிளை வீதிகளான 1ஆம் வீதி, 2ஆம் வீதி, 6ஆம் வீதி ஆகிய 4 வீதிகளையும் விவசாயிகளினதும் மாணவர்களினதும் நலன்கருதி முன்னுரிமை அடிப்படையில் புனரமைப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு வலி.தென் மேற்குப் பிரதேச சபை முன்னாள் உறுப்பினர் த.குமணன் வடமாகாண முதலமைச்சரைக் கோரியுள்ளார்.

முதலமைச்சருக்கு அவர் அனுப்பிவைத்துள்ள கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

வடலியடைப்பு கிராமத்தில் மக்களின் பாவனையின் வகையிலுள்ள பூம்பத்தை 2 கிலோ மீற்றர் நீளமான பகுதிகள் தற்போதைய வீதியின் நிலவரம் கருதி அவசரமாகவும் அவசியமாகவும் புனரமைப்புச் செய்ய வேண்டி உள்ளதை தங்களின் மேலான கவனத்திற்கு கொண்டுவருகின்றேன்.

இவ்வீதியின் வழியாக இங்குள்ள விவசாயிகள் தமது தொழிலின் நிமித்தம் சென்று வரவேண்டிய தேவையுள்ளமையும் இந்து மக்கள் வழிபாட்டின் நிமித்தம் இந்த வீதியை அன்றாடம் பாவிக்க வேண்டிய நிலையுமுள்ளது. மேலும் பாடசாலை செல்லும் மாணவர்களும் இவ்வீதியை தமது பாவனைக்குப் பயன்படுத்துகின்றனர்.

தாங்கள் கிராமத்தின் உட்கட்டுமான வேலைத்திட்டங்களில் மிகவும் முக்கிய கவனமெடுத்து இதற்கு ஆவன செய்துவரும் முதலமைச்சர் என்ற வகையில் மக்கள் சார்பாக நான் முன்வைக்கும் இந்த உடனடித்தேவையை நிவர்த்தி செய்வீர்கள் என்பதை நன்கு உணர்வேன்.

இவ்விடத்தில் தங்களின் பதிலிலை எமக்கு விரைவாக தெரிவித்துதவுமாறு வேண்டுகின்றேன்.- என்றுள்ளது. (இ-59)

## சிறுவர்தின விழா

கரவெட்டி, நவ 26

கரவெட்டி வடக்கு நெல்லியடி முன்பள்ளியின் சிறுவர்தின விழா நாளை ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு திரு இருதயக் கல்லூரி மண்டபத்தில் பெற்றோர் சங்கத் தலைவர் சி.பிரகலாதன் தலை மையில் நடைபெறும்.

இந்த நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக வடமாகாண சபை உறுப்பினர் எஸ்.அகிலதாஸ், கௌரவ விருந்தினராக கரவெட்டி பங்குத் தந்தை அன்ரன் அமல்ராஜ், சிறப்பு விருந்தினர்களாக கிராம அலுவலர் இ.யாதவன், ஆரம்பப் பிள்ளைப்பருவ உதவிக் கல்விப் பணிப்பாளர் சி.தில்லைநாதன், திரு.இருதயக் கல்லூரி அதிபர் இ.ராகவன், லூர்த்துமடத் தலைவி சமில்டா,முன்பள்ளி இணைப்பாளர் திருமதி கலைவாணி பாலகிருஷ்ணன் ஆகியோரும் கலந்து கொள்வர். (ஐ-40)

## கோப்பாய் முகாமை சுற்றி போடப்படும் 'கொங்கிறீற்' தூண்கள்

கோப்பாய், நவ.26

கோப்பாய் கடல்ஏரியை அண்டியதாக காணப்படும் இராணுவ முகாமின் சுற்றுப் புறப் பகுதியில் ''கொங்கிறீற்'' தூண்கள் போடப்பட்டு வருகின்றன.

கடந்த 2000 ஆம் ஆண்டு ஆனையிறவு வீழ்ச்சியுற்ற பின்னர் புலிகளின் யாழ். நோக்கிய முன்னேற்றத்தை தடுப்பதற்காகவே கோப்பாய் கடலேரியை அண்டிய இந்த முகாம் அமைக்கப்பட்டது.

பின்னர் முகாம் பல கட்டங்களாக பலப்படுத்தப்பட்டு வந்தது.

இதுவரையிலும் சுற்றுச் சூழல் எல்லை சாதாரண மரக் குற்றிகளைக் கொண்டே அமைக்கப்பட்டு இருந்தது.

ஆனால் தற்போது அவை ''கொங்கிறீற்'' தூண்களாக மாற்றப்பட்டு வருகின்றன. (இ-51)

## மரபுரிமைச் சின்னம் அழிவடையும் நிலை



மந்திகை, நவ. 26

பருத்தித்துறை பிரதேச செயலர் எல்லைக்குட்பட்ட பகுதியில் பேணிப் பாதுகாக்கப்பட வேண்டிய மரபுரிமைச் சின்னமான தெருமூடி மடம் மரங்கள் வளர்ந்து இடிந்து விழக் கூடிய நிலை ஏற்பட்டுள்ளது.

தொன்மை மிக்க மரபுரிமைச்சின்னங்கள் பாதுகாக்கும் திட்டத்தில் பருத்தித்துறை தெருமூடி மடமும் அடக்கமாகும்.

இவ்வாறு இருக்கும் தெருமூடி மடத்தில் பறவைகளின் எச்சத்தால் வளர்ந்திருக்கக் கூடும் என நம்பப்படும் ஆல், அரசு, ஜாம் போன்ற மரங்கள் கிளை விட்டுக்காணப்படுகின்றன.

இவை மேலும் வளர்ந்தால் இந்த மரபுரிமைச் சின்னம் அழியும் நிலை ஏற்படும்.

எனவே இதுவிடயத்தில் பருத்தித்துறை பிரதேச செயலக அல்லது நகரசபையினர் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதே பலரது எதிர்பார்ப்பாகும். (ஐ-40)

## பரு.ஆஸ்பத்திரி சவச்சாலை முகப்பு மதில் விழும் நிலையில்

மந்திகை, நவ 26

பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையின் சவச்சாலைக்குச் செல்லும் வாயிலின் மதில் இடிந்து விழக்கூடிய நிலையில் காணப்படுவதால் இது குறித்து வைத்தியசாலை நிர்வாகம் கவனம் செலுத்த வேண்டும் என பொதுமக்கள் கேட்டுள்ளனர்.

சவச்சாலைக் கடவையின் தூண் பகுதியில் இருந்து ஏற்பட்ட வெடிப்பு மதிலின் வழியாக பிளவடைந்து காணப்படுகிறது.

இவ்வாறு காணப்படும் கடவையூடாகவே, சடலங்கள் எடுத்துச் செல்லும் வாகனங்களும் சென்று வருகின்றன.

பிரேத பரிசோதனை செய்யப்பட்டு சடலம் வழங்கப்படும் வரை உறவினர்கள் இப்பகுதியிலேயே கூடிநிற்பர். இதனால் இந்த மதில் இடிந்து விழும் நிலை ஏற்பட்டால் உயிர்ஆபத்தும் ஏற்படக் கூடிய அபாயம் உள்ளது.

எனவே, பருத்தித்துறை ஆதார வைத்தியசாலை நிர்வாகத்தினர் இது குறித்து கவனம் செலுத்த வேண்டும் என பொதுமக்கள் கோருகின்றனர். (ஐ-40)

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021 – 222 3000, editor@kalaikkathir.lk
விளம்பரம்: 021 – 221 9440, ads@kalaikkathir.lk
விநியோகம்: 021 – 222 2600

## இக்கட்டில் தீர்வு முயற்சி

**தேசிய இனப்பிரச்சினைக்கு எப்படியும் ஓர் அமைதித் தீர்வை காண்போம் என்று கூறும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவை பொறுத்தவரை நிலைமை உண்மையில் சாண் ஏற முழம் சறுக்குவது போன்றுதான் இருக்கின்றது.**

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பதினாறு நாடாளுமன்ற உறுப்பினர்களையும் நேற்று முன்தினம் ஒன்றாக சந்தித்த ஜனாதிபதி, அச்சமயம் தீர்வு காண்பதில் தமக்கு உள்ள உறுதிப்பாட்டை ஓரளவு தெளிவாக எடுத்துரைத்திருக்கிறார்.

"ஓர் அற்புதமான சந்தர்ப்பம் இப்போது கிடைத்திருக்கின்றது. அதனை நாம் வசமாக பயன்படுத்த வேண்டும். எப்படியும் ஐக்கியப்பட்டு இந்தக் காரியத்தை நாம் ஒப்பேற்ற வேண்டும்" என்று அவர் கூறிய கூற்றில், நேர்மையும், உறுதியும் தென்பட்டன என்று அந்தச் சந்திப்பில் கலந்துகொண்ட கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் கூறினார்.

"தீர்வுக்கான முயற்சிகளை நாம் பெற்றுத்தர முயல்கையில் பல தரப்புக்களிலும் இருந்தும் எதிர்ப்பு வரும். பல தரப்பினரின் உண்மை முகம் வெளிப்படும். அவற்றை எல்லாம் நாம் எதிர்கொண்டு தாண்ட வேண்டும்" - என்று கூறியிருக்கின்றார் ஜனாதிபதி.

ஆனால் அவர் எதிர்பாராத தரப்புகளில் இருந்தும் எதிர்ப்பு வரக்கூடும் என்பது இந்த உறுதி மொழியை அவர் கூட்டமைப்பினருக்கு வழங்கிய சமயத்தில் - அல்லது வழங்கி சொற்ப வேளையில் - அம்பலமாகி இருப்பதுதான் புதிய நிலைமை.

தீர்வுக்கான திட்டங்களை உள்ளடக்கியதான புதிய அரசமைப்பைக் கொண்டு வருவதுதான் முக்கிய பிரச்சினை.

அத்தகைய புதிய அரசமைப்பு நகலை நடைமுறைப்படுத்துவதற்கு மூன்று பிரதான கட்டங்கள் இருக்கின்றன.

முதலாவது - சம்பந்தப்பட்ட தரப்புகளுடன் சேர்ந்து, கருமமாற்றி, இணக்கமான ஓர் அரசமைப்பு நகல் திட்டத்தை உருவாக்குவது.

இரண்டாவது - அதற்கு நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மை ஆதரவைப் பெறுவது.

மூன்றாவது - நாடாளுமன்ற அங்கீகாரத்தின் பின்னர் சர்வஜன வாக்கெடுப்பு ஒன்றின் மூலம் அந்த நகல் திட்டத்துக்கு மக்களின் அங்கீகாரத்தைப் பெறுவது.

இந்த முதல் இரண்டையும் தாம் இயன்றவரையில் ஒப்பேற்றி முடிப்பார் என்ற நம்பிக்கையை கூட்டமைப்பு எம்.பிக்களுடனான தனது சந்திப்பின்போது ஜனாதிபதி தெளிவாக எடுத்துரைத்திருந்தார். ஆனால் அது தொடர்பாகவே இப்போது ஐயுறவு எழுந்திருப்பதுதான் புதிய நிலைமை.

தீர்வை உள்ளடக்கிய புதிய அரசமைப்பில் நாட்டின் ஆட்சி முறைமை சமஷ்டியாக இருக்கவேண்டும் என்கிறது தமிழர் தரப்பு. ஒற்றையாட்சி முறையின் கீழ் தீர்வு சாத்தியமேயல்ல என்பதே தமிழர்களின் நிலைப்பாடு.

ஆனால் பெரும்பான்மையினரான சிங்களவர்களில் ஒரு சாரார், தங்களின் மேலாதிக்கத்தை உறுதிப்படுத்தும் ஒற்றையாட்சியைக் கைவிடமுடியாது என்பதில் உறுதியாக உள்ளனர். அந்த அணியில் சிங்கள, பௌத்த பேரினவாத சக்திகளும் மும்முரமாக உள்ளன.

இது விடயத்தில், "ஏறச்சொன்னால் எருதுக்குக் கோபம், இறங்கச் சொன்னால் முடவனுக்குக் கோபம்" என்ற நிலைமை.

ஒற்றையாட்சி என்றும் இல்லாமல், சமஷ்டி என்றும் இல்லாமல் நாட்டின் ஆட்சி முறையை இரண்டுக்கும் நடுவில் ஒரு சொல்லாடல் மூலம் குறிப்பிட்டு சமாளிக்கலாம் என்பது ஆளும் தரப்பின் எத்தனம். ஆனால் அதற்கும் இப்போது ஆப்பு விழுந்திருக்கின்றது என்பதுதான் புதிய நிலைமை.

நாடளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட பட்ஜெட்டின் இரண்டாவது வாசிப்பின் மீதான வாக்கெடுப்பில் அரசிற்கு அதற்கு ஆதரவாக 164 வாக்குகள் கிடைத்தன.

இது, மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மையிலும் அதிகம். இந்த ஆதரவை வைத்துக்கொண்டு புதிய உத்தேச அரசமைப்பையும் அங்கீகரிக்க வைக்கலாம் என்பது அரசுத் தலைமையின் நம்பிக்கை.

ஆக, மிஞ்சிப்போனால் கூட்டு எதிரணியில் - முன்னாள் அரசுத் தலைவர் மஹிந்த ராஜபக்ஷ தலைமையில் - ஓர் ஐம்பது எம்.பிக்கள் எதிர்க்கக் கூடும். மூன்றில் இரண்டு பங்கு கிடைக்காமல் தடுப்பதற்குத் தேவையான 75 எம்.பிக்களை கூட்டு எதிரணியால் திரட்டமுடியாது என்றுதான் அரசுத் தலைமை நம்பியிருந்தது.

ஆனால், நிலைமை அதுவல்ல. ஆளும் தரப்பில் இருக்கும் சுதந்திரக் கட்சியின் மூத்த அமைச்சரான சுசில் பிரேம ஜயந்தவே விபரீதத்தை அப்பட்டமாகப் பிரகடனப்படுத்தி விட்டார்.

ஜனாதிபதி - கூட்டமைப்பு சந்திப்பு நேற்று முன்தினம் நடந்தது. தீர்வுத்திட்ட முயற்சிகள் குறித்து ஜனாதிபதி அங்கு நம்பிக்கை வெளியிட்ட அதே சமயம், கொழும்பில் ஒரு பத்திரிகையாளர் மாநாட்டில் தங்கள் சுதந்திரக் கட்சியின் நிலைப்பாடு இது என்று ஒரு திட்டவட்டமான அறிவிப்பை அமைச்சர் சுசில் பிரேமஜயந்த பகிரங்கப்படுத்தியிருக்கின்றார். "ஒற்றையாட்சி என்பதை தெட்டத்தெளிவாக உறுதிப் படுத்தாத எந்த அரசமைப்பு நகலையும் சுதந்திரக் கட்சி ஆத ரிக்காது. தனி ஒரு சாராரின் தேவைகளை நிறைவு செய்வதற்காக முன்னெடுக்கப்படும் அரசமைப்பு மாற்றத்தையும் நாங்கள் ஆதரிக்கமாட்டோம்". - என்று அவர் அறுத்து உறுத்து அறிவித்திருக்கிறார்.

சு.க வின் தலைவர் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் பக்கத்தில் இருந்தே - மிக முக்கிய தலைவரிடம் இருந்தே -இப்படி ஒரு திட்டவட்டமான நிலைப்பாடு வெளிப்பட்டுவிட்டது.

இனி, சம்பந்தப்பட்ட தரப்புக்களின் எதிர்பார்ப்புக்களை நிறைவு செய்யும் இணக்கமான ஒரு நகல் திட்டத்தை எப்படி தயாரிப்பது? அதற்கு நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பங்கு ஆதரவு பெறுவது எங்ஙனம்?

ஆரம்பத்திலேயே, இக்கட்டில் சிக்கிவிட்டது இந்த நல்லாட்சி அரசின் தீர்வுத் திட்ட முயற்சி. அமைச்சர் சுசில் பிரேம ஜயந்தவின் அறிவிப்பு அதைத்தான் புட்டுக்காட்டுகிறது.

# முழங்காவில் மாவீரர் துயிலும் இல்லத்தில் சிரமதானம்



கிளிநொச்சி பூநகரி முழங்காவில் மாவீரர் துயிலுமில்லக் காணியிலும் நேற்று வெள்ளிக்கிழமை பொதுமக்கள் பலர் சிரமதானப் பணிகளில் உணர்வுபூர்வமாக ஈடுபட்டனர்.

நேற்றுக் காலை தொடக்கம் பிற்பகல் வரை இந்தப் பணிகள் நடைபெற்றன. குறித்த மாவீரர் துயிலுமில்லக் காணியும் இராணுவத்தின் கட்டுப்பாட்டில் இருந்து சில மாதங்களுக்கு முன் விடுவிக்கப்பட்டிருந்தது. ஆனால், அங்கும் கல்லறைகள் மற்றும் நினைவுக்கல் என்பன இராணுவத்தால் இடிக்கப்பட்டிருந்தன.

தற்போது மக்கள் மிகவும் ஆர்வத்துடனும் உணர்வுபூர்வமாகவும் கலந்துகொண்டு சிரமதானப் பணிகளில் ஈடுபட்டு வருகின்றனர். காலையில் சிலர் கலந்துகொண்ட போதும், பின்னர் படிப்படியாக மக்கள் ஆர்வத்துடன் தாங்களாகவே முன்வந்து சிரமதானப் பணிகளை மேற்கொண்டுள்ளனர்.

எட்டு வருடங்களின் பின் துயிலுமில்லக் காணிக்குள் கால் வைத்தமை தங்களுக்கு உணர்வுபூர்வமாகவும் ஆத்மதிருப்தியாகவும் இருந்தது என்று அவர்கள் குறிப்பிட்டனர்.

அத்தோடு கல்லறைகள் மற்றும் நினைவுக்கல் இல்லாத போதும் தங்களின் பிள்ளைகள் புதைக்கப்பட்ட இடத்தில் நிற்பது ஆத்ம திருப்தியை அளிப்பதாகவும் அவர்கள் மேலும் குறிப்பிட்டனர். (கனகபுரம் மாவீரர் துயிலுமில்ல சிரமதானம் தொடர்பான செய்தி 8 ஆம் பக்கத்தில்)(இ-70)

# ஆஸ்பத்திரி கழிவு நீர் துர்நாற்றத்தால் அசௌகரியம்

பருத்தித்துறை, நவ.26

பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையின் கழிவுநீர் தொட்டியில் இருந்து திறந்து விடப்படும் கழிவு நீரால் பெரும் சுகாதாரச் சீர்கேடு நிலவுவதுடன் துர்நாற்றமும் வீசுவதாகப் பொதுமக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

மந்திகை ஆதார வைத்தியசாலையின் விடுதிகள் மற்றும் கட்டடங்களில் இருந்து வெளியேறும் கழிவு நீரைச் சேகரிப்பதற்காகப் பெரிய தொட்டி ஒன்று வைத்தியசாலை வளாகத்தின் தென்மேற்கு மூலையில் அமைக்கப்பட்டுள்ளது.

கழிவுநீர் இயந்திரத்தின் மூலம் சுத்திகரிக்கப்பட்டு நன்னீர் வெளியில் விடப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டது.

ஆனால், அத்தொட்டியில் இருந்து காலை, மாலை வேளைகளில் திறந்துவிடப்படும் கழிவு நீர் துர்நாற்றம் வீசுகின்றது என பொதுமக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

சுத்திகரிக்கப்பட்ட நீர் அவ்வாறு துர்நாற்றம் வீசுவதற்கான சந்தர்ப்பம் இல்லை எனவும் கூறப்படுகிறது.

அப்படியாயின் கழிவுநீர் சுத்திகரிக்கப்படாமலேயே திறந்து விடப்படுகிறதா என்ற கேள்வியும் எழுகிறது. இக்கழிவு நீர் கிணறுகளில் சேருகின்றது எனவும் பொதுமக்கள் கூறுகின்றனர்.

அதற்கு அப்பகுதிக் கிணற்று நீரைப் பரிசோதிக்க வேண்டிய தேவையும் ஏற்பட்டுள்ளது. மக்களுக்குப் பாதிப்பு ஏற்படாத வகையில் நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு பிரதேச மக்கள் கேட்டுள்ளனர். (ஐ-40)

# தமிழ்மொழி மூல வினாப்பத்திரத்துடன் வீட்டுக்குச் சென்ற மாணவர்கள்

*சிங்கள அதிபரின் அதிமேதாவித்தனம்*

கொழும்பு, நவ.26

மாணவர்களுக்குத் தமிழ் மொழியைக் கற்பிப்பதற்கு ஆசிரியர் இல்லாமையால் வினாப் பத்திரத்தை வழங்கி, மாணவர்களை வீட்டுக்கு அனுப்பிய சம்பவம் ஒன்று உடுநுவர பகுதியில் இடம் பெற்றுள்ளது.

உடுநுவர டீ.பீ.விஜேதுங்க தேசிய பாடசாலையின் தவணைப் பரீட்சை நடைபெற்று வருகிறது. தவணைப் பரீட்சையில் தமிழ்மொழிக்குரிய வினாப்பத்திரத்தை மாணவர்களுக்கு வழங்கியுள்ளனர். வினாப்பத்திரத்துக்குரிய விடைகளை எழுதுவதற்கு அனுமதிக்கப்படாமல் மாணவர்கள் வீடுகளுக்கு அனுப்பப்பட்டுள்ளனர்.

கடந்த 22ஆம் திகதி காலை தமிழ்மொழி வினாப்பத்திரத்தை மாணவர்களுக்கு வழங்கியுள்ளனர். 10.30 மணியளவில் மாணவர்கள் வீடுகளுக்குச் சென்றுள்ளமையை அடுத்து பெற்றோர் இது தொடர்பாகக் கல்வித்திணைக் களத்தில் முறைப்பாடு செய்துள்ளனர்.

இது தொடர்பில் அதிபர் தரப்பில் தெரிவிக்கப்பட்டவை வருமாறு:-

பல வருடங்களாக உடுநுவர டீ.பீ.விஜேதுங்க தேசியப் பாடசாலையில் தமிழ் மொழியைக் கற்பிப்பதற்குரிய ஆசிரியர் பற்றாக்குறை நிலவி வருகிறது. பல்வேறு சந்தர்ப்பங்களில் ஆசிரியர் பற்றாக்குறை தொடர்பில் மேலிடங்களில் கோரிக்கை விடுத்தும் இது வரை உரிய ஆசிரியர் ஒருவர் நியமிக்கப்படவில்லை. இதனால் தமிழ் மொழி பற்றிய விழிப்புணர்வு மாணவர்களுக்கு இல்லை. - என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். (இ-11)

### நாளை

27.11.2016
ஞாயிற்றுக்கிழமை
திதி : திரயோதசி பிற்பகல் 1.50 வரை
நட்சத்திரம் : சுவாதி
முன்னிரவு : 7.29 வரை
சுபநேரம் 9.12 –10.42
இராகுகாலம் 4.42 –6.12

JSAC

பெண்களுக்கெதிரான
வன்முறை ஒழிப்பு செயற்பாடு
(கார்த்திகை 25 முதல் மார்கழி 10 வரை)
பெண்களுக்குப் பல்துறைக் கல்வி வாய்ப்புக்கள்
மற்றும் தொழில் பயிற்சி வாய்ப்புக்களை
வழங்குவதனூடாக சமூகத்தில் ஆண்,பெண்
சமத்துவத்தினை மேம்படுத்துவோம்.
யாழ். சமூக செயற்பாட்டு மையம்

16
2016

# துப்பாக்கி கலாசாரத்துக்கு பாதுகாப்புத் தரப்பே பொறுப்பு

## மனித உரிமைகள் ஆணைக்குழுவின் முன்னாள் ஆணையாளர் தெரிவிப்பு

கொழும்பு, நவ.26

சட்ட விரோத துப்பாக்கி பாவனையால் இடம்பெறும் குற்றச்செயல்கள் அதிகரித்துள்ளமைக்கு பாதுகாப்புத் தரப்பு பொறுப்பு கூற வேண்டும்.

-இவ்வாறு மனித உரிமைகள் ஆணைக்குழுவின் முன்னாள் ஆணையாளர் கலாநிதி பிரதீபா மஹாநாமஹேவா கூறியுள்ளார்.

துப்பாக்கி பயன்பாட்டால் குற்றச்செயல்கள் இடம்பெறுவது, அது தொடர்பில் நல்ல அனுபவம் உள்ளவர்களாலேயே.

இராணுவம் மற்றும் பொலிஸ் சேவையில் இருந்து தப்பிச் சென்றவர்கள் தொடர்பான தரவுகள் மற்றும் குற்றங்கள் தொடர்பிலான விரிவான



விசாரணையின் மூலம், துப்பாக்கி மூலமான குற்றச்செயல்களை அதிகளவில் கட்டுப்படுத்த முடியும்.

கடந்த சில மாதங்களுக்குள் துப்பாக்கி மூலமான குற்றச் செயல்கள் நாட்டில் பல பிரதேசங்களில் பதிவாகியுள்ளன. மிகவும் அண்மைய சம்பவமாக நேற்று முன்தினம் மினுவாங்கொடையில் பதிவாகியிருந்தது.

மோட்டார் சைக்கிளில் வந்த இருவர் துப்பாக்கிப் பிரயோகத்தை மேற்கொண்டுவிட்டு தப்பிச் சென்றுள்ளனர். இதில் ஒருவர் உயிரிழந்தார்.

இதற்கு முன்னர், கண்டி - அங்குபுர பகுதியின் பெபில பள்ளிக்கு அருகில், காரில் வந்த சிலரால் மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிச் சூட்டில் 20 வயதுடைய ஒருவர் உயிரிழந்துள்ளார். மேலும் ஒருவர் காயமடைந்திருந்தார். ரி56 ரக துப்பாக்கி ஒன்று இதற்குப் பயன்படுத்தப்பட்டுள்ளது.

இது தவிர கடந்த 15 ஆம் திகதி குருநாகல் மாஸ்பொத பிரதேசத்தில் பொலிஸ் தொலைபேசி கண்காணிப்பு வாகனம் மீது மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிச் சூட்டில், உப பொலிஸ் பரிசோதகர் ஒருவர் உயிரிழந்துள்ளார். இரண்டு பொலிஸ் அதிகாரிகள் காயமடைந்தனர்.

வாதுவ ரயில் நிலையத்துக்கு அருகில் துப்பாக்கிச் சூட்டில் பலியான ஒருவரின் சடலம் கடந்த ஒக்ரோபர் 31 ஆம் திகதி மீட்கப்பட்டது.

ஒக்ரோபர் மாதம் 23 ஆம் திகதி மட்டக்குளி பிரதேசத்தில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டில் நால்வர் உயிரிழந்திருந்தனர்.

இதை அண்மித்த ஒரு நாளில் நிட்டம்புவ பிரதேசத்திலும் துப்பாக்கிச் சூட்டு சம்பவம் ஒன்று இடம்பெற்றிருந்தது. இதில் வர்த்தகர் ஒருவர் உயிரிழந்திருந்தார்.

இந்தச் சம்பவங்களை பாதாள உலக குழுக்களுக்கு இடையில் உள்ள பிரச்சினையாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

சட்ட விரோதமாக வைத்திருக்கும் துப்பாக்கிகளை பாதுகாப்பு தரப்பினர் பொறுப்பேற்கும் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டிருந்த போதிலும், அதன் மூலம் சிறந்த பலன் கிடைக்கவில்லை என்பது நாளுக்கு நாள் அதிகரித்துள்ள துப்பாக்கிச் சூட்டு சம்பவங்கள் மூலம் அவதானிக்க முடிந்துள்ளது.

சட்டவிரோத துப்பாக்கிகளைப் பொறுப்பேற்பதற்கான பொறுப்பு பொலிஸ் மற்றும் பாதுகாப்பு தரப்பினருக்கு வழங்கப்பட்டுள்ளது.- என்று அவர் தெரிவித்துள்ளார். (ஐ)

# அசோகா ஹோட்டல் விடுவிப்பு குறித்து ஐ.ஜி.பியுடன் விரைவில் பேசுவேன்

## அமைச்சர் சுவாமிநாதன் தகவல்

கொழும்பு, நவ.26

யாழ்ப்பாணத்தில் பொலிஸார் வசமுள்ள அசோகா ஹோட்டல் மற்றும் பக்கத்தில் உள்ள வீடுகள், காணிகளை மீளவும் மக்களிடம் கையளிப்பது தொடர்பில் பொலிஸ்மா அதிபருடன் தாம் பேச்சுக்களை நடத்தவிருக்கின்றார் என மீள்குடியேற்ற அமைச்சர் டி.எம். சுவாமிநாதன் தெரிவித்துள்ளார்.

காங்கேசன்துறை பகுதியில் உயர் பாதுகாப்பு வலயத்துக்குள் இருந்த ஒரு பகுதி காணிகள், அண்மையில் பொது மக்களின் மீள்குடியேற்றத்துக்காக பாதுகாப்புப் பிரிவினரால் விடுவிக்கப்பட்டன.

இருப்பினும் இந்தப் பகுதிகளிலுள்ள பொதுமக்களுக்குச் சொந்தமான பல வீடுகளில் பொலிஸார் இன்னும் தொடர்ந்தும் தங்கியுள்ள நிலையில், மக்கள் மீளக் குடியேற முடியாத நிலை இருப்பதாகப் பொதுமக்கள் சுட்டிக்காட்டியுள்ளமையை



ஊடகவியலாளர்கள் அமைச்சர் டி.எம். சுவாமிநாதனின் கவனத்துக்குக் கொண்டு வந்திருந்தனர்.

இவ்விடயம் தொடர்பாக அமைச்சர் ஊடகவியலாளர்களுக்கு மேலும் தெரிவிக்கையில், வலி. வடக்கில் மீள்குடியமர்வதற்கு அனுமதிக்கப்பட்ட பகுதிகளிலுள்ள பொதுமக்களுக்குச் சொந்தமான காணிகள், வீடுகள் மற்றும் விடுதிகள் தொடர்பாகச் சம்பந்தப்பட்ட தரப்பினருடன் விரைவில் பேச்சுக்களை நடத்தி அவற்றை விடுவிக்க உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.- என்றார். (உ)

# யுத்தத்தில் கொல்லப்பட்டோரை நினைவுகூர பொதுநாள் தேவை

## தென் மாகாண ஆளுநர் கோரிக்கை

கொழும்பு, நவ.26

போரில் கொல்லப்பட்டவர்களை நினைவு கூரும் வகையில் பொதுவான நாள் ஒன்றைப் பிரகடனப்படுத்த வேண்டும் என்று தென் மாகாண ஆளுநர் ஹேமக்குமார நாணயக்கார கோரிக்கையை விடுத்துள்ளார்.

போரில் கொல்லப்பட்ட விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரன் மற்றும் போராளிகளின் நினைவாக நவம்பர் 26ஆம், 27ஆம் திகதிகளை நினைவுத்தினமாக பிரகடனப்படுத்த வேண்டும் என்று வடக்கு மாகாணசபையின் உறுப்பினர் எம்.கே. சிவாஜிலிங்கம் கோரியிருந்தார். இந்த விடயம் தொடர்பில் கருத்துத் தெரிவிக்கையில், ஹேமக்குமார நாணயக்கார இந்த புதிய யோசனையை நேற்று முன்தினம் முன்வைத்துள்ளார்.

1971, 1987-1989 ஆம் ஆண்டு காலப் பகுதியில் கொல்லப்பட்ட தமது உறுப்பினர்களை நினைவுக்கூர ஜே.வி.பிக்கு முடியுமானால், ஏன் தமிழ் மக்களுக்கு முடியாது என்று சிவாஜிலிங்கம் கேள்வி எழுப்பியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

# இலத்திரனியல் வாகனங்களை இறக்குமதி செய்ய வேண்டும்

## உதய கம்மன்பில கோரிக்கை

கொழும்பு, நவ.26



தற்போதைய அரசு அதிக இலத்திரனியல் வாகனங்களை இறக்குமதி செய்ய வேண்டும் என ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் உதய கம்மன்பில கோரிக்கை விடுத்துள்ளார்.

2017 ஆம் ஆண்டுக்கான வரவு, செலவுத் திட்டம் தொடர்பிலான குழுநிலை விவாதத்தில் உரையாற்றியபோதே நாடாளுமன்ற உறுப்பினர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்:-

நாட்டில் வாகனத்துக்குத் தேவையான மின்சக்தி வழங்கும் மீள்நிரப்பு நிலையங்களை அமைக்க வேண்டும். சுற்றுச் சூழலைப் பாதுகாப்பதற்கு அரசு எந்த ஒரு திட்டத்தையும் முன்வைக்கவில்லை.

சுற்றுச்சூழலை பாதுகாத்தல் என்ற பெயரில் அரசு அதிக வரிகளை திணிக்கின்றது.

சூழலை பாதுகாப்பதற்காக, 2017 ஆம் ஆண்டுக்கான வரவு, செலவுத் திட்டத்தில் சேர்த்துக் கொள்ளப்பட்ட புதிய காபன் வெளியேற்ற வரியின் உள்நோக்கம் அரசின் வருமானத்தை அதிகரிப்பதற்கான மற்றொரு முயற்சியே என்று மேலும் தெரிவித்தார். (ஐ)

# குடாநாட்டு விவசாயிகள் மகிழ்ச்சி

இம்முறை, மழைவீழ்ச்சி தேவைக்கு ஏற்றபடி படிப்படியாகக் கிடைப்பது மகிழ்ச்சி தரும் விடயம் என்று விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

இது குறித்து விவசாயிகள் தெரிவித்திருந்தாவது:-

கடந்த பல வருடங்களாக மழைவீழ்ச்சி வழமைக்கு மாறாக இருந்து வந்து நெல் உற்பத்தியை பெரிதும் பாதித்தே வந்துள்ளது. ஆனால் இம்முறை அவ்வாறு இல்லாமல் படிப்படியாக மழை பொழிந்து வருகிறது. இது நெற்பயிர்களுக்கு பாதுகாப்பாக உள்ளது. விளக்கீடு வரை இந் நிலை தொடர்ந்தால் நல்லது. எது எப்படியோ, வருண பகவான் கருணை காட்டி எங்களை துன்பத்தில் ஆழ்த்தாமல் இருந்தால் போதும் என்கின்றனர் விவசாயிகள். (இ-51)

# 'கோஷர்' சான்றிதழ் பற்றிய விழிப்புணர்வுக் கருத்தரங்கு

## யாழ்.வர்த்தக தொழில்துறை மன்றத்தில்

யாழ்ப்பாணம், நவ.26

யாழ்.வர்த்தக தொழில்துறை மன்றம் ஏற்பாடு செய்துள்ள ஐரோப்பிய நாடுகளுக்கு உணவு மற்றும் குளிர்பானங்கள் ஏற்றுமதித் தொழில்துறைக்கான 'கோஷர்' சான்றிதழ் பற்றிய விழிப்புணர்வுக் கருத்தரங்கு நாளை மறுதினம் திங்கட்கிழமை காலை 9.30மணி முதல் நண்பகல் 12.30 மணி வரை யாழ்ப்பாணம், இல. 124, இராசாவின் தோட்டம் வீதியில் உள்ள யாழ். வர்த்தகத் தொழில்துறை மன்றத்தில் இடம்பெறும்.

வர்த்தகத் தொழில்துறை மன்றத் தலைவர் கு.விக்னேஷ் தலைமையில் இக் கருத்தரங்கு இடம்பெறும். கோஷர் தரச் சான்றிதழை வழங்கும் கொழும்பை மையமாகக் கொண்ட நிறுவனம் யாழ். மாவட்டத்தில் உள்ள ஏற்றுமதியாளர்கள் இச் சான்றிதழை பெற்றுக்கொள்வது தொடர்பான கருத்தரங்கை மன்றம் ஏற்பாடு செய்துள்ளது.

இக்கருத்தரங்கில் இந்தத் தரச் சான்றிதழ் தொடர்பான பல விடயங்கள் கலந்துரையாடப்படவுள்ளன. எனவே ஏற்றுமதி யாளர்கள் அனைவரையும் கலந்து பயன்பெறுமாறு கேட்டுக் கொண்டுள்ளனர். (இ-7)

# இனப்பிரச்சினைக்கு ஜனாதிபதி, பிரதமர் தீர்வு காண்பார்கள் என நம்புகிறோம்

*சிறுபான்மையினர் நிலை குறித்து கிழக்கு முதலமைச்சர்*



சிறுபான்மை இன மக்கள் தங்களது இனப் பிரச்சினையை தீர்க்க ஜனாதிபதி மற்றும் பிரதமர் மீது நம்பிக்கை வைத்து செயற்பட்டு வருகின்றனர் என்று கிழக்கு மாகாண முதலமைச்சர் ஹாபீஸ் நசீர் அகமட் தெரிவித்தார்.

கிழக்கு மாகாண கட்டட ஒப்பந்தக்காரர் ஒன்றிய அங்குரார்ப்பணக் கூட்டம் திருகோணமலையில் நேற்று முன்தினம் 10.30 மணியளவில் வைபவ ரீதியாக ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இந்த நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். கிழக்கு மாகாண கட்டட ஒப்பந்தக்காரர் ஒன்றியத்தின் தலைவர் ரஞ்சித் தலைமையில் இந் நிகழ்வு இடம்பெற்றது. இந் நிகழ்வில் உரையாற்றும்போது அவர் தெரிவித்தவை வருமாறு:-

எமது மாகாணத்தின் அதிகாரங்களை கூட்டிக் கொள்ளப் பல காய்நகர்த்தல்களை மேற்கொண்டு வருகின்றோம்.

நாம் கூட்டாட்சி நடத்தி பல அபிவிருத்தித் திட்டங்களை உள்ளீர்க்க செயற்பட்டு வருகின்றோம்.

இவ்வாறு கொண்டு வரப்படும் திட்டங்களை நடைமுறைப்படுத்தக் கூடிய திறனைக் கொண்டு எமது நிர்மாண ஒப்பந்தக்காரர்கள் இருக்கின்றோமா? என்பதனை நாம் ஆராய வேண்டிய நிலையில் உள்ளோம் எனமேலும் அவர் தெரிவித்தார்.

இந்த நிகழ்வில் கிழக்கு மாகாண முதலமைச்சர் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு ஒன்றியத்தின் பெயர்ப்பலகையைத் திரை நீக்கம் செய்து மேற்படி ஒன்றியத்தை அங்குரார்ப்பணம் செய்து வைத்தார்.

அத்துடன் ஒன்றியத்துக்கான இணையத்தளமும் முதலமைச்சரால் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

## வீட்டை உடைத்து நகை பணம் திருட்டு

மட்டக்களப்பு, களுவாஞ்சிக்குடி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பெரியகல்லாறுப் பிரதேசத்தில் அமைந்துள்ள வீடு ஒன்றில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை தங்க நகைகள் மற்றும் பணம் என்பன திருட்டுப் போயுள்ளன என்று களுவாஞ்சிக்குடிப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடுசெய்யப்பட்டுள்ளது.

வீட்டின் பின்பகுதியை உடைத்துக் கொண்டு உள்நுழைந்த திருடர்கள், 12 பவுண் தங்க நகைகளையும் 72,000 ரூபா பணத்தையும் திருடிச் சென்றுள்ளனர். ஆசிரியர்களாகப் பணிபுரியும் தம்பதிகளே குறித்த வீட்டில் வசித்துவந்தனர். இந்நிலையில், இவர்கள் வீட்டைப் பூட்டிவிட்டு பாடசாலைக்கு சென்றிருந்த வேளையிலேயே இந்தத் திருட்டுச் சம்பவம் இடம்பெற்றுள்ளது எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

## அனர்த்தங்களை எதிர்கொள்ள ஆயத்தநிலையில் இருங்கள்!

### மட்டு.மேலதிக அரச அதிபர் கூறுகிறார்

மட்டக்களப்பு,நவ.26

மழைக் காலத்தில் ஏற்படக்கூடிய அனர்த்தங்களை எதிர்கொள்ளக்கூடிய ஆயத்த நிலையில் அனைத்துத் திணைக்களங்களும் அரச சார்பற்ற நிறுவனங்களும் இருத்தல் அவசியம் என்று நேற்று வெள்ளிக்கிழமை மட்டக்களப்பு மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் எஸ்.கிரிதரன் தெரிவித்தார்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் அனர்த்த முகாமைத்துவம் தொடர்பான நடவடிக்கைகளை மேற்கொள்வது தொடர்பான விசேட ஆராய்வுக் கூட்டம் மட்டக்களப்பு மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் நடைபெற்றது. இதன் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

மேலும் அவர் தெரிவித்தமை வருமாறு:-

கடந்த மாதங்களில் ஏற்பட்ட கடும் வரட்சியான வேளைகளில் ஒத்துழைப்புடன் செயற்பட்ட பிரதேச செயலகங்கள், சபைகளுக்கு நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன். எதிர்வரும் மழைக்காலத்தில் ஏற்படும் அனர்த்தங்களின் போது மிகவும் சிறப்பாகச் செயற்பட வேண்டும்.

கடந்த வருடங்களுடன் ஒப்பிடும் வேளையில் இவ்வருடம் அதிகமான மழை பெய்யக் கூடிய வாய்ப்பிருப்பதாக எதிர்வு கூறல்கள் காணப்படுகின்றன என்றார்.

## காத்தான்குடியில் 18 இளைஞர் கைது.!

மட்டக்களப்பு, காத்தான்குடி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட காத்தான்குடி நகரத்தில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை நள்ளிரவு வேளை வீதிகளில் நடமாடிய 18 இளைஞர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர் என்றுபொலிஸார்தெரிவித்தனர்.

இவ்வாறு கைது செய்யப்பட்டவர்களில் இருவர் நீதிமன்ற பிடியாணை பிறப்பிக்கப்பட்டு தேடப்பட்டு வந்தவர்கள் என பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

அண்மையில் காத்தான்குடியில் 3 கடைகள் உடைக்கப்பட்டு திருடப்பட்ட சம்பவங்கள் பதிவாகியிருந்த அதே வேளை மேலும் வீடொன்றிலும் கொள்ளைச் சம்பவம் இடம்பெற்றதன் எதிரொலியாகவே இந்த அதிரடி நடவடிக்கைகளை காத்தான்குடி பொலிஸார் மேற்கொண்டுள்ளனர்.





வாழைச்சேனை இந்துக் கல்லூரியில் 2017 ஆம் ஆண்டு முதலாம் தரத்தில் பயிலவுள்ள மாணவர்களின் பெற்றோர்களால் நேற்று வெள்ளிக்கிழமை 300 தளபாடங்கள் பாடசாலை அதிபரிடம் கையளிக்கப்பட்டன.

## ஒரே வீதியில் இரு வேறு விபத்துக்கள்



அம்பாறை மாவட்டத்திலுள்ள சம்மாந்துறைப்பகுதியில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை ஆறு மணி நேரத்துக்குள் ஒரே வீதியில் இருவேறு விபத்துக்கள் இடம் பெற்றுள்ளன என்று பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

இரு சம்பவங்களும் கல்முனை - அம் பாறை பிரதான வீதியில் சம் மாந்துறை பள்ளிவாசல் சந்தியிலிருந்து விளினயடிச்சந்தி வரைக்குமான 300மீற்றர் தூரத்துள் இடம்பெற்றுள்ளன.

முதல் விபத்து காலை அல்மர்ஜான் கல்லூரிக்கு முன்பாக இடம்பெற்றுள்ளது.

பாடசாலையில் விஞ்ஞான பாடப்பரீட்சையை எழுதிவிட்டு வீடுசெல்வதற்கு கல்லூரிக்கு முன்பாகவுள்ள மஞ்சள் கடவையூடாக இரு ஆறாம் வகுப்பு மாணவிகள் நடந்து சென்ற போதே எதிரில் வந்த ஒரு மோட்டார்சைக்கிள் மோதியதால் இந்த விபத்து இடம் பெற்றுள்ளது.

சம்பவத்தில் காயமடைந்த மாணவிகள் சம்மாந்துறை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

மோட்டார் சைக்கிளின் வேகத்தைக் கட்டுப்படுத்த முடியாததினாலேயே இந்த விபத்து இடம் பெற்றுள்ளது.

இரண்டாவது விபத்துச் சம்பவம் மாலை விளினயடிச் சந்தியில் இடம்பெற்றுள்ளது.

தாயும் மகளும் மஞ்சள் கடவையைக் கடக்கும்போது எதிரில் வந்த மோட்டார்சைக்கிள் மிக அருகில் வந்து திடீரென நின்றது. பின்னால் வந்த பஸ் அதனை சற்று உரசியவாறு நின்றது. அப்போதே இரண்டையும் முந்திச்செல்ல முயன்ற படிரக சிறிய வானம் மஞ்சள் கோட்டில் நின்ற தாயை மோதியுள்ளது.

இம்மூன்று வாகனங்களின் விபத்து ஒரேநேரத்தில் கண்ணிமைக்கும் நேரத்துக்குள் இடம்பெற்றதாக நேரில் கண்டோர் கூறியுள்ளனர்.

சம்பவம் தொடர்பாக மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். அத்துடன் சம்பவத்தில் காயமடைந்த தாய் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

## வீட்டுத்திட்டத்தில் இருந்து நீக்கப்பட்ட 11 குடும்பங்களுக்கு மீண்டும் வீடுகள்

மட்டக்களப்பு, நாவற்குடா பிரதேசத்தில் வீட்டுத்திட்டத்துக்காகப் பதிவுசெய்யப்பட்ட பெயர்ப்பட்டியலிலிருந்து நீக்கப்பட்ட 11 குடும்பங்களையும் மீண்டும் வீட்டுத்திட்டத்தில் இணைத்து அவர்களுக்குரிய வீடுகளை வழங்குவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று கிழக்கு மாகாணசபை உறுப்பினர் சிப்லி பறூக், நேற்று வெள்ளிக்கிழமை தெரிவித்தார்.

மீள்குடியேற்ற அமைச்சின் கீழ் வீடுகள் வழங்குவதற்காக நாவற்குடாப் பிரதேசத்தில் மொத்தம் 39 குடும்பங்கள் உள்வாங்கப்பட்டன. இவற்றில் 11 குடும்பங்கள் அவ்வீட்டுத் திட்டத்துக்குப் பதிவுசெய்யப்பட்ட பெயர்ப்பட்டியலிலிருந்து நீக்கப்பட்டன.

இவ்வாறு நீக்கப்பட்ட அக்குடும்பங்களைச் சென்று சந்தித்துக் கலந்துரையாடிய போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அங்கு அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு.

பெயர்ப்பட்டியலிலிருந்து நீக்கப்பட்ட சில குடும்பங்களுக்கு வீடுகளைத் திருத்துவதற்காக 2 லட்சம் ரூபா மீள் குடியேற்ற அமைச்சால் வழங்கப்படும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. தகரக்கொட்டில்களில் வசிக்கும் அக்குடும்பங்களுக்கு இந்த நிதி போதுமானதாக இல்லை.

இப்பிரதேசத்தில் இவ்வீட்டுத் திட்டத்துக்கான பதிவு செய்யப்பட்ட 39 குடும்பங்களைத் தவிர, மேலதிகமாக 21 குடும்பங்களுக்கு வீட்டு வசதி தேவைப்படுகிறது. இந்தக் குடும்பங்களுக்கு வீட்டு வசதியை ஏற்படுத்திக் கொடுப்பதற்கான நடவடிக்கை எடுக்குமாறு மாவட்ட அரசாங்க அதிபர் பி.எஸ்.எம்.சார்ள்ஸிடம் கேட்டிருந்தேன்.

இதற்குப் பதிலளித்த அரசாங்க அதிபர், 21 குடும்பங்களின் நிலைமையையும் அவதானித்து, வீட்டுத்திட்டம் தேவைப்படுவோரை மீள்குடியேற்ற அமைச்சின் வீட்டுத் திட்டத்துக்குள் உள்வாங்குவதற்கான நடவடிக்கை மேற்கொள்வதற்குப் பணித்துள்ளதாகவும் கூறினார்.- என்றார்.

# ஏனைய சிறுபான்மை சமூகத்துக்கு கிடைக்கும் நன்மைகளை தடுக்கக்கூடாது

## நாடாளுமன்றில் சக எம்.பிக்களிடம் அமைச்சர் ரிஷாத் வேண்டுகோள்

கொழும்பு, நவ.26

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணவேண்டும் என குரல் கொடுப்பவர்கள் இன்னுமொரு சிறுபான்மை சமூகத்திற்குக் கிடைக்கும் நன்மைகளை தடுக்கும் விதத்தில் செயற்படக்கூடாது என அமைச்சர் ரிஷாத் பதியுதீன் கேட்டுக்கொண்டுள்ளார்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் நிர்வாகத்தின் கீழான அமைச்சுக்கள், கமத்தொழில் அமைச்சுக்கள் மற்றும் நீர்ப்பாசன அமைச்சு ஆகியவற்றின் குழுநிலை விவாதத்தில் பங்கேற்று நேற்று முன்தினம் நாடாளுமன்றத்தில் உரையாற்றிய போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

மன்னார் மாவட்டத்தில் யுத்தத்தின் காரணமாக சேதமடைந்த



அகத்திமுறிப்புக் குளம், வியாயடிக்குளம் ஆகியவற்றைப் புனரமைப்பதன் மூலம் மன்னார் மாவட்ட விவசாயச் செய்கையை மேம்படுத்த முடியும்.

இந்தக் குளங்களை பராமரிப்பதற்காக பிரதான பொறியியலாளர் அலுவலகமொன்றையும் நிர்வாகப் பொறியியலாளர் அலுவலகமொன்றையும் அமைத்துத் தருமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

எனினும் இந்தக் கோரிக்கையை இனவாதமாக நோக்கி இதனை தடுக்கும் நோக்குடன் நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் கருத்து வெளியிட்டிருந்தார். இது வேதனைக்குரிய விடயமாகும்.

அத்துடன் மறிச்சுக்கட்டி, பாலைக்குழி, கரடிக்குழி ஆகிய பகுதிகள் வர்த்தமானி அறிவித்தலின் மூலம் வனவளமாக பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.

பிரதேச செயலாளர்கள், கிராம சேவையாளர்கள், காணி உரிமையாளர்கள் ஆகியோரின் கருத்துக்களை பெற்றுக்கொள்ளாமல் மேற்கொள்ளப்பட்ட இந்த வர்த்தமானிப் பிரகடனத்தை மீள்பரிசீலனை செய்யுமாறும் அமைச்சர் ரிஷாத் பதியுதீன் கேட்டுக்கொண்டுள்ளார். (கு)

# ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் நிலைப்பாட்டில் மாற்றமில்லை!

## அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவிப்பு

கொழும்பு, நவ.26

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி 1972 ஆம் ஆண்டில் அரசமைப்பு உருவாக்கும் போது கொண்டிருந்த நிலைப்பாட்டையே தற்பொழுதும் கொண்டுள்ளது என அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்துள்ளார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைமைக் காரியாலயத்தில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

ஐக்கிய இலங்கை, மக்களின் ஆணையை பாதுகாத்தல் உள்ளிட்ட முக்கிய விடயங்களில் சுதந்திரக் கட்சி 1972 ஆம் ஆண்டு கொண்டிருந்த நிலைப்பாட்டில் மாற்றங்கள் கிடையா.



மத்திய வங்கி பிணை முறி மோசடிகள் தொடர்பில் நடவடிக்கை எடுப்பது குறித்து ஜனாதிபதிக்கு பரிந்துரை செய்யப்பட்டுள்ளது.

கோப் குழு அறிக்கை உள்ளிட்ட ஆவணங்களைக்கொண்டு துரித கதியில் வழக்குத் தொடர்வது சாத்தியமாகாது.

எனவே, ஜனாதிபதி ஆணைக்குழு ஒன்றை நிறுவி அதன் ஊடாக விசாரணை நடத்துவதன் மூலம் துரித கதியில் நடவடிக்கை எடுக்கப்பட முடியும் என அவர் குறிப்பிட்டுள்ளார். (கு)

# சஷி வீரவன்சவின் வழக்கு ஒத்திவைப்பு

கொழும்பு, நவ.26

விமல் வீரவன்சவின் மனைவி, சஷி வீரவங்சவின் வழக்கு எதிர்வரும் பெப்ரவரி 8ஆம் திகதி ஒத்திவைக்கப் பட்டுள்ளது.

இந்த வழக்கு நேற்று விசாரணைக்கு எடுத்து கொள்ளப்பட்ட போதே கொழும்பு பிரதான நீதிவான் இந்த உத்தரவைப் பிறப்பித்துள்ளார்.

இதேவேளை, போலி ஆவணங்களைக் கொண்டு கடவுச்சீட்டு தயாரித்தார் என்ற குற்றச்சாட்டு தொடர்பில் விமல் வீரவன்சவின் மனைவி, சஷி வீரவன்ச மீது குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

அண்மையில் இந்த வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போது,

1967 ஆம் ஆண்டு பெப்ரவரி முதலாம் திகதி மற்றும் 1971 ஆம் ஆண்டு பெப்ரவரி மூன்றாம் திகதி என இருவேறு பிறந்த



தினங்களில், இரண்டு தேசிய அடையாள அட்டைகள் விநியோகிக்கப்பட்டுள்ளன என்றும் ஆள்பதிவுதிணைக் களத்தின் உதவி ஆணையாளர் இந்திக ஹேரத் நீதிமன்றத்தில் சாட்சியமளித்திருந்தார்.

ஆனால், விமல் வீரவன்சவின் மனைவி குற்றத்தை ஒப்புக் கொள்ளவில்லை.

இதன் காரணமாக, இந்த வழக்கு நேற்றைய தினம் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (கு)

# 'லங்கா ஈ நியூஸ்' இணையத்தளத்தின் ஆசிரியருக்கு சர்வதேச பிடியாணை

கொழும்பு, நவ.26

நீதிமன்றத்தை அவமதித்த குற்றச்சாட்டுக்காக லங்கா ஈ நியூஸ் இணையத்தளத்தின் ஆசிரியரான சந்தருவான் சேனாதீரவுக்கு சர்வதேச பிடியாணை வழங்கி நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

நாட்டின் நீதித்துறைக்கு அபகீர்த்தி ஏற்படுத்தும் வகையில் செய்திகளை வெளியிட்டு வருவதாலேயே நீதிமன்றத்தினூடாக, பிரித்தானியாவில் வசிக்கும் சந்தருவன் சேனாதீரவை கைதுசெய்ய பிடிவிறாந்து பெற்றுக்கொள்ளப்படும் என நீதியமைச்சர் விஜேதாஸ ராஜபக்ஷ அண்மையில் நாடாளுமன்றத்தில் வைத்து அறிவித்திருந்தார்.

இதற்கமைய கும்பஹா நீதிவான் நீதிமன்றத்தில் தொடரப்பட்ட வழக்கு நேற்றைய தினம் நீதிவான் காவிந்தியா நாணயக்கார முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

ரிவிர பத்திரிகையின் முன்னாள் ஆசிரியரான உபாலி தென்னகோன் மீது நடத்தப்பட்ட தாக்குதல் தொடர்பாக கைது செய்யப்பட்ட சந்தேக நபரை அடையாளம் காணும் அணிவகுப்புக்கு அனுப்புவதற்கு முன்னதாக அவரது புகைப்படங்களை லங்கா ஈ நியூஸ் இணையத்தளம் வெளியிட்டிருந்தது.


இது நீதிமன்றக் கட்டமைப்பை சவாலுக்கு உட்படுத்தும் செயற்பாடு என்ற குற்றச்சாட்டு லங்கா ஈ நியூஸ் இணையத்தள ஆசிரியருக்கு எதிராக முன்வைக்கப்பட்டுள்ளது.

இதனைக் கருத்திற்கொண்ட நீதிவான், லங்கா ஈ நியூஸ் இணையத்தள ஆசிரியர் நாடு திரும்புகையில் விமான நிலையத்தில் வைத்து கைது செய்யும்படி உத்தரவிட்டதோடு அவரைக் கைது செய்வதற்காக சர்வதேச பிடியாணையையும் பிறப்பிப்பதாக அறிவித்தார்.

இதேவேளை சிங்கள இனவாதக் கருத்துகளுக்கு முன்னுரிமை கொடுத்து குறித்த இணையத்தளம் செய்திகளை வெளியிட்டுவருவதாக நீதியமைச்சர் விஜேதாஸ ராஜபக்ஷ நாடாளுமன்றத்தில் வைத்து குற்றம் சுமத்தியிருந்தார்.

இந்த நிலையில் நீதித்துறையையும், குறிப்பாக நீதிபதிகளையும் மேற்படி இணையத்தளம் விமர்சித்துவருவதாகவும் அமைச்சர் குற்றம்சாட்டியிருந்தமை குறிப் பிடத்தக்கது. (கு-1)

# பம்பலப்பிட்டி விபத்தில் இளைஞர் பலி



கொழும்பு, நவ.26

கொழும்பு, பம்பலப்பிட்டி பகுதியில் இடம்பெற்ற வாகன விபத்தில் இளைஞர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

நேற்றுமுன்தினம் இரவு 10 மணியளவில் பம்பலப்பிட்டியிலிருந்து வெள்ளவத்தை நோக்கிச் சென்று கொண்டிருந்த மோட்டார் சைக்கிளொன்று சாரதியின் கட்டுப்பாட்டை இழந்து பாதையை விட்டு விலகி விபத்துக்குள்ளாகியுள்ளது.

இந்த விபத்தின்போது மோட்டார் சைக்கிளில் பயணித்த இருவர் படுகாயமடைந்த நிலையில் களுபோவில வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர்.

சிகிச்சை பயனளிக்காத நிலையில், மட்டக்குளி பிரதேசத்தைச் சேர்ந்த 20 வயதுடைய இளைஞர் ஒருவர் உயிரிழந்துள்ளார். மற்றவர் தொடர்ந்தும் சிகிச்சை பெற்று வருகிறார் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

விபத்து தொடர்பாக பம்பலப்பிட்டி பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (கு)

# கணினித் தொகுதி செயலிழந்ததால் கட்டுநாயக்க விமான நிலையம் முடக்கம்



கட்டுநாயக்கா, நவ.26

கட்டுநாயக்க விமான நிலையத்தின் கணினிக் கட்டமைப்பில் ஏற்பட்ட தொழில்நுட்பக் கோளாறு காரணமாக, விமான நிலையச் செயற்பாடுகள் இரண்டரை மணி நேரம் முடங்கிப் போனதாக தெரிவிக்கப்படுகிறது.

நேற்று முன்தினம் பிற்பகல் கட்டுநாயக்க விமான நிலைய கணினி கட்டமைப்புத் தொகுதி திடீரெனச் செயலிழந்தது.

இதனால், குடிவரவு, குடியகல்வு நடவடிக்கைகள் பாதிக்கப்பட்டன. இதனால் பயணிகள் வெளிச் செல்ல முடியாமலும், விமானங்களுக்கு அனுமதிக்கப்படாமலும் நீண்ட நேரம் வரிசையில் காத்திருக்க நேரிட்டுள்ளது.

இரண்டரை மணிநேரத்துக்குப் பின்னர், மாலை 5.45 மணியளவில் கணினி கட்டமைப்பு மீண்டும் செயற்படத் தொடங்கிய பின்னரே, நிலைமை வழமைக்குத் திரும்பியுள்ளது.

இதனால் விமானங்களின் புறப்பும் நேரத்திலும் தாமதம் ஏற்பட்டதாக விமான நிலையத் தகவல்கள் தெரிவிக்கின்றன. (கு)

# கனகபுரம் மாவீரர் துயிலும் இல்லத்தில் சிரமதானம்
















கிளிநொச்சி, நவ.26

கிளிநொச்சி கனகபுரம் மாவீரர் துயிலும் இல்லத்தில் நேற்று வெள்ளிக்கிழமை சிரமதானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. காலை ஏழு மணி முதல் நண்பகல்வரை இந்தச் சிரமதானம் இடம்பெற்றது.

சில மாதங்களுக்கு முன்னர் துயிலும் இல்லத்தில் இருந்த படையினர், அந்த இடத்தை விட்டு வெளியேறியுள்ளனர்.

இந்த நிலையில் அந்தக் காணி பற்றைகளால் சூழப்பட்டு, எருக்கலம் செடிகளால் நிறைந்து காணப்பட்டது. அங்கு இருந்த கல்லறைகள் மற்றும் நினைவுக்கல் என்பன படையினரால் இடித்து ஒதுக்கப்பட்டும் காணப்பட்டன.

கடந்த சில வருடங்களுக்கு முன் கரைச்சி பிரதேச சபையில் ஆளும் கட்சி பிரதேச சபை உறுப்பினராக இருந்த ஒருவர் மாவீரர் துயிலும் இல்லத்தில் சிரமதானம் செய்ய வேண்டும் என்று தீர்மானம் கொண்டு வந்த மறுநாள் படையினர் துயிலுமில்ல காணியை பிடித்து இரண்டு அடுக்கு முற்கம்பி வேலிகள் அமைத்து கடந்த ஒரு சில மாதங்கள் முன்வரை தங்களுடைய கட்டுப்பாட்டில் வைத்திருந்தனர்.

தற்போது படையினர் வெளியேறிய பின்னர் இந்தச் சிரமதானப் பணிகள் இடம்பெற்றுள்ளன.

இதன்போதுநூற்றுக்கணக்கானவர்கள் கலந்து கொண்டு உணர்வுபூர்வமாகத் துப்பரவு பணிகளில் ஈடுபட்டிருந்தனர். எவ்வித அசம்பாவிதங்களோ, நெருக்கடிகளோ இன்றி சிரமதானப் பணிகள் இடம்பெற்றன. (ஐ-70)

# இது என்ன வயலா? போக்குவரத்துப் பாதையா?



தர்மபுரம், சுண்டிக்குளம் சந்தியில் இருந்து நாச்சிக்குடா செல்லும் பாதை தான் இது. மழை பெய்தால் வெள்ளம் பெருக்கெடுத்து ஆறாக ஓடும். இந்த வயல் போன்ற பாதையூடாகவே மாணவர்கள், வயோதிபர்கள் மற்றும் கடமைக்குச் செல்வோரும் பயணிக்கின்றனர். அவர்களின் பாடு பெரும்பாடு.

இது குறித்து உரிய அதிகாரிகள் கவனம் எடுப்பார்களா.? (இ-12)

# ஆனையிறவு உப்பளத்தை தனியார் மயமாக்க எதிர்ப்பு

## ஊழியர்களும் தொழிலாளர்களும் தெரிவிப்பு

கிளிநொச்சி, நவ.26

ஆனையிறவு உப்பளத்தைத் தனியார் மயமாக்குவதற்கு அரசு முயற்சிப்பதாக வெளியான செய்திகளை அடுத்து, உப்பளத்தின் ஊழியர்களும் தொழிலாளர்களும் அயல் பிரதேசங்களைச் சேர்ந்த மக்களும் தமது எதிர்ப்பை வெளியிட்டுள்ளனர்.

இந்த விடயம் தொடர்பான ஏற்பாட்டுக் கூட்டம் இயக்கச்சியில் இடம்பெற்றது.

பரந்தன், குமரபுரம், உமையாள்புரம், தட்டுவன்கொட்டி, இயக்கச்சி, சங்கத்தார்வயல், கோயில்வயல், முகாவில், மாசார், சோரன்பற்று, பேரலை ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்த மக்கள் பிரதிநிதிகளும் தொழிலாளர்களும் ஊழியர்களும் இதில் கலந்து கொண்டனர்.

அரசின் வரவு, செலவுத் திட்ட அறிவிப்பில் நஷ்டத்தில் இயங்கும் கூட்டுத்தாபனங்களைத் தனியார் மயப்படுத்தவுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனை அடுத்து, ஆனையிறவு உப்பளத்தையும் அவ்வாறு தனியார் மயப்படுத்துவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன என்று தெரிய வந்துள்ளது. இதனையடுத்தே தமது எதிர்ப்பை வெளியிட்டுள்ளனர்.

இந்தக் கூட்டத்தில் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சந்திரகுமார் முருகேசு, பச்சிலைப்பள்ளிப் பிரதேச சபையின் முன்னாள் உறுப்பினர் அன்ரன் அன்பழகன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

உப்பளத்தைத் தனியார் மயமாக்குவதால் ஏற்படும் பாதிப்புகள் பற்றியும் தொழிலாளர்களுடைய உரிமைக்கான போராட்டம் பற்றியும் இதன்போது கலந்துரையாடப்பட்டது. (ஐ-7)

# சிறுவர்கள் வெள்ளத்தில் விளையாட அனுமதிக்காதீர்!

கிளிநொச்சி, நவ.26

கிளிநொச்சி மாவட்டத்தில், மழை வெள்ளம் தேங்கியுள்ள இடங்களிலும் குழிகள் காணப்படும் இடங்களிலும், சிறுவர்களைச் செல்வதற்கு அனுமதிக்க வேண்டாம்.

இவ்வாறு கிளிநொச்சி சுகாதார திணைக்களம் அறிவுறுத்தல்கள் வழங்கி வருகின்றது.

வீடு வீடாகச் செல்லும் குடும்பநல மருத்துவ மாதுக்கள் மற்றும் உத்தியோகத்தர்கள், மழை காலத்தில் ஏற்படும் ஆபத்துக்கள் தொடர்பில் அறிவுறுத்தல்களை வழங்கி வருகின்றனர்.

மீள் குடியேற்றத்தின் போது, ஒவ்வொரு வீட்டுத் திட்டத்துக்குமாகத் தோண்டப்படும் குழிகளில், தற்போது மழை நீர் தேங்கியுள்ளது.

இதனைக் காணும் சிறுவர்களுக்கு அதற்குள் இறங்கி விளையாடுவதற்கு எண்ணம் தோன்றும். இவ்வாறான செயற்பாடுகள் மூலம், உயிராபத்துக்கள் ஏற்படுவதற்கான வாய்ப்புக்கள் அதிகமாகும்.

இதேபோன்ற சம்பவங்கள் கடந்த மழைக் காலங்களில் இடம்பெற்றுள்ளது.

எனவே, இவ்வாறான பகுதிகளுக்கும் வான் வெள்ளம் பாயும் பகுதிகளுக்கும் சிறுவர்களை அனுமதிக்க வேண்டாம் என்று தெரிவித்து வருகின்றனர். (ஐ)

# 'கீரிகளின் சண்டையின் இறுதியில் இராச கீரியே வரும்!'—சிவாஜிலிங்கம் தற்புகழ்ச்சி

யாழ்ப்பாண மாநகர சபை எல்லைக்குள் வரியிறுப்பாளராகவுள்ள வடமாகாண சபை உறுப்பினர்கள் வேறு பலர் இருந்தும் மாநகர சுத்திகரிப்புத் தொழிலாளர் வேலை நிறுத்த விவகாரத்தில் சிவாஜிலிங்கம் தலையிட்டு சில வாக்குறுதிகளைக் கொடுத்து போராட்டத்தை முடிவுக்குக் கொண்டு வந்த விதம் பற்றி மாகாண சபை உறுப்பினர்கள் விவாதித்தனர்.

அப்பொழுது சிவாஜிலிங்கம் தலையிட்டு போராட்டத்தை முடிவுக்குக் கொண்டு வரும் தருணத்திற்கு முன்னதாக தொழிலாளர்கள் தன்னைத்தலையிடுமாறு கோரியிருந்தனர் என்றும்-.

ஆனால் அவ்விடயத்தில் பொறுப்புச்சொல்ல வேண்டியவர்கள் மாகாண சபைக்குள் வேறு ஆட்கள் இருக்கும் போது தன்னால் அது முடியாது எனத் தான் கூறிவிட்டார் என்றும் சபைத் தலைவர் சிவஞானம் கூறினார்.

போராட்டத்துக்கு தீர்வு வழங்காமல் வேறு உள்ளூராட்சி சபைகளின் தொழிலாளர்களை அழைத்து வந்து துப்புரவுப் பணியை ஆரம்பிக்க முற்பட்டமையும் பொலிஸாரை வரவழைத்தமையும் தவறு என்றும் எவ்வாறு தொழிலாளர் உரிமைக்கு மதிப்புக் கொடுத்து தொழிற்சங்க சர்ச்சைகளைத் தீர்ப்பது என்பதை



அறியாமல் சிலர் செயற்பட்டுள்ளார்கள் எனவும் சிவஞானம் விமர்சித்தார்.

''மாநகர எல்லைக்குள் வரியிறுப்பாளர்களாகவுள்ள மாகாண சபை உறுப்பினர்கள்- நான் உள்பட பலர் இருந்தும் -இவ்விடயத்தில் உரிய ஆலோசனையோ கருத்துப் பகிர்வையோ நடவடிக்கை எடுத்தவர்கள் தம்முடன் மேற்கொள்ளவில்லை'' எனவும் சிவஞானம் கரிசனையும் கவலையும் வெளியிட்டார்.

சிவாஜிலிங்கம் எவ்வாறு தலையிட முடிந்தது என மறைமுகமாக கேள்வி எழுப்பிய மாநகர சபை எல்லைக்குள் வசிக்கும் உறுப்பினர்கள், கொடுத்த வாக்குறுதிகளை உரிய காலப்பகுதியில் நிறைவேற்றாவிட்டால் சிவாஜிலிங்கம் சிக்கலுக்குள் மாட்டுவார் எனவும் சுட்டிக் காட்டினர்.

''கீரிகளின் சண்டையின் இறுதியில் இராச கீரியே வரும்'' என்று பதிலடி கொடுத்தார் சிவாஜிலிங்கம். (உ)

# 3 வருடங்களாக எதையும் வெட்டி வீழ்த்தவில்லை!


## அவைத் தலைவர் சி.வீ.கே.விசனம்

சபை ஒத்திவைக்கும் இறுதி நிமிடத்தில் வெறுந் தீர்மானங்கள் நிறைவேற்றும் வடமாகாண சபையின் மூன்று வருடகால நடவடிக்கைகள் பற்றி சுய விமர்சனம் செய்தார் அவைத் தலைவர் சி.வி.கே.சிவஞானம்.

''சில நாடுகளில் உள்ள சாமிக் கூட்டங்கள் 'இந்தா உலகம் அழியப் போகிறது'', ''அந்தா உலகம் அழியப் போகிறது'' என்று மிரளுவது போல அங்கத்தவர்கள் தீர்மானங்களை அள்ளி சபைக்கு அனுப்புவதை டிசெம்பர் 6 ஆம் திகதி கூட்டத்திலாவது நிறுத்திக் கொள்ள வேண்டும்.

ஏனெனில் அத்தினத்தை முற்றிலுமாக நியதிச் சட்டங்களின் 2 ஆம், 3ஆம் வாசிப்புக்கும் விவாதத்துக்குமென ஒதுக்கவேண்டியுள்ளது. இன்றைய கூட்டத்தில் எந்த நியதிச்சட்டங்களையும் எடுக்க முடியவில்லை. ஏதோ உங்கள் தீர்மானங்கள் நிறைவேறாவிட்டால் என்னையும் சேர்த்துத்தான் சொல்கிறேன் வடமாகாணம் தொலைந்துவிடும் போல என எண்ணாதீர்கள் - உலகம் அழியப்போகுது என மிரளும் சாமிக் கூட்டம்போல தீர்மானங்களை எதிர்வரும் டிசம்பர் கூட்டத்துக்கு அனுப்பாதீர்கள். அனுப்பிவிட்டு கத்திக் குளறாதீர்கள். 3 வருடமாக எதை வெட்டி வீழ்த்தினோம்?'' எனக் கடுப்பாக வார்த்தைகளைக் கொட்டினார் அவைத் தலைவர்.

இடையிலே ஊடறுத்த சிவாஜி



லிங்கம் ''அப்படிச் சொல்லாதீர்கள் நியதிச் சட்டத்துக்கு ஒரு நாளை ஒதுக்குவது போல தீர்மானங்கள் நிறைவேற்றவும் நேரம் தர வேண்டும். முக்கியமான பிரச்சினைகள் தொடர்பான தீர் மானங்களை கைவிட முடியுமா?'' என்றார்.

வடமாகாண அடைவு பிடிப்போர் நிய திச்சட்டம், வடமாகாண கனியவள வரிநியதிச்சட்டம், வடமாகாண நீதிமன்ற குற்றப் பணங்கள் மற்றும் தண்டப் பணங்கள் கைமாற்றுவதற்கான நியதிச் சட்டம் ஆகியவற்றின் முதலாம் வாசிப்பு-

வடமாகாண சுதேச மருத்துவ திணைக்கள நியதிச்சட்டம்,சுற்றுலாப் பயணத்துறை அதிகாரசபை நியதிச் சட்டம் ஆகியவற்றின் 2 ஆம், 3 ஆம் வாசிப்பு மற்றும் அங்கீகாரம் ஆகியன வியாழனன்று ஒழுங்குப் பத்திரத்தில் இடம்பெற்றிருந்தன.

''ஆனால் வேறு விடயங்களில் விவாதங்கள் நடந்ததால் அன்று மாலை 4 மணியாகியும் ஒரு நியதிச்சட்டம் கூட வாசிப்புக்கு எடுக்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (உ)

# மாநகர சுத்திகரிப்பு ஊழியரின் போராட்டம் குறித்து விவாதம்

## வடக்கு மாகாண சபையின் அமர்வில்

யாழ். மாநகர சுத்திகரிப்பு ஊழியர்களின் பணி மறுப்புப் போராட்டம் மற்றும் அதனால் நகரில் எழுந்த சுகாதாரச் சீர்கேட்டுப் பிரச்சினை ஆகியவை தொடர்பாக பெற்ற வடக்கு மாகாண சபையின் அமர் வில் விவாதிக்கப்பட்டது. இவ்விடயம் தொடர்பாக சபை உறுப்பினர் அ.பரஞ்சோதி பிரேரணை ஒன்றை முன் வைத்தார்.

நிரந்தர நியமனங்கள் கோரியும், பதவி உயர்வு கோரியும் தொழிலாளர்கள் நடத்திய போராட்டம் பொருத்தமானதென அப் பிரேரணையில் அ.பரஞ்சோதி சுட்டிக்காட்டினார். பல தடவை உள்ளூராட்சி அமைச்சுக்கும், உள்ளூராட்சித் திணைக்களத்துக்கும் நிரந்தர நியமனம் கோரி தொழிலாளர்கள் தெரியப்படுத்தியும் எவ்வித நடவடிக்கைகளுக்கும் எடுக்கப்படாமை சபையில் சுட்டிக்காட்டப்பட்டது.

மேலும் மாநகர எல்லைக்கு வெளியே இருந்து தொழிலாளர்களை சேவைக்கு அழைத்தமை தொடர்பாகவும் விவாதிக்கப்பட்டது. இதன்போது கருத்துத் தெரிவித்த உறுப்பினர் சிவாஜிலிங்கம்-

இன்னும் மூன்று மாதங்களில் படிப்படியாக தொழிலாளர்களின் நியமனங்கள் வழங்கப்படாத விடத்து அவர்கள் முன்னெடுக்கும் போராட்டங்களைத் தானே முன்னின்று தலைமை தாங்கி நடத்துவார் என்றார். தொழிலாளர்களுக்கான பிரத்தியேக சீருடைகள், உரிய முறையில் திண்மக் கழிவுகளை அகற்றும் வாகனங்கள், அவர்களின் சுகாதார நலன்கள், ஊதியங்கள், சரியான கடமை நேரம் ஆகியன தொடர்பாகவும் வலியுறுத்தப்பட்டது. (உ)

# சுத்திகரிப்புத் தொழிலாளர் ஆளணி அதிகரிக்கக் கோருகின்றார் விந்தன்!

தற்காலத்தில் முன்னரிலும் பார்க்க யாழ்.மாநகர சபைக்குள் கட்டடங்களும் வாகனப் போக்குவரத்தும் சனநெரிசலும் அதிகரித்துவிட்டன. ஆனால் அதற்கு ஏற்ப சுத்திகரிப்பு தொழிலாளர் தொகை அதிகரிக்கவில்லை. முதலமைச்சரும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளும் இணைந்து ஆளணியை அதிகரிக்க வேண்டும். மத்திய அரசின் முகாமைத்துவ சேவைத் திணைக்களத் திடமிருந்து அதற்கான அனுமதியைப் பெற்று உடனடியாக தொழிலாளர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்க வேண்டும் என விந்தன் வலியுறுத்தினார்.

பதிலளித்த முதலமைச்சர், ஏற்கனவே முகாமைத்துவ சேவைத் திணைக்களம் ஆளணி உருவாக்கம் செய்ய அனுமதிக்க முடியாது என்று தெரிவித்திருந்தது. ஆனால் நாங்கள் தொடர்ந்து முயற்சிக்கிறோம் என்றார்.




வடக்கு மாகாண சபையில் வியாழன் நடந்த விவாதம்

தொகுப்பு– வேலவன்

# அதிபர் நியமனங்களில் இழுபறி: அவைத் தலைவர் பெரும் விசனம்!

அதிபர் விவகாரம் தொடர்பான விவாதத்தின்போது அவைத் தலைவர் மாகாணசபையின் இழுத்தடிப்புக்கும் தாமத் துக்கும் கண்டனம் தெரிவித்துள்ளார்.

''குறிப்பிட்டதொரு சேவைப் பிரமாணக் குறிப்பை இரண்டரை வருடங்களாகியும் எழுதி முடிக்காமல் பிணைந்து கொண்டிருக்கிறார்கள். என்னிடம் தாருங்கள் ஒன்றரை நாளில் எழுதித் தருகின்றேன்.'' என்று சவால் விட்ட அவைத் தலைவர்,

நிரந்தர நியமனம் பெற்ற அதிபர்களா? அல்லது கடமை நிறைவேற்று அதிபர்களா? எனும் இழுபறியிலும் நிர்வாகச் செயன் முறையைச் சரியாக பின்பற்றியிருந்தால் பிரச்சினைக்கான தீர்வு இலகுவாகியிருக்கும் எனச் சுட்டிக்காட்டினார்.

யாழ். மாநகரசபைஊழியர்களின் நிரந்தர நியமன விடயத்திலும் இவ்வாறுதான் தாமதங்களும், கருங்காலித்தனங்களும் இடம்பெறுவருகின்றன எனக் கவலை வெளியிட்டார்.

அதிபர்களுக்கு மத்திய அரசு நியமனக் கடிதம் கொடுத்தும் வட மாகாண சபையால் பாடசாலைகளில் நிலைப்படுத்த முடியாமல் இருந்தது ஏன் என்று அவைத் தலைவர் சிவஞானம் கேள்வி எழுப்பினார்.

''அதிபர் பரீட்சைமூலம் தெரிவு செய்யப்பட்டோர் பயிற்சி முடிந்து மத்திய அரசின் நியமனக் கடிதத்தை பெற்றுவிட்டனர். ஆனால் மாகாண சபையால் அவர்களுக்கு பாடசாலையைகொடுத்து அப்பதவியில் நிலைப்படுத்த (posting) முடியவில்லையே. பாடுபட்டுப் படித்து அதிபர் தேர்வில் சித்தியடைந்துதெரிவானோருக்கு எதிர்பார்ப்பு இருக்கும்.

ஆனால் கடமை நிறைவேற்றுஅதிபர் விவகாரத்தைக் காரணம் காட்டி அதிபர் நியமனம் முறைப்படி பெற்றவர்களுக்கு உரிய பாடசாலைகளைக் கொடுத்து அவர்களை பதவியில் நிலைப்படுத்த முடியாமல் உள்ளமை கவலைக்குரியது. 2012 வரை கடமை நிறைவேற்று அதிபராக இருந்தோருக்கு அதிபர் சேவை நியமனம் வழங்கப்பட்டிருந்தது.

அவ்வாறெனில் இனியும் கடமை நிறைவேற்று அதிபர் நியமனம் தொடர்பான பிரச்சினை எப்படி எவ்வாறு இழுபடுகிறது? அதிபர் சேவை பிரமாணக் குறிப்பின்படி கடமை நிறைவேற்று அதிபர்களை நிரந்தர அதிபர் சேவைக்கு உள்வாங்க முடியாது. நிறைவேற்று கடமையெனும் பதில் கடமையில் இருக்கும் எந்த உத்தியோகத்தரும் சேவைக்கு உரிய தகுதி தராதரத்துடன் நிரந்தர ஆளணி தெரிவு செய்யப்படாமல் தமது முன்னைய கடமைக்கு திரும்புதலே வழமை.

ஆனால் இந்த மாகாணத்தில் ஏன் இவ்வாறு இழுபறிப்படுகிறீர்கள்? நிரந்தரநியமனம் கிடைத்த அதிபர்களின் ஒரு பகுதியினரை முறைப்படி அழைத்து உரியமுறையில் பாடசாலைகளில் பதவி நிலைப்படுத்தியபிறகு, ஒரு கிழமைக்குள் அதனை இரத்துச் செய்துள்ளீர்கள். இதுவேபெரும் குழப்பமாகும். கடமை நிறைவேற்று அதிபர்களுக்கும் எதிர்பார்ப்பு இருக்கலாம்.

ஆனால் உரிய பரீட்சையை எடுத்து தெரிவானமத்திய அரசாங்கத்தால் நியமனம் பெற்ற தாரதரம் மிக்க அதிபர்களை எவ்வாறு அலைக்கழிக்க முடியும்? நிரந்தர நியமனம் பெற்றவர்களில் பிரதி அதிபர்களாக இருக்கவிரும்புவோர், பகுதித் தலைவர்களாக இருக்கவிரும்புவோர், தொடர்ந்தும் வழமையான ஆசிரியர்களாக வகுப்பறை கற்பித்தல் செய்ய விரும்புவோர், என பல வகைத் தெரிவுகளை உடையோர் உள்ளனர். அவர்களை இனம்கண்டு ஒழுங்கு படுத்தி அதற்கேற்ப பாடசாலைகளில் அவர்களைப் பதவி நிலைப்படுத்தினால்,கடமை நிறைவேற்று அதிபர்களுக்கும், நிரந்தர நியமனம் பெற்ற அதிபர்களுக்கும் இடையில் நிலவும் முரண்பாடுகளை இலகுவில் தீர்க்கமுடியும். அடுத்து நடைபெறவுள்ள கல்விக்குழுவின் ஆலோசனைக் கூட்டத்தில் எப்படித் தீர்வுகாண்பது எனும் முடிவை எடுங்கள்'' எனத் தெரிவித்தார் சி.வீ.கே. (உ)

14

# “ஓ! அமெரிக்கா ...!! எங்கே போகிறாய்...?”

பொன்.வேணு கிருஷ்ணா


## ட்ரம்பின் கொள்கையாளர்கள் முஸ்லிம்களைப் பதிவு செய்தல் பற்றி விவாதிக்கின்றனர்

நவம்பர் 22. 2016 இல் வெளியான Los Angeles Times பத்திரிகையின் பிரதான செய்தியின் தலைப்பு கீழே தரப்படுகிறது.

Trump shifts on at least 3 prominent issues: Climate, torture and prosecution of Clinton( காலநிலை, சித்திரவதை, ஹிலாரி கிளிண்டன் மீது வழக்குத் தொடுத்தல் ஆகிய 3 விடயங்களிலாவது ட்ரம்ப் தனது முன்னைய நிலைப் பாட்டை மாற்றினார்)

**-Evan Halper Contact Reporter-**


Donald Trump tweaked the script of his transition again Tuesday, appearing to shift his stance on at least three major issues in the course of an afternoon but defending his right to continue involvement in his worldwide businesses despite the potential for conflicts of interest. (காலநிலை, சித்திரவதை, ஹிலாரி கிளிண்டன் மீது வழக்குத்தொடுத்தல் ஆகிய 3 விடயங்களிலாவது ட்ரம்ப் தனது முன்னைய நிலைப்பாட்டை மாற்றினார், ஆனால் நலன்களின் முரண்பாடுகளுக்கான உறுதியான ஏதுநிலைகள் இருப்பினும் சர்வதேச வியாபார நடவடிக்கைகளை தொடர் வதற்கு தனக்கு உரிமை உள்ளது என் பதில் தொடர்ந்தும் உறுதியாகவுள்ளார்,)


Demonstrators shout during a "Freedom of Speech Rally Round II" outside the Islamic Community Center in Phoenix, Arizona, May 29, 2015.


President&elect Donald Trump meets Tuesday with New York Times journalists and executives, including Publisher Arthur Sulzberger Jr., right. (Hiroko Masuike / New York Times)

What seemed to be Trump's ironclad belief that America must withdraw from the international climate change accord reached last year suddenly wasn't so ironclad. He demurred when pressed on whether he would pursue criminal charges against Hillary Clinton - a signature promise of his campaign. And he backed off on his commitment to torturing enemies of state, saying a single conversation with a retired Marine general changed his mind.

ஆனால் இதுவரை முஸ்லிம்கள் தொடர்பான வெறுப்புப் பேச்சுக்களி லிருந்தோ நடவடிக்கைகளிலிருந்தோ ட்ரம்ப் மற்றும் அவரது அலுவலர்கள் இன்னும் பின்வாங்கவில்லை.




Republican presidential candidate Donald Trump, left, looks on as one of his supporter reaches for a sign that reads "Islamophobia is not the answer," at a rally in Oklahoma City, Feb. 26, 2016.

தொலைக்காட்சியில் தோன்றிய ட்ரம்பின் பிரசார செயற்பாட்டாளர், அமெரிக்காவிற்கு வருகைதரும் முஸ் லிம் பார்வையாளர்களை பதிவு செய் தல், இரண்டாம் உலக யுத்தத்தின் பொழுது ஜப்பானிய - அமெரிக்கர்கள் பாரியளவில் கைதுசெய்யப்பட்ட நிலையில் உருவாக்கப்பட்ட முன்னுதாரணத்தின் கீழ் நியாயப்படுத் தப்படக்கூடும் என்றார். ட்ரம்பின் இடைமருவுக் குழுவின் ஒரு தலைவர் அத்தகைய ஒரு பதிவுக்கான சம்பிர தாய முன்மொழிவு விவாதத்தில் இருக்கிறது என்று வெளிப்படுத்தினார்.



புலம்பெயர்ந்தோர் தொடர்பாக வேலைசெய்யும் இடைமருவு அணிக் குழுவின் இணைத் தலைவர், கான் சாஸ் அரசு செயலர் Kris Kobach, ஆலோசனைக் குழுவானது புலம் பெயர்ந்தோர் மற்றும் முஸ்லிம் பெரும் பான்மையாக உள்ள நாடுகளில் இருந்து வரும் விருந்தினர்களின் ஒரு தேசிய பதிவுக்கான ஒரு சம்பிரதாய முன்மொழிவை ட்ரம்ப்பிடம் வைக்க எண்ணியிருந்தது என்று கூறினார். Kobach, புஷ் நிர்வாகத்தின் நீதித் துறையில் ஒரு அலுவலராக இருந்த பொழுது 9/11 தாக்குதல்களுக்கு பின்னர் இதேமாதிரியான ஒரு திட் டத்தை வடிவமைத்திருந்தார்.

தேசிய பாதுகாப்பு நுழைவு-வெளியேறல் பதிவு முறை (NSEERS), உயர் ஆபத்துள்ள நாடுகள் பலவற்றை வரையறுத்ததுடன், இந்த நாடுகளில் இருந்து வரும் விருந்தினர்கள் தொடர்ச் சியான அடிப்படையில் கைரேகை எடுக்கப்படவும், விசாரிக்கப்படவும்,சில விடயங்களில் பொறுப்பாளர்களுக்கு அறிவிக்கப்படவும் முடியும். இந்தத் திட்டம் 94,000 பேர்களை அவ்வாறு





New York Post
WHITES ATTACK TWO SCHOOL BUSES HERE
Mafia


WESTERN DEFENSE COMMAND AND FOURTH ARMY
WARTIME CIVIL CONTROL ADMINISTRATION
Presidio of San Francisco, California
May 22, 1942
INSTRUCTIONS TO ALL PERSONS OF JAPANESE ANCESTRY
Living in the Following Area:

உட்படுத்தியபோதும், தனியொருபயங் கரவாதிகூட இனங்காணப்படாமல் 2011ஆம் ஆண்டில் இடைநிறுத்தப் பட்டது.

ட்ரம்ப் ஆதரவு அரசியல் நடவடிக் கைக் குழுவின் சார்பில் பேசவல்ல பேச்சாளர் புதன்கிழமை ஃபாக்ஸ் நியூஸிடம், வரவிருக்கும் ட்ரம்ப் நிர் வாகம் ஜப்பானியர் தடுப்புக்காவல் திட்டத்தை ஒரு முன்னோடியாக பயன்படுத்தக்கூடும்,


ஏனெனில் அது அமெரிக்க உச்ச நீதிமன்றத்தால் அதன் அவப்பெயர் பெற்ற கோர்மாற்சு முடிவால் (Korematsu decision) உறுதி செய்யப்பட்டிருந் ததுடன், அது ஒருபோதும் தடுக்கப்பட வில்லை என்று கூறிய பின்னர், முஸ்லிம்களை பதிவுசெய்யும் திட்டம் பரந்த அளவு கவனத்தை ஈர்த்ததாக வந்தது.

ஃபாக்ஸ் நியூஸ் நடத்துனர் Megyn Kelly இடம் வழங்கிய நேர்காணலில், முன்னாளைய கடற்படை SEAL மற் றும் மாபெரும் அமெரிக்கா PACக்கான பேச்சாளர் கார்ல் கிக்பி, அமெரிக் காவிற்கு வருகைதரும் அனைத்து முஸ்லிம் பார்வையாளர்களையும் பதிவு செய்வதற்கானத் திட்டமானது,


In Korematsu v. United States, the Supreme Court held that the wartime internment of American citizens of Japanese descent was constitutional. Above, Japanese Americans at a government&run internment camp during World War II.

சட்டபூர் வமானதும், அரசியலமைப்பு ரீதியான மாதிரியை கொண்டிருக்கிறது என்றும் கூறினார்.

சிறிதுகாலத்திற்கு முன்னர் நாம் ஈரானுடன் அப்படிச் செய்தோம். அதனையே நாம் இரண்டாம் உலக யுத்தத்தின் பொழுது ஜப்பானியருடன் செய்தோம் என்றார் அவர்.

Islamic Center of Washington (Washington, District of Columbia)


கெல்லி அம்முன்மொழிவால் அதிர்ச்சியுற்றதாக காணப்பட்டதோடு, அவர் பின்வருமாறு குறிப்பிட்டார். ‘‘கூறுங்கள், தடுப்புமுகாம்கள் காலத் துக்கு நாம் திரும்பிப் போகவேண்டும் என்று நீங்கள் சொல்லவில்லை என நான் நம்புகிறேன்’’ என்றார்.


கிக்பி தொடர்ந்தார், ‘‘நான் முற்றுமாக இதனை முன்மொழியவில்லை. மாறாக அதற்கான முன்னோடி அங்கு இருக் கின்றதென்றுதான் கூறுகிறேன்’’. மேலும் அவர், ‘‘சில முஸ்லிம் விருந் தினர்கள் தீங்கு செய்கின்றனர், ஆகை யால் என்ன நடக்கின்றது என்று நாம் கண்டுகொள்ளும்வரை, நாம் அதன் மீது கவனத்தை வைத்திருக்க விரும்பு கிறோம்’’ என்றார்.


Megyn Kelly




மேலும் கேள்விகளுக்கு பதிலளிக் கையில், கிக்பி, ‘‘விருந்தினர்கள் அமெ ரிக்க அரசியற் சட்டத்தின் கீழ் பாது காக்கப்படவில்லை, ஆகையால் அவர் கள் அமெரிக்க குடிமக்களை பொறுத்த வரை அரசியற்சட்டத்திற்கு விரோத மானதாகவும் ஜனநாயக மற்றதாகவும் இருக்கும் முறைகளின் கீழ் கவனிப் பிற்கு உள்ளாக்கப்படலாம்’’ என்றார்.

(கேள்வி தொடரும்...)





12

# உலக வரலாறும் மனித விடுதலையும்

ஹேகலதும் மாக்ஸினதும் சிந்தனைப் பாரம்பரியத்திலிருந்து மனித வரலாறுபற்றி ஒருபுதியகண்ணோட்டத்தை முன் வைக்கிறார் அமெரிக்க வரலாற்று அறிஞரான பிரான்சிஸ் புக்குயாமா. (Francis Fukuyama). 1989 இல், கம்யூனிச உலகின் சிதைவுக்கான அறிகுறிகள் தென்பட ஆரம்பித்தபோது 'வரலாற்றின் முடிவு' (End of History) என்ற தலைப்பில் சிக்காக்கோ பல்கலைக்கழகத்தில் அவர் நிகழ்த்திய உரை அரசியல் உலகிலும் அறிவுத் துறையிலும் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது. அவரது உரை பின்பு கட்டுரை வடிவத்தில் புலமை சார்ந்த ஏடுகளில் பிரசுரமாகின. அக்கட்டுரையின் பொருளடக்கத்தை விரிவுபடுத்தி,1992ஆம் ஆண்டில் ஒரு நூலை வெளியிட்டார் புக்குயாமா. 'வரலாற்றின் முடிவும் கடைசி மனிதனும்' (The end of history and the last man) என்ற தலைப்பில் அவர் எழுதிய நூல் அனைத்துலக ரீதியில் இன்றும் பெரும் சர்ச்சையைக் கிளப்பி வருகிறது. மனித வரலாறு முடிவுக்கு வந்துவிட்டது எனப் பிரகடனம் செய்யும் புக்குயாமாவின் சிந்தனை பற்றி இங்கு சுருக்கமாகப் பார்ப்போம்.

மானிடத்தின் வரலாறு பற்றி ஹேகலும், காள் மாக்ஸும் தெரிவித்த மையக் கருத்தை புக்குயாமா ஏற்றுக்கொள்கிறார். அதாவது, வரலாறு என்பது மானிட சமூகத்தின் உயர்நிலை வளர்ச்சியை நோக்கிய அசைவியக்கம் என்ற தரிசனம் அவரை வெகுவாகக் கவர்ந்தது. ஆயினும், வரலாற்று ஓட்டத்தின் முடிவு பற்றிய அவர்களது கருத்தை புக்குயாமா ஏற்றுக் கொள்ளவில்லை. நவீன அரசின் தோற்றப்பாட்டுடனும், கம்யூனிச சமூகத்தின் உதயத்துடனும் மனித வரலாறானது பூரணத்துவம் பெற்று முடிவடைகிறது என ஹேகலும் மாக்ஸும் தெரிவித்த கருத்தை அவர் நிராகரித்தார்.

சோசலிசத்தின் சிதைவை முதலாளியத்தின் வெற்றியாகக் காண்கிறார் புக்குயாமா. உள்முரண்பாடுகளால் முதலாளியம் உடைந்து போகாது, வர்க்க முரண்பாடுகளை உள்வாங்கியபடி என்றுமில்லா பெருவளர்ச்சியை நோக்கி முன்னேறிச் செல்கிறது. விஞ்ஞானம், தொழில் நுட்பத்தால் செழுமை பெற்று மேம்பாடு கண்டு அது உலகெங்கும் கிளை பரப்பி விருட்சமாக வளர்கிறது. பொருளுற்பத்தியில் முதலாளியத்துக்கு ஈடாக எந்தவோர் உற்பத்தி வடிவமும் நிலைத்து நிற்கப் போவதில்லை. சோசலிசத்தின் வீழ்ச்சியுடனும் முதலாளித்துவத்தின் எழுச்சியுடனும் மானுட சமூகம் ஒரு நவயுகத்தில்பிரவேசித்துள்ளது என்கிறார் புக்குயாமா.

சமூகப் பொருளுற்பத்தி வடிவங்களின் படிநிலை வளர்ச்சியின் உச்சமாக முதலாளியம் தோற்றம் எடுத்தது. அது போன்றே, அரசியலமைப்பு வடிவங்களின் உச்சக்கட்ட வளர்ச்சியாக ஜனநாயகம், குறிப்பாக தாராண்மை ஜனநாயகம் (Liberal Demo - cracy) உருவாக்கம் பெற்றுள்ளது என்கிறார் புக்குயாமா. மன்னராட்சி என்றும், மத ஆட்சி என்றும், சர்வாதிகார ஆட்சி என்றும், பாசிசம் என்றும், நாசிசம் என்றும், கம்யூனிசம் என்றும் தோற்றம் எடுத்த ஆட்சி அமைப்புக்கள் மனித உரிமைகளுக்கும், மனித சுதந்திரங்களுக்கும் மனித அபிலாஷைகளுக்கும் மதிப்பளிக்கத்தவறியதால் இந்த அரசியல் அமைப்பு வடிவங்கள் இறுதியில் சிதைந்து போயின. இவற்றின் புதை குழியிலிருந்து பிறந்த ஜனநாயக ஆட்சி முறை வளர்ச்சி பெற்று, முதிர்ச்சிபெற்று, நிலைத்து நிற்கிறது.

முன்னேறிய நாடுகளின் உறுதியான அரசியல் அத்திபாரமாக அது இன்று நிமிர்ந்து நிற்கிறது. உலகளாவியதாகப் பரந்து வளர்கிறது. மனித விழுமியங்களுக்கு ஜனநாயகம் மதிப்பளிக்கிறது. மனித தேர்வுச் சுதந்திரத்துக்கு இடமளித்து, மனித அபிலாஷைகளுக்கு ஊக்கமளிக்கிறது. இதனால், ஜனநாயக ஆட்சி முறையை மனிதர்கள் பெரிதும் விரும்புகிறார்கள். மனித சுதந்திரங்களின் நிறுவன வடிவமாக, மனித சமூக வளர்ச்சியின் உச்சக்கட்டமாக தாராண்மை ஜனநாயகம் நிரந்தரமாக நிலைத்து நிற்கப் போகின்றது என்பது புக்குயாமாவின் வாதம்.

அடுத்ததாக முதலாளியத்துக்கும் ஜனநாயகத்துக்கும் ஓர் ஒத்திசைவான வளர்ச்சிப் போக்கு உண்டு என வாதிக்கிறார் புக்குயாமா. ஜனநாயக அரசியல் புறநிலையில்தான் முதலாளிய உற்பத்திமுறை மேம்பாடு காணும். ஏனெனில், ஜனநாயக அரசியல் அமைப்பிலேயே முதலாளியத்தின் வளர்ச்சிக்கு ஏதுவான தனிமனித அபிலாஷைகள் சுதந்திரங்களுக்கு ஊக்கமளிக்கப்படுகிறது என்கிறார் புக்குயாமா.

திறந்த சந்தைப் பொருளாதாரமாக முதலாளியமும், மனித சுதந்திரங்களின் திருவடிவமாக தாராண்மைஜனநாயகமும் ஒன்றிணைந்த வளர்ச்சிப் போக்கு சமூகங்களை நவீனத்துவத்தை (Mod - ernity) நோக்கி நகர்த்தி வருகிறது. இந்த வளர்ச்சிப் போக்கானது மேற்குலகில் நிலையூன்றி வளர்ந்து, மேலும் பல நாடுகளில் பரவி வருகிறது. இது ஒரு தவிர்க்க முடியாத வளர்ச்சிப் போக்கு. இதனால் முழு உலகமுமே நவீன மயமாகிவருகிறது. மானிட சமூகம் ஓர் உன்னதமான உச்சநிலை வளர்ச்சியைக் கண்டுவிட்டது. முதலாளியமும், ஜனநாயகமும் ஒன்றிணைந்து படைத்துள்ள நவீனத்துவ உலகிற்கு அப்பால் மேற்கொண்டுவளர்ச்சி இருக்கப்போவதில்லை. நவீனத்துவம்தான் மானிட சமூக வளர்ச்சியின் எல்லை. எனவே, மானிடத்தின் உயர்நிலை வளர்ச்சிப் போக்காக அந்தப் படிநிலை வளர்ச்சியின் அசைவியக்கமாக செயற்பட்ட வரலாறு நவீனத்துவ யுகத்தின் உதயத்து டன் முடிவுக்கு வந்துவிட்டது. இப்படியாக வரலாற்று இயக்கத்துக்கு முற்றுப் புள்ளி வைக்கிறார் புக்குயாமா.

வரலாற்றின் முடிவு பற்றி புக்குயாமா முன்வைத்த கோட்பாடு பலத்த சர்ச்சைக்கு இலக்காகி வருகிறது. மனித சமூகத்தின் பொருளுற்பத்தியில்-நவீனத்துவ உலகின் உருவாக்கத்தில் - முதலாளித்துவமானது என்றுமில்லாத பெரும் சாதனைகளை ஈட்டியிருக்கிறது என்பது உண்மை. ஆயினும், அதன் வளர்ச்சிப் போக்கு மனித சமூகத்தின் அதியுன்னத நிலையை எட்டி உள்ளது என்பதும் முதலாளியத்துக்கு அப்பால் அடுத்தகட்ட வளர்ச்சி சாத்தியம் இல்லை என்பதும் ஏற்றுக்கொள்ள முடியாது என வாதிடுகிறார்கள் பல அறிஞர்கள். முதலாளியம் மனித சமத்துவத் துக்கு விரோதமானது. மனிதர்களிடையே அது முரண்பாட்டையும் வர்க்க பேதத்தையும் பொருளாதார ஏற்றத் தாழ்வையும் ஏற்படுத்தி வருகிறது. முன்னேற்றம் அடைந்த முதலாளித்துவ நாடுகளில் சமூக முரண்பாடுகள் தலைவிரித்தாடுகின்றன. சமூகச் சீர்கேடுகள் பெருகி வளர்கின்றன. சமத்துவம் இன்மை தாண்டவமாடுகிறது. பெரும்பான்மையான உழைக்கும் மக்களின் உதிரத்திலிருந்து சிறுபான்மையான சிலர் செல்வத்தையும் அதிகாரத்தையும் தேடிக் கொள்ள முடிகிறது. முதலாளியமானது, சாராம்சத்தில் சமூக அநீதிகளைத் தோற்றுவிக்கும் ஒரு பொருளுற்பத்தி வடிவம். பொருளுற்பத்தியில் பிரமிக்கத்தக்க முன்னேற்றத்தை எட்டியபோதும், மனிதத்தின் வளர்ச்சியையும் மனித உறவுகளின் மேம்பாட்டையும் அது பேணி நிற்கவில்லை. எனவே பொருளிய வளர்ச்சியை மட்டும் அடிப்படையாகக் கொண்டு மானிட சமூகம் உன்னதமான உயர்நிலைவளர்ச்சியை எட்டிவிட்டதெனக் கருதுவது தவறு. புக்குயாமாவின் கோட்பாட்டுக்கு எதிராக இப்படியான விமர்சனங்கள் முன்வைக்கப்படுகின்றன.


> “மனித சமூகத்தின் பொருளுற்பத்தியில்–நவீனத்துவ உலகின் உருவாக்கத்தில் – முதலாளித்துவமானது என்றுமில்லாத பெரும் சாதனைகளை ஈட்டியிருக்கிறது என்பது உண்மை. ஆயினும், அதன் வளர்ச்சிப் போக்கு மனித சமூகத்தின் அதியுன்னத நிலையை எட்டி உள்ளது என்பதும் முதலாளியத்துக்கு அப்பால் அடுத்தகட்ட வளர்ச்சி சாத்தியம் இல்லை என்பதும் ஏற்றுக்கொள்ள முடியாது என வாதிடுகிறார்கள் பல அறிஞர்கள். முதலாளியம் மனித சமத்துவத்துக்கு விரோதமானது. மனிதர்களிடையே அது முரண்பாட்டையும் வர்க்க பேதத்தையும் பொருளாதார ஏற்றத் தாழ்வையும் ஏற்படுத்தி வருகிறது. முன்னேற்றம் அடைந்த முதலாளித்துவ நாடுகளில் சமூக முரண்பாடுகள் தலைவிரித்தாடுகின்றன. சமூகச் சீர்கேடுகள் பெருகி வளர்கின்றன. சமத்துவம் இன்மை தாண்டவமாடுகிறது பெரும்பான்மையான உழைக்கும் மக்களின் உதிரத்திலிருந்து சிறுபான்மையான சிலர் செல்வத்தையும் அதிகாரத்தையும் தேடிக் கொள்ள முடிகிறது. முதலாளியமானது, சாராம்சத்தில் சமூக அநீதிகளைத் தோற்றுவிக்கும் ஒரு பொருளுற்பத்தி வடிவம். பொருளுற்பத்தியில் பிரமிக்கத்தக்க முன்னேற்றத்தை எட்டியபோதும், மனிதத்தின் வளர்ச்சியையும் மனித உறவுகளின் மேம்பாட்டையும் அது பேணி நிற்கவில்லை. எனவே பொருளிய வளர்ச்சியை மட்டும் அடிப்படையாகக் கொண்டு மானிட சமூகம் உன்னதமான உயர்நிலை வளர்ச்சியை எட்டிவிட்டதெனக் கருதுவது தவறு.”

(தொடரும்...)

## தேச விடுதலையுடன் மானிடத்தின் விடுதலை குறித்தும் ஆழமாகச் சிந்தித்த தத்துவாசிரியர் அன்ரன் பாலசிங்கம்

*ஈழத் தமிழினத்தின் தேச விடுதலை பற்றிய சிந்தனைப் புரட்சியை முன்வைத்தவர் விடுதலைப் புலிகளின் மதியுரைஞர் அன்ரன் பாலசிங்கம்.*

*அவர் வெறும் அரசியல் மதியுரைஞர் மட்டுமல்லர். அதையும் தாண்டி ஒரு தத்துவாசிரியர். ஓரினத்தின் தேச விடுதலையையும் தாண்டி மனித விடுதலை பற்றியும் ஆழமான ஆத்ம விசாரணைகளைச் செய்த ஓர் ஆய்வறிஞர்.*



*'விடுதலை' என்ற தமது நூலிலே அரசியலுக்கு அப்பால், மேலும் பல்துறைசார்ந்த தமது சிந்தனைத் தெறிப்புக்களை அவர் முன்வைத்துள்ளார்.*

*அரசியல், சமூகவியல், உளவியல், பொருளியல், மெய்யியல், வரலாற்றியல், மானிடவியல் போன்ற அறிவியல் பரப்புகளை ஊடுருவி நிற்கும் அர்த்தம் பொதிந்த கட்டுரைகள் அதில் அடங்கியுள்ளன.*

*இந்த விசாரணைகள் அனைத்துக்கும் மூலப் பொருளாக விளங்குபவன் மனிதன். ஆகவே, மனிதன் பற்றியும், மனித வாழ்வு மற்றும் வரலாறு பற்றியும், மனித விடுதலை பற்றியும் ஆழமான விசாரணைகள் செய்த சிந்தனையாளர்கள் சிலரின் புதுமையான, புரட்சிகரமான பார்வைகளை இக்கட்டுரைகள் வாயிலாக அறிமுகம் செய்துவைக்கிறார் 'தேசத்தின் குரல்' அன்ரன் பாலசிங்கம்.*

# மலையக மக்களின் பிரச்சினைகள் தேசிய ரீதியில்கூட உணரப்படவில்லை

## கல்வி இராஜாங்க அமைச்சர் இராதாகிருஷ்ணன் கவலை



கொழும்பு, நவ.26

வடக்கு, கிழக்கு மக்களின் பிரச்சினைகள் சர்வதேசம் வரையில் கொண்டு செல்லப்பட்டுள்ள நிலையில் மலையக மக்களின் பிரச்சினைகள் தேசிய ரீதியில் கூட உணரப்படவில்லை என்று கல்வி இராஜாங்க அமைச்சர் வீ.இராதாகிருஷ்ணன் கவலை வெளியிட்டார்.

நாடாளுமன்றத்தில் 2017 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத்திட்டத்தின் கமத்தொழில், பெருந்தோட்டக் கைத்தொழில், மகாவலி அபிவிருத்தி மற்றும் நீர்ப்பாசன மற்றும் நீரக வளமூல முகாமைத்துவ அமைச்சுக்கள் மீதான செலவுத் தலைப்புக்கள் மீது உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். இதன்போது அவர் மேலும் உரையாற்றியவை வருமாறு:-

நாட்டின் பொருளாதாரத்தை முன்னேற்றுவதற்காக தம்மை அர்ப்பணித்துச் செயற்படும் தோட்டத்தொழிலாளர்கள் 200வருடங்கள் கடந்த நிலையிலும் இன்னமும் துன்பங்களுடனேயே உள்ளனர்.

சம்பளப் பிரச்சினை தீர்க்கப்படாது நீடித்திருந்த நிலையில் தமது சம்பளத்துக்காகத் தாமே வீதியில் இறங்கிப் போராடினார்கள். மலையக மக்களின் சம்பளத்தை நிர்ணயிக்கும் பொறுப்பைக் கொண்டிருக்கும் சில தொழில் வழங்கும் நிறுவனங்களே அவர்களின் தலையெழுத்தைத் தீர்மானிக்கின்றன.

அந்த நிலைமைகள் மாற வேண்டும். தோட்டப் புறங்களில் பாடசாலைகளுக்கான கட்டடங்களை நிர்மாணிப்பதற்கான முயற்சிகள் எடுக்கப்படுகின்றபோதும் காணிகள் இல்லாத நிலைமையே உள்ளது. அது குறித்து பெருந்தோட்டத்துறை அமைச்சர் மற்றும் காணி அமைச்சர் உரிய கவனம் செலுத்த வேண்டும். மலையகப் பகுதிகளில் உள்ள பாடசாலை அபிவிருத்திப் பணிகள் மந்தமாக இருக்கின்ற நிலையில் கட்டட நிர்மாணப்பணிகளுக்கான ஒதுக்கீடுகள் கிடைக்கின்றபோது அதனைச் சரியாகப் பயன்படுத்த வேண்டும்.

தற்போது வடக்கு, கிழக்கு மக்களின் பிரச்சினையானது தேசிய ரீதியிலும் அதனைத் தாண்டி சர்வதேச ரீதியிலும் உணரப்பட்டு அதனைத் தீர்ப்பதற்குரிய பல்வேறு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன. அத்துடன் ஒத்துழைப்புக்கள் வழங்கப்படுகின்றன.

அவ்வாறிருக்கையில் மலையக மக்களின் பிரச்சினைகள் தேசிய அளவில் உணரப்படவில்லை. தேசியத் தலைவர்கள் அதனை உணராதிருக்கின்றமையை இட்டு நான் கவலை அடைகின்றேன்.

மலையகப்பகுதிகளில் விவசாயத்தில் ஈடுபடும் மக்கள் பல்வேறு பிரச்சினைகளை எதிர்கொள்கின்றார்கள். குறிப்பாக நுவரெலியா பகுதியில் மரக்கறிகளின் விலையில் ஏற்பட்டுள்ள வீழ்ச்சியால் அந்தத் தொழிலைக் கைவிடுவதற்கான நிலைமைகளே ஏற்பட்டுள்ளன. எனவே நுவரெலியா மக்களின் பிரச்சினைகள் உட்பட மலையக மக்களின் பிரச்சினைகள் முடிவுக்குக் கொண்டு வரப்பட வேண்டும் என்பதே எமது கோரிக்கையாகவுள்ளது -என்றார். (எ)

## இரவுப் பூங்காவாக தெஹிவளை மிருகக் காட்சிச்சாலை

கொழும்பு, நவ.26

தெஹிவளை மிருகக் காட்சிச் சாலையை இரவு நேரப் பூங்காவாக மேம்படுத்துவதற்கு அரசு திட்டமிட்டுள்ளது.

தற்போது மிருகக் காட்சிச் சாலை இருக்கும் இடத்தில் அந்தப் பூங்கா அமையவுள்ளதுடன் இது இரவு 9.30 மணி வரை மக்களின் பாவனைக் காகத் திறக்கப்பட்டிருக்கும்.

இதேவேளை, எதிர்வரும் 2017 மார்ச் மாதத்துடன் தெஹிவளை மிருகக்காட்சி சாலையில் கூண்டுகளுக்குள் அடைக்கப்படாத மிருகங்களை மாத்திரமே காணமுடியும் என்று தெரிவிக்கப்படுகின்றது. (எ)

## இலங்கையில் நாள் ஒன்றுக்கு 800 கருக்கலைப்புக்கள்

கொழும்பு, நவ.26

இலங்கையில் நாள் ஒன்றுக்கு 800 கருக்கலைப்புச் சம்பவங்கள் பதிவாகின்றன என்று தென் சுகாதார அமைச்சு தகவல் வெளியிட்டுள்ளது.

தென் மாகாண தொற்றா நோய்ப் பிரிவின் பொறுப்பதிகாரி நலின் விஜேசேகர இந்தத் தகவலை வெளியிட்டுள்ளார்.

காலியில் நடைபெற்ற நூல் வெளியீட்டு நிகழ்வு ஒன்றில் பங்கேற்று உரை நிகழ்த்தியபோதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அங்கு அவர் மேலும் கூறியவை வருமாறு:-

''இலங்கையில் நாள் ஒன்றுக்கு ஆயிரத்து 100 தொடக்கம் ஆயிரத்து 200 பிறப்புக்கள் பதிவாகின்றன. அதேபோன்று நாள் ஒன்றுக்கு 700 - 800 வரையில் கருக்கலைப்புக்கள் இடம்பெறுகின்றன. பிறக்கும் சிசுக்களின் எண்ணிக்கைக்கு நிகரான அளவில் கருக்கலைப்புக்கள் இடம்பெறுகின்றன. யார் என்ன சொன்னாலும் கருக்கலைப்பு என்பது ஓர் கொலையாகும். அது சட்டவிரோதமான செயலாகும்''-என்றார். (எ)

## தினசரி ராசி பலன் 26.11.2016

| | |
|---|---|
| சுபநேரம் | : காலை : 7.45 - 8.45 |
| | மாலை : 4.45 - 5.45 |
| ராகு காலம் | : 9.00 - 10.30 |
| குளிகன் | : 6.00 - 7.30 |
| எமகண்டம் | : 1.30 - 3.00 |

ஜோதிட ஜோதி P.ராமன் பட்டாச்சாரியார்
ஸ்ரீ ஜெய மாருதி ஜோதிட நிலையம்
கும்பகோணம், தமிழ்நாடு.
(maruthi_jaya2003@yahoo.co.in)

சமநோக்கு நாள்

**மேஷம்** : பெருமை - இன்று திடீர் புகழாரம் உங்கள் வாசல் நாடி வரும் நாள்.

**ரிஷபம்** : உயர்வு - அனைத்துக் காரியத்திலும் முயற்சியுடன் செயற்பட்டால் உயர்வு கிடைக்கும்.

**மிதுனம்** :சினம் - வீண்கோபத்தால் அனைவரிடத்திலும் உள்ள மதிப்புக் குறையும்.

**கடகம்** :ஜெயம் - நல்முயற்சிகள் சிறக்கும், எடுக்கும் காரியத்தில் கீர்த்தி தரும் சிறப்பான நன்னாள்.

**சிம்மம்** : நட்பு - நண்பர்களின் அரவணைப்புக் கிடைத்து நலம் நல்கும்.

**கன்னி** : பாசம் - அனைவரிடத்திலும் ஈகை கொண்டும் அன்பானவர்களின் ஆதரவும் கிடைக்கும்.

**துலாம்**: ஓய்வு - உழைப்பால் உண்டான களைப்பு நீங்கி ஓய்வு தரும் நாள்.

**விருச்சிகம்**: மறதி - இன்று நீங்கள் செய்யும் செயல்களில் ஞாபகம் சற்றுக் குறைவாக இருக்கும்.

**தனுசு**: நன்மை - நீண்ட நாளைய ஆசைகள் நிறைவேறி நன்மைகள் பல கிடைக்கும்.

**மகரம்**: செலவு - இன்று திடீர் செலவீனங்கள் ஏற்படும் நாள்.

**கும்பம்**: வரவு - இன்று எதிர்பாராத வகையில் வரவுகள் கிடைக்கும்.

**மீனம்**: உதவி - இன்று உங்களுக்கு சந்திராஷ்டமம் என்பதால் மற்றர்களுக்கு உதவும் எண்ணங்கள் உதயமாகும்.
சந்திராஷ்டமம்: உத்தரட்டாதி , ரேவதி



ஹற்றனில் இருந்து டயகமவுக்குச் செல்லும் பிரதான வீதியின், போடைஸ் பகுதியிலுள்ள பாலம் சில தினங்களுக்கு முன்னர் சேதமடைந்துள்ளது. இதனைப் புனரமைக்குமாறு தனியார் பஸ் ஊழியர்கள், இலங்கை போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான பஸ் ஊழியர்கள் மற்றும் பிரதேச மக்கள் ஒன்றிணைந்து நேற்றுமுன்தினம் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். (எ)


# ஒருதொகை வெடிபொருளுடன் மதவாச்சியில் இருவர் கைது

வவுனியா, நவ.26

மதவாச்சிப் பகுதியில் வெடிபொருள்கள் உட்பட இராணுவ உபகரணங்களுடன் சந்தேக நபர்கள் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

புனாவ இராணுவ முகாமுக்குக் கிடைத்த புலனாய்வுத் தகவல்களை அடுத்து நேற்று முன் தினம் மாலை மதவாச்சிப் பொலிஸார், கெபித்திகொல்லாவ பொலிஸார் மற்றும் அநுராதபுரம் வெடிபொருள் கட்டுப்பாட்டு அலுவலக அதிகாரிகள் கூட்டாக இணைந்து மேற்கொண்ட தேடுதலின் போதே இந்த வெடி பொருள்கள் உட்பட இராணுவ உபகரணங்கள் மீட்கப்பட்டுள்ளன.

இசென்பெஸ்பல பிரதேசத்தில் உள்ள கற்குழியில் மறைத்து வைக்கப்பட்டிருந்த நிலையில் 2ஆயிரத்து 634 ஜெலட்நைட் குச்சிகள், ஆயிரத்து 922 மின்சார டெட்டநேட்டர்கள், மின்சாரமற்ற 50 டெட்டநேட்டர்கள், 6 ஆயிரத்து 580 மீற்றர் சேவை நூல் வகைகள், 45 கிலோ கறுப்பு வெடி மருந்து உட்பட மேலும் பல பொருள்கள் மீட்கப்பட்டுள்ளன.



இதன்போது கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் இருவரிடமும் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்று பொலிஸார் தெரிவித்தனர். (எ)

# தீவுப் பகுதியில் தோட்ட வேலை மும்முரம்; சுதந்திரமாகத் திரிகின்றன கட்டாக்காலிகள்!

## வழமைபோன்று சைபீரிய பறவைகளும் வருகை

மண்டைதீவு கிராமம் உட்பட தீவுப்பகுதி எங்கும் தோட்ட வேலைகள் ஆரம்பித்து மும்முரமாக நடைபெற்று வருகின்றன.

மழைவீழ்ச்சியைத் தொடர்ந்து குளம் குட்டைகள் நிரம்பி வழிகின்றன. தரவைகளை வெள்ளம் மூடி நிற்கிறது. சைபீரிய பறவைகளும் வழமை போல் வந்திறங்குகின்றன. எங்கு பார்த்தாலும் ரம்மியமான காட்சிகள்.

வழமையாக தீவகத்தில் குறிப்பாக மண்டைதீவு, வேலணை, சரவணை, புளியங்கூடல், கரம்பன் அனலை தீவுப் பகுதிகள் புகையிலை செய்கைக்குப் பெயர்போனவை.

ஆனால், இம்முறை வேலணை, ஊர்காவற்றுறை பிரதேச செயலகங்கள் புகையிலைச் செய்கைக்குத் தடை விதித்துள்ளன. இதனால், இந்த வருடம் இந்தப் பகுதிகளில் இந்தப் பணப் பயிர்ச்செய்கையில் வீழ்ச்சியை எதிர்பார்க்கலாம்.

வேறு வாழ்வாதாரம் இல்லாத விவசாயிகள் என்ன செய்வதெனத் தெரியாதுள்ளனர். இருந்தபொழுதும், தோட்ட வேலி அடைத்தல், பசளை இடுதல், நாற்றுமேடை போடுதல் போன்ற வழமையான வேலைகளை அவர்களால் தவிர்க்க முடியவில்லை.

அடுத்த வருடம் உற்பத்தி குறைவடையுமென எதிர்பார்க்கப்படுகிறது. விவசாயிகள் குறைந்தளவிலாவது புகையிலையைப் பயிரிட வேண்டிய கட்டாயத்திலேயே உள்ளனர்.

வெங்காயம் மிளகாய்ச் செய்கைக்கும் மண்டைதீவு மண் பொருத்தமானதாகும். அதற்கான ஆயத்த வேலைகளும் நடைபெற்று வருகின்றன.

அதே சமயம் தீவகப் பகுதியில் அலைந்து திரியும் கட்டாக்காலிகள் காலபோக நெற்பயிர்ச் செய்கை மற்றும் மேட்டு நில பயிர்ச் செய்கைக்கு பெரும் அச்சுறுத்தலாக உள்ளன. இதனால் வேலணை, ஊர்காவற்றுறை பிரதேச சபைகள் இவற்றைப் பிடித்து வாழ்வாதார உதவியாக மக்களுக்கு வழங்கத் தீர்மானித்துள்ளன.

தம்பாட்டிப் பகுதியைச் சார்ந்த தரவைப் பகுதிகளில் மேய்ந்து திரிந்த மாடுகள் பெருமளவில் பிடிக்கப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்படுகிறது.

நெடுந்தீவுப் பகுதியில் இருந்து கொண்டுவரப்பட்ட இளைஞர்கள் இந்த வேலையை சுளுவாகச் செய்யக்கூடியவர்கள்.

மண்டைதீவுப் பகுதியில் கட்டாக்காலிகளின் வாழிடமாக தரவைகள் மட்டுமன்றி கண்ணா பற்றைகளும் வேறு ஈஞ்சு போன்ற பற்றைக் காடுகளும் வாய்ப்பாக உள்ளன.

பனையடிக் காடு, எருக்கிலந்துண்டி கண்ணாதீவுகள் வெள்ளம் நிரம்பி உள்ளன. மேலும் மழைக்கால நிலை உவப்பானதாக இல்லை.

பிடிக்கப்பட்டுள்ள மாடுகளை மீளப்பெற இதுவரை 64 இற்கும் மேற்பட்டவர்கள் பதிவுகளைச் செய்துள்ளனர் என்று மண்டைதீவு விவசாயிகள் தெரிவித்துள்ளனர்.

கட்டாக்காலிகளைப் பிடித்து வந்துள்ள நெடுந்தீவு இளைஞர்கள் மண்டைதீவு கிழக்கு உதய சூரியன் சனசமூக நிலையத்துக்கு அருகில் உள்ள வீடு ஒன்றில் தற்காலிகமாகத் தங்கி உள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது.

## தையல், அழகுக்கலை டிப்ளோமா கற்கை; விண்ணப்பிக்கலாம்

யாழ்ப்பாணம்,நவ.26

கிராம அபிவிருத்தித் திணைக்களத்தின் ஊடாக உடுவில் பிரதேச செயலர் பிரிவில் தையல், அழகுக்கலை மற்றும் மனைப் பொருளியல் டிப்ளோமா கற்கை நெறி ஆரம்பிக்கப்படவுள்ளமையால் இப்பயிற்சி நெறியில் பங்குபற்ற விரும்புபவர்களை விண்ணப்பிக்குமாறு பிரதேச செயலர் அறிவித்துள்ளார்.

எதிர்வரும் ஜனவரி மாதம் 1 ஆம் திகதி ஆரம்பமாகி ஒரு வருட காலத்துக்கு நடைபெறவுள்ள இப்பயிற்சி நெறியில் பங்குபற்ற விரும்புவோர் உடுவில் செயலகத்திலுள்ள கிராம அபிவிருத்தித் திணைக்களத்தில் விண்ணப்பப் படிவங்களைப் பெற்று டிசெம்பர் மாதம் 15ஆம் திகதிக்கு முன் அனுப் பிவைக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (இ-59)

## மீள் பரீட்சைக்கு விண்ணப்பிக்கலாம்

யாழ்ப்பாணம்,நவ.26

யாழ்ப்பாணம் உயர் தொழிநுட்பவியல் நிறுவனத்தினால் 2016 ஆம் ஆண்டுக்கான 2 ஆம் பருவகால மீள் பரீட்சைக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன என்று நிறுவனத்தின் உதவிப் பதிவாளர் யோ.ரிசாந்தன் தெரிவித்துள்ளார்.

இப்பரீட்சைக்குத் தோற்றவிருக்கும் பரீட்சார்த்திகள் நிறுவனத்தில் விண்ணப்பப்படிவங்களைப் பெற்று பூர்த்தி செய்து எதிர்வரும் டிசெம்பர் மாதம் 19 ஆம்திகதி திங்கட்கிழமைக்கு முன்னர் நிர்வாகப் பகுதியில் கையளிக்குமாறு உதவிப் பதிவாளர் அறிவித்துள்ளார். (இ-7)

## டெனிஸ்வரன் தலைமையில் ஆலோசனைக் குழுக் கூட்டம்



வட மாகாண மீன்பிடி, போக்குவரத்து, வர்த்தக வாணிபம், கிராம அபிவிருத்தி, வீதி அபிவிருத்தி மற்றும் மோட்டார் போக்குவரத்து அமைச்சின் ஆலோசனை குழு கூட்டம் அமைச்சர் பா.டெனிஸ்வரன் தலைமையில் அமைச்சு கேட்போர் கூடத்தில் நேற்றுமுன்தினம் காலை நடைபெற்றது.

இந்த ஆலோசனைக் கூட்டத்தில் வட மாகாண சபை உறுப்பினர்களான துரைராஜா ரவிகரன், வேலுப்பிள்ளை சிவஜோகன், சந்திரலிங்கம் சுகிர்தன், அரியக்குட்டி பரஞ்சோதி, கனகலிங்கம் சிவாஜிலிங்கம் ஆகியோரும் அமைச்சின் செயலாளர் எஸ்.சத்தியசீலன், வீதி அபிவிருத்தி திணைக்களத்தின் மாகாண பணிப்பாளர் ரி.சிவராஜலிங்கம், கிராம அபிவிருத்தி திணைக்களத்தின் மாகாண பணிப்பாளர் ஜே.ஜே.பெலிசியன், மோட்டார் போக்குவரத்து திணைக்களத்தின் ஆணையாளர் கே.பிராபகரமூர்த்தி மற்றும் போக்குவரத்து அதிகார சபையின் தலைவர் ஏ.நிக்கோலாஸ்பிள்ளை ஆகியோர் கலந்து கொண்டனர்.

இந்த ஆலோசனைக் குழுக் கூட்டத்தில் அமைச்சாலும் அமைச்சின் கீழ்வரும் திணைக்களங்களாலும் முன்னெடுக்கப்படும் பல செயற்றிட்டங்கள் பற்றியும் அவற்றிலுள்ள குறை நிறைகள் பற்றியும் அவற்றின் முன்னேற்றம் பற்றியும் ஆய்வு செய்யப்பட்டது.

அத்துடன் எதிர்காலத் திட்டங்கள் மற்றும் செயற்பாடுகள் தொடர்பாகவும் கலந்து ரையாடப்பட்டது. (ஐ)

### பாவனையாளர்களை ஏமாற்றிய

## வர்த்தகர்களுக்கு கடந்த மாதம் ரூ.5 லட்சத்து 76 ஆயிரம் தண்டம்

பாவனையாளர்கள் அலுவல்கள் அதிகாரசபையின் சட்டத்தை மீறிபொது மக்களை ஏமாற்றும் நோக்கில் தமது வியாபார நடவடிக்கையை முன்னெடுத்த வர்த்தக நிலைய உரிமையாளர்களுக்கு எதிராகக் கடந்த மாதம் மட்டும் 5லட்சத்து 76ஆயிரம் ரூபா தண்டம் விதிக்கப்பட்டதாக யாழ்.மாவட்ட பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபையின் இணைப் பதிகாரி தனசேகரம் வசந்த சேகரம் தெரிவித்தார்.

கடந்த மாதம் தாக்கல் செய்யப்பட்ட 77 வழக்குகளில் 73 வழக்குகள் அதிகளவானவை காலாவதியான பொருள்களைக் காட்சிப்படுத்தியிருந்தமையே என்று அவர் தெரிவித்தார்.

மேலும் 2 வழக்குகள் பாவனையாளர்களை ஏமாற்றும் நோக்கத்துடன் செயற்பட்டமை, ஒரு வழக்கு அதிக விலைக்கு விற்பனை செய்தமை, மற்றும் 'லேபிள்' தொடர்பானது என இணைப்பதிகாரி மேலும் தெரிவித்தார்.

யாழ்.மாவட்டத்தில் உள்ள 5 நீதிமன்றங்கள் ஊடாகத் தாக்கல் செய்யப்பட்ட 77 வழக்குகள் மீதான விசாரணைகளை அடுத்தே 5 லட்சத்து 76ஆயிரம் ரூபாஅபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்ட வழக்குகளுக்கு 2இலட்சத்து 14ஆயிரத்து 500 ரூபாவும்,பருத்தித்துறை நீதிமன்றினால் 2லட்சத்து 20ஆயிரம் ரூபாஅபராதமும் விதிக்கப்பட்டது.சாவகச்சேரி நீதிமன்றினால் 72ஆயிரம் ரூபாவும் மல்லாகம் நீதிமன்றினால் 1இலட்சத்து 71ஆயிரத்து 500 ரூபாவும், ஊர்காவற்றுறை நீதிமன்றினால் 12,000 ரூபாவும் அபராதமாக விதிக்கப்பட்டது.

*காலாவதியான அழகு சாதனப் பொருள்கள்*

இவற்றில் 11 வழக்குகள் காலாவதியான அழகுசாதனப் பொருள்களைப் பயன்படுத்தி பியுட்டிபாலர் நடத்தியமை தொடர்பில் முன்னெடுக்கப்பட்டவை என்று அவர் குறிப்பிட்டார்.

## காலாவதியான பொருள்கள் காட்சிக்கு; முல்லைத்தீவு வர்த்தகர்கள் சிக்கினர் 35 ஆயிரம் ரூபா அபராதம்

முல்லைத்தீவு,நவ.26

திகதி காலாவதியான பொருள்களை விற்பனைக்குக் காட்சிப்படுத்தி வைத்திருந்த 6 வர்த்தகர்கள் சுகாதாரப் பரிசோதகர்களிடம் வகையாக அகப் பட்டுக் கொண்டனர். இவர்களுக்கு நீதிவான் 35 ஆயிரம் ரூபா அபராதம் விதித்துள்ளார்.

முல்லைத்தீவுப் பிரதேசத்திலுள்ள வர்த்தக நிலையங்களைச் சோதனை செய்வதில் ஈடுபட்ட பொதுச் சுகாதாரப் பரிசோதகர் சுரேஸ் ஆனந்தன், பிரபல பூட்சிற்றி உட்பட ஆறு வர்த்தக நிலையங்களில் திகதி காலாவதியான பொருள்கள் விற்பனைக்கு வைக்கப்பட்டிருந்தமையைக் கண்டுபிடித்துள்ளார்.

இதையடுத்து, பொருள்களைக் கைப்பற்றிய சுகாதாரப் பரிசோதகர், முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்றத்தில் வழக்குப் பதிவு செய்திருந்தார்.

இவ்வழக்கு கடந்த செவ்வாய்க்கிழமை விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போது ஆறு வர்த்தகர்களும் குற்றத்தை ஏற்றுக் கொண்டமையை அடுத்து நீதிவான் 5 வர்த்தகர்களுக்குத் தலா 5 ஆயிரம் ரூபா வீதம் 25 ஆயிரம் ரூபாவும் பொது நிறுவனத்துக்கு 10 ஆயிரம் ரூபாவும் அபராதம் விதித்துள்ளார். (இ-59)

## மண்டைதீவில் மயிர்க்கொட்டிகள் பெருக்கம்

மண்டைதீவுக் கிராமப் பகுதிகளில் மயிர் கொட்டிகளின் பெருக்கம் திடீரென அதிகரித்திருப்பதாக அங்குள்ளவர்கள் தெரிவிக்கின்றனர்.

கோடை காலத்திலேயே மயிர்க் கொட்டிகள் பெருக்கமடைவது வழக்கம். ஆனால் இப்பொழுது எல்லாமே வழமைக்கு மாறாக நடைபெறுவதாக பொதுமக்கள் தெரிவிக்கின்றனர்.

மயிர்க்கொட்டி அதிகரிப்புக்கு பூவரச மரங்கள் மற்றும் புதிதாக ஆரம்பிக்கப்பட்டுள்ள முருங்கைத் தோட்டங்களும் வாய்ப்பாக உள்ளன என்று தெரிவிக்கப்பட்டது. (இ-20)

## கால் நடைகள் பதிவு ஆரம்பம்

அடையாளம் இடப்படாத அல்லது பதிவில்லாத கால் நடைகளுக்கான பதிவுகள் இடம்பெறுகின்றன என்று கால் நடை வைத்திய அதிகாரி அறிவித்துள்ளார். காது அடையாளம் இடப்படாத ஆடு, மாடு மற்றும் பதிவுகள் இல்லாத கோழிகள் போன்றவைகளுக்கு பதிவுகள் மேற்கொள்ளப்படவுள்ளன. விவரங்களை எதிர்வரும் 30ஆம் திகதிக்கு முன்னர் கரவெட்டி கால்நடை வைத்திய அதிகாரி அலுவலகத்தில் ஒப்படைக்குமாறு அறிவித்துள்ளார். (ஐ-40)

# இலங்கை விவகாரத்தில் காங்கிரஸ் மாறவேண்டும்

## அந்தக் கட்சியின் இளம் தலைவர் சிதம்பரம் அதிரடிக் கருத்து



சென்னை, நவ.26

இலங்கை விவகாரத்தை ராஜீவ் கொலையை வைத்தே நாம் அணுகி வருகிறோம். ஆனால், தற்போதைய இளைஞர் சமூகம் இலங்கைப் பிரச்சினையை 2009 இல் நடைபெற்ற சம்பவத்தை வைத்தே பார்க்கிறது. எனவே இலங்கைப் பிரச்சினையிலும் விடுதலைப்புலிகள் பிரச்சினையிலும் காங்கிரஸ் கட்சியின் பார்வை மாறவேண்டும் என்று அதிரடியாகத் தெரிவித்தார் காங்கிரஸ் கட்சியின் இளம் தலைவர்களில் ஒருவரும் முன்னாள் நிதி அமைச்சர் ப.சிதம்பரத்தின் மகனுமான கார்த்திக் சிதம்பரம்.

காங்கிரஸ் கட்சியின் மண்டல நிர்வாகிகள் கூட்டம் சென்னை சத்திய மூர்த்தி பவனில் நேற்று முன்தினம் நடைபெற்றது. அந்தக் கூட்டத்தில் கலந்துகொண்டு பேசிய போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

ராஜீவ் படுகொலை நடைபெற்று 26 ஆண்டுகள் கடந்து விட்டன. ஆனால், அந்தத் துயரச் சம்பவத்தை காங்கிரஸ் கட்சியினர் இன்றுவரை மறக்காமல், தங்களுடைய எதிர்ப்பைத் தொடர்ந்து பதிவு செய்து வருகின்றனர். 2009 ஆம் ஆண்டு இலங்கையில், நடைபெற்ற போரை எதிர்த்து தமிழகம் முழுவதும் போராட்டம் நடைபெற்றது. ஆனால், அப்போதும் காங்கிரஸ் கட்சி அமைதி காத்துத்தான் வந்தது.

ராஜீவ் கொலை வழக்கில் சிக்கிய குற்றவாளிகளுக்கு மரண தண்டனை வேண்டும் என்பதில் இன்று வரை விடாப்பிடியாக இருந்து வரும் நிலையில், அந்தக் கட்சியின் முக்கிய தலைவர் ஒருவரே இவ்வாறு பேசி இருப்பது சர்ச்சையாக எழுந்துள்ளது. இது குறித்து கார்த்திக் சிதம்பரத்திடம் செய்தியாளர்கள் கேட்டபோது:-

''ஜனநாயக ரீதியில் எனது கருத்தைத் தெளிவாகப் பதிவு செய்தேன். இன்றைய உலகம் குறைவான விடயங்களை மட்டும் நினைவில் வைத்துக் கொள்கின்றன. சமூகமாக மாறி விட்டது. காங்கிரஸ் கட்சியின் இலங்கைத் தமிழர் பார்வை ராஜீவ் காந்தி கொலையை மையமாக வைத்து மட்டுமே இன்று வரை உள்ளது. அந்தக் கொலை மிகக் கொடூரமானது. என்னால் இன்று வரை அதை மறக்க முடியாது, அந்தக் கொலையாளிகளையும் மன்னிக்க முடியாது. அதை காங்கிரஸ்காரர்களாலும் மறக்க முடியாது.

ஆனால், தற்போதைய இளைஞர் சமுதாயம் இலங்கைப் பிரச்சினையை ராஜீவ் காந்தி கொலையை மையமாக வைத்துப் பார்ப்பது கிடையாது. இப்போது உள்ள தலைமுறை 2009 இல் நடைபெற்ற போரில், விடுதலைப் புலிகள் மட்டுமல்லாது சாதாரண பொது மக்களும் கொல்லப்பட்டதை ஊடகங்கள் வாயிலாக எளிதாக அறிந்துள்ளார்கள். எனவே அவர்கள் அதை வைத்துத்தான் இலங்கைப் பிரச்சினையைப் பார்க்கிறார்கள். எம்முடைய பார்வை யிலேயே சமூகத்தைப் பார்க்கக் கூடாது. சமூகம் எப்படி ஒரு பிரச்சினையைப் பார்க்கிறதோ அதை ஒட்டித் தான் நாமும் பார்க்க வேண்டும். -என்று மேலும் தெரிவித்தார். (எ)

## ரூபா தாள் விவகாரம்; கேரளா எங்கும் திங்கள் முழு அடைப்பு

திருவனந்தபுரம், நவ.26

ரூபா தாள் மீளப் பெற்றமையைக் கண்டித்து கேரளாவில் நாளை மறுதினம் திங்கட்கிழமை முழு அடைப்பு நடத்த ஆளும் இடதுசாரி கூட்டணி அழைப்பு விடுத்துள்ளது. 500 மற்றும் 1000 ரூபாத் தாள்கள் செல்லுபடியாக என்ற மத்திய அரசின் அறிவிப்பால் மக்கள் சிரமங்களை அனுபவித்து வருகின்றனர் என்று கூறி, எதிர்க்கட்சிகள் கடந்த புதன்கிழமை நாடாளுமன்ற வளாகத்தில் போராட்டம் நடத்தின.

அதையடுத்து, இந்தப் பிரச்சினை தொடர்பாக நாளை மறுதினம் நாடு தழுவிய போராட்டம் நடத்துவது என்று எதிர்க் கட்சிகள் கூட்டாக முடிவு செய்தன. அன்றைய தினம் 'அகில இந்திய எதிர்ப்பு தினமாக' கடைப்பிடிக்கப்படும் என்று மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி அறிவித்தது.

இதன் தொடர்ச்சியாக, இடதுசாரிக் கூட்டணி ஆட்சி நடைபெற்றுவரும் கேரளாவில், நாளை மறுதினம் முழு அடைப்பு நடைபெறும் என்று இடதுசாரி கூட்டணி, அழைப்பு விடுத்துள்ளது. (எ)



ரூபாத் தாள்கள் நீக்கத்தால் மக்கள் எதிர்நோக்கும் சிரமங்களை நீக்க நடவடிக்கை எடுக்காத மத்திய அரசைக் கண்டித்து தமிழகம் முழுவதும் தி.மு.க. சார்பில் நேற்று முன்தினம் மனிதச் சங்கிலிப் போராட்டம் மு.க.ஸ்டாலின் தலைமையில் நடைபெற்ற போது...

## 17 ஆம் நூற்றாண்டு கால பொருள்கள் நாகையில் மீட்பு!

நாகை, நவ.26

நாகை மாவட்டம் சாத்தங்குடி கிராமத்தில் 17 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த டேனிஷ் காலத்துப் பொருள்கள், நாணயங்கள் கண்டெடுக்கப்பட்டுள்ளன.

நாகை மாவட்டத்திலுள்ள தரங்கம்பாடியிலிருந்து மேற்கே, 2 கி.மீ. தொலைவில் சாத் தங்குடி என்ற கிராமம் அமைந்துள்ளது. அந்தப்பகுதி மக்கள் ஆடுமாடுகள் மேய்ப்பதற்கும், தானியங்களை உலர்த்துவதற்கும் பயன்படுத்தி வந்த இடத்தில், பழைய கட்டுமான படிக்கட்டுகளுடன் கூடிய 2 குளங்கள் உள்ளன. அவற்றுக்கு நீர்வரும் பாதை, வெளியேறும் பாதை, பெரிய அளவிலான செங்கற்கள், சுமார் 10-அடி சீரான இடைவெளியில் அமைந்துள்ள வட்ட மற்றும் சதுர வடிவிலான பெரிய தூண்களின் எஞ்சிய பகுதிகள் ஆகியவை முட் புதர்களால் சூழப்பட்டு காணப்பட்டன.

இது தொடர்பில் அந்தப் பகுதி இளைஞர்கள் அளித்த தகவலின் பேரில், தரங்கம்பாடி தொல்லியல் துறை காப்பாட்சியர் பாஸ்கரன் மற்றும் தொல்லியல் துறை அதிகாரிகள், முதல் கட்ட ஆய்வில் ஈடுபட்டனர். அவர்கள் நடத்திய ஆய்வில் 17 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த டேனிஷ் காலத்துப் பொருள்கள், நாணயங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. (எ)

## நளினி எழுதிய நூல் வெளியிட்டு வைப்பு

சென்னை,நவ.26

இந்தியாவின் முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி கொலை வழக்கில் கடந்த 25 ஆண்டுகளாக சிறையில் அடைக்கப் பட்டுள்ள நளினி எழுதிய நூல் நேற்று முன்தினம் வெளியிடப் பட்டது.

'ராஜீவ் கொலை: மறைக்கப்பட்ட உண்மைகளும்; பிரியங்கா, நளினி சந்திப்பும்' என்ற தலைப்பில் 550 பக்கங்களில் பல்வேறு சம்பவங்கள் தொகுக்கப்பட்டுள்ள நூலை மூத்த பத்திரிகையாளரான பா.ஏகலைவன் தொகுத்துள்ளார்.

இந்த நூலை ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோ வெளியிட்டு வைக்க முதற் பிரதியை விடுதலைச் சிறுத்தைகள் கட்சித் தலைவர் தொல். திருமாவளவன் பெற்றுக் கொண்டார். அந்த நூலில் பிரதமர் ராஜீவ் காந்தியை கொலை செய்வது பற்றிய சதி எனக்குத் தெரியாது என்று நளினி குறிப்பிட்டுள்ளார்.

மேலும், புலிகள் இயக்கத்தில் இருப்பவர்கள் திருமணம் செய்து கொள்ளக்கூடாது என்ற கட்டுப்பாடு உள்ளது. முருகனும், நானும் திருமணம் செய்து கொண்டதை புலனாய்வுத்துறை மறைத்தது.

திருமணமானது உறுதி என்றால் எங்களை புலிகள் இயக்கத்தோடு தொடர்படுத்த முடியாது என்று அவர் தெரிவித்துள்ளார். மேலும், குற்றவாளிகள் இவர்கள்தான் என்று முடிவு செய்து விட்டு சாட்சிகளை சி.பி.ஐ. தேடிக் கொண்டிருந்தது என்றும் நூலில் நளினி குறிப்பிட்டுள்ளார். (எ)

## ராஜீவ் கொலை செய்யப்பட்டமை காங்கிரஸார் மறக்கவில்லையாம்

### தமிழ்நாடு காங்.தலைவர் திருநாவுக்கரசர் கூறுகிறார்

சென்னை, நவ.26

இந்தியாவின் முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி தமிழ் மண்ணில் படுகொலை செய்யப்பட்டமையை காங்கிரஸார் மறக்கவில்லை என்று திருநாவுக்கரசர் தெரிவித்தார்.

தமிழ்நாடு காங்கிரஸ் கட்சி மீனவர் அணி நிர்வாகிகளின் ஆலோசனைக் கூட்டம் சத்தியமூர்த்தி பவனில் நேற்று முன் தினம் நடைபெற்றது.

இதில் தமிழ்நாடு காங்கிரஸ் கட்சித் தலைவர் திருநாவுக்கரசர் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டார். கூட்டத்தின் பின்னர் அவர் செய்தியாளர்களுக்கு அளித்த பேட்டியின்போதே மேற்கண்டவாறு கூறினார். இதன்போது அவர் கூறியவை வருமாறு:-

தமிழக சட்டசபைக் குழுக்களை அமைக்க வேண்டும் என்று தொடர்ந்து எதிர்க்கட்சித் தலைவர் மு.க.ஸ்டாலின் வலியுறுத்தி வருகிறார். காங்கிரஸ் கட்சியும் வலியுறுத்தி வருகிறது.

எனவே சபாநாயகர் இது தொடர்பில் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும். ப.சிதம்பரம் விடுதலைப் புலிகளுக்கு ஆதரவாகப் பரிந்து பேசினார் என்று நான் நினைக்கவில்லை. அவர் அவ்வாறு பேசமாட்டார்.

ராஜீவ் காந்தி தமிழ் மண்ணில் கொலை செய்யப்பட்டதை காங்கிரஸார் மறக்கவில்லை. அது தீராத வடுவாகவே இருக்கிறது. சோகமான நிகழ்வாக எங்களுக்குள் இருக்கிறது.



தமிழக மீனவர்கள் தொடர்ந்து இலங்கைக் கடற்படையினால் தாக்கப்படுவது கண்டிக்கத்தக்கது. டில்லியில் நடைபெற்ற முத்தரப்பு பேச்சு தோல்வி என்பதைத் தான் இது காட்டுகிறது. எனவே இது தொடர்பில் மத்திய அரசு தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டும். - என்றார். (எ)

## ஈபிள் கோபுர படிக்கட்டுகள் 4 கோடிக்கு ஏலம்

பரிஸ், நவ.26

உலகப்புகழ் வாய்ந்த ஈபிள் கோபுரத்தின் 14 இரும்புப் படிக்கட்டுகள் சுமார் 4 கோடிக்கு ஏலம் போயுள்ளன.

ஈபிள் கோபுரக் கட்டுமானப் பணிகள் 1887இல் ஆரம்பிக்கப்பட்டு 1889 இல் முடிவடைந்தன. 1983 இல் லிப்ட் வசதி செய்யப்பட்டதால், இரும்பிலான படிக்கட்டுகள் வெட்டி எடுக்கப்பட்டன. இதன் பெரும்பகுதியை பரிஸில் உள்ள அருங்காட்சியகம் வாங்கியது. 1983 ஆம் ஆண்டு தொடக்கம் அவ்வப்போது, இதற்கான ஏலம் அங்கு நடத்தப்பட்டு வருகின்றது. சமீபத்தில், ஈபிள் கோபுரத்தின் 14 படிக்கட்டுகள் ஏலம் விடப்பட்டன. இதற்கு சர்வதேச அளவில் கடும் போட்டி நிலவியது. ரூ.15 லட்சத்தில் ஆரம்பித்த ஏலம், ரூ. 3.80 கோடியில் முடிவடைந்தது. இதற்கு முன் 2013இல் நடந்த ஏலத்தில் 19 படிகள் 1.5 கோடி ரூபாவுக்கு ஏலம் போனமை குறிப்பிடத்தக்கது. (எ)

## ரயில்கள் மோதல்; ஈரானில் ஐவர் சாவு

டெஹ்ரான், நவ.26

ஈரானின் வடமேற்குப் பகுதியில் அமைந்துள்ள செம்னான் மாகாணத்தில் இரு ரயில்கள் நேற்று நேருக்குநேர் மோதின. இதில் ஐந்துக்கும் அதிகமானோர் உயிரிழந்தனர்.

செம்னான் மாகாணத் துக்கு உட்பட்ட ஷரவுட் நகரை அண்மித்துள்ள ஹப்-கான் ரெயில் நிலையம் வழியாக நேற்றுக் காலை எதிரெதிர் திசைகளை நோக்கி வேகமாகச் சென்று கொண்டிருந்த இரு ரயில்கள் கண்ணிமைக்கும் நேரத்தில் ஒரே தண்டவாளத்தில் இணைந்து நேருக்கு நேர் மோதின.

மோதிய வேகத்தில் இரு ரயில்களின் எஞ்சின் பெட்டிகள் மற்றும் சில பயணிகள் பெட்டிகள் தீபிப்பிடித்து எரியத் தொடங்கின. இந்தக் கோர விபத்தில் ஐந்துக்கும் அதிகமானோர் உயிரிழந்தனர் என்றும், பலர் காயம் அடைந்தனர் என்றும் உள்ளூர் ஊடகங்கள் தகவல் வெளியிட்டுள்ளன.(எ)

## கொலம்பியாவில் சமாதான ஒப்பந்தம் மீண்டும் கைச்சாத்து

கொலம்பியா, நவ.26

கொலம்பியாவில் மீண்டும் சமாதான ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டுள்ளது. அந்த நாட்டின் ஜனாதிபதிக்கும், பார்க் தீவிரவாதிகளின் தலைவருக்கும் இடையில் இந்த சமாதான ஒப்பந்தம் கைச்சாத்தானதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஏற்கனவே அந்த நாட்டின் அரைநூற்றாண்டு யுத்தத்தை நிறைவு செய்யும் வகையிலான சமாதான ஒப்பந்தம் ஏற்படுத்திக் கொள்ளப்பட்டிருந்தது.

எனினும் மக்கள் கருத்துக் கணிப்பில் இந்த ஒப்பந்தம் தோல்வி அடைந்தது. இந்த நிலையில் மீண்டும் அந்த ஒப்பந்தம் கைச்சாத்தாகியுள்ளது. (எ)

# ஈராக்கில் யாத்திரிகர் மீது தாக்குதல்; 100 பேர் சாவு

## கொல்லப்பட்டவர்களில் அநேகர் ஈரானியர்கள்





பக்தாத், நவ.26

ஈராக்கில் யாத்திரிகர்கள் மீது ஐ.எஸ். தீவிரவாதிகள் நேற்றுமுன்தினம் தாக்குதல் நடத்தினர். இதில் 100 பேர் பலியாகியுள்ளனர்.

ஈராக்கில் ஷியா பிரிவினரின் வழிபாட்டுத் தலம் கர்பாலா நகரில் உள்ளது. ஈரானைச் சேர்ந்த பெரும்பலானோர் அங்கு சென்று வழிபட்டுச் செல்கின்றனர். சர்பாலாவில் நேற்று முன்தினம் வழிபாடு முடித்துவிட்டு யாத்திரிகர்கள் ஈரானுக்கு பஸ்களில் திரும்பிக் கொண்டிருந்தனர்.

செல்லும்வழியில் ஹில்லா என்ற நகரில் எரிபொருள் நிரப்பும் நிலையத்தில் எரிபொருள் நிரப்ப பஸ்களை நிறுத்தியிருந்தனர். இது பக்தாத்தில் இருந்து 100 கி.மீற்றர் தூரத்தில் உள்ளது.

இதன்போது வெடிகுண்டு ஏற்றிய லொறியுடன் அதிவேகமாக வந்த ஐ.எஸ். தீவிரவாதி ஈரான் யாத்திரிகர்களின் பஸ் மீது பயங்கரமாக மோதினான். இதனால் பஸ்கள் நொறுங்கின. அதையடுத்து அந்தப் பகுதியில் கட்டடங்கள் இடிந்தன.

இந்தத் தாக்குதலில் 100 பேர் பலியாகினர். தற்கொலை தீவிரவாதி தாக்குதல் நடத்திய எரிபொருள் நிரப்பும் நிலையத்தை அண்மித்ததாய் விடுதி ஒன்றும் இருந்தது. இதனால் சாவு எண்ணிக்கை அதிகரித்தது.

இதில் பலியானவர்களில் பெரும்பாலானோர் ஈரானைச் சேர்ந்த யாத்திரிகர்கள். ஐ.எஸ். தீவிரவாதிகள் வசம் இருந்த மொசூல் நகரம் மீண்டும் ஈராக் இராணுவ வசமானது. எனவே, அதற்குப் பழிவாங்க இது போன்ற தாக்குதல்களை தீவிரவாதிகள் நடத்தி வருகின்றனர். இந்த நிலையில் தீவிரவாதிகளின் இந்தத் தாக்குதலுக்கு ஈரான் வெளியுறவுத் துறை அமைச்சகம் கண்டனம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் அந்த நாட்டு செய்தித் தொடர்பாளர் கூறுகையில்:-

தீவிரவாத ஒழிப்பு நடவடிக்கையில் ஈடுபடும் ஈராக்குக்கு ஈரானின் ஆதரவு தொடரும் என்று கூறியுள்ளார்.

இதேவேளை ஹில்லா நகரில் நடத்தப்பட்ட தற்கொலைத் தாக்குதலில் அங்கு தரித்து நின்ற 5 பஸ்கள் எரிந்து நாசமான மற்றும், அங்கிருந்த கட்டடங்கள் இடிந்து தரைமட்டமான காணொலிக் காட்சி சமூக வலைத்தளங்களில் ஒளிபரப் பாகியமை குறிப்பிடத்தக்கது. (எ)

## இஸ்ரேலில் காட்டுத் தீ பரவல் ஒரு லட்சம் பேர் வெளியேற்றம்



ஹைபா, நவ.26

இஸ்ரேலின் வனப்பகுதியில் நேற்றுமுன்தினம் காட்டுத் தீ ஏற்பட்டுள்ளது. இதையடுத்து வனப்பகுதியையொட்டி தங்கியுள்ள ஒரு லட்சத்துக்கும் மேற்பட்டோர் வெளி யேற்றப்பட்டனர்.

இஸ்ரேலின் மிகப் பெரிய 3 ஆவது நகரம் ஹைபா. இது ஜெருசலேம் அருகே மேற்குக் கரையில் உள்ளது. கடந்த 2 மாதங்களாக இங்கு கடும் வறட்சி நிலவுகிறது.

அதைத் தொடர்ந்து ஹைபா நகரை ஒட்டியுள்ள வனப்பகுதியில் காட்டுத் தீ பற்றியது. காற்று வேகமாக வீசியதால் தீ வேகமாகப் பரவி நகரப் பகுதிக்குள்ளும் நுழைந்தது. இதனால் கடும் புகை மூட்டமும் ஏற்பட்டது.

அதைத் தொடர்ந்து ஹைபா நகரில் வனப் பகுதியையொட்டித் தங்கியுள்ள ஒரு லட்சத்துக்கும் மேற்பட்டோர் வெளியேற் றப்பட்டனர். இதற்கிடையே அங்கு பெரும்பாலான வீடுகளில் மின்சா ரம் தடைப்பட்டது. தீ மற்றும் புகை காரணமாக 130 பேருக்கு இலேசானகாயம் ஏற்பட்டது. அவர்களுக்கு சிகிச்சை அளிக்கப்பட்டது. காட்டுத் தீ அணைக்க முடியாத அளவுக்கு தொடர்ந்து பரவுகிறது. எனவே சைப்ரஸ், ரஷ்யா, இத்தாலி, குரோஷ்யா, மற்றும் கிரீஸ் நாடுகள் தீயணைப்புக் கருவிகள் மற்றும் விமானங்களை அனுப்பியுள்ளன என்று தகவல்கள் தெரிவிக்கின்றன. (எ)

## பிரான்ஸில் தொண்டு இல்லத்தில் மர்மநபர் தாக்குதல்; பெண் பலி

பரிஸ். நவ.26

பிரான்ஸின் தென்பகுதியில் மாண்ட்பெல்லியெர் என்ற பகுதியில் அமைந்துள்ள தொண்டு இல்லத்துக்குள் நேற்று முன்தினம் புகுந்த மர்மநபர் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் அங்கு பணியாற்றும் பெண் உயிரிழந்தார்.

மாண்ட்பெல்லியெர் என்ற இடத்தின் அருகேயுள்ள மாண்ட் பெரியர்-சர்- லெஸ் என்ற கிராமத்தில் ஆபிரிக்க நாடுகளில் தொண்டு நிறுவன சேவகர்களாகப் பணியாற்றிய சுமார் 70 ஆண்-பெண்கள் தங்கியுள்ளனர்.

அவர்கள் அனைவரும் 75 முதல் 90 வயதுக்குட்பட்ட முதியவர்கள். நேற்று முன்தினம் இரவு அந்த இல்லத்துக்குள் நுழைந்த முகமூடி அணிந்த மர்மநபர் அங்கிருந்தவர்கள் மீது கண் மூடித்தனமாகத் துப்பாக்கியால் சுட்டான்.

இந்தக் கொடூரத் தாக்குதலில் அங்கு தங்கியிருந்த ஒரு பெண் சேவகி பலியானார் என்றும், தாக்குதல் நடத்தியவன் தப்பியோடி விட்டான் என்றும் முதல் கட்ட தகவல் வெளியாகியுள்ளது. இந்த நிலையில், இந்தச்சம்பவம் தொடர்பாக வழக்குப்பதிவு செய்துள்ள பொலிஸார் கொலையாளியைத் தேடும் பணியில் ஈடுபட்டுள்ளனர். (எ)

## தென்கொரிய ஜனாதிபதிக்கு எதிராக நம்பிக்கையில்லாத் தீர்மானம்

சியோல், நவ.26

தென்கொரிய ஜனாதிபதி பார்க்குவென் ஹையை பதவி நீக்கம் செய்யக்கோரி அந்த நாட்டு நாடாளுமன்றத்தில் அடுத்த மாதம் 2 ஆம் திகதி நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டு வரப்பட உள்ளது.

ஜனாதிபதி பார்க் குவென் ஹையின் ஆட்சியில் பல்வேறு ஊழல்கள் நடைபெற்றுள்ளன என்று எதிர்க்கட்சிகள் குற்றம் சாட்டி வருகின்றன. ஊழல் குற்றச்சாட்டுக் காரணமாக தென்கொரிய ஜனாதிபதியின் நெருங்கிய தோழி சோய் சூன் சில் அண்மையில் கைது செய்யப்பட்டார்.

இந்த விவகாரத்தில் நாட்டின் பல்வேறு பகுதிகளில் ஜனாதிபதிக்கு எதிராகப் போராட்டங்கள் நடைபெற்றுவருகின்றன.

இந்தநிலையில் ஜனாதிபதிக்கு எதிராக அடுத்த மாதம் 2 ஆம் திகதி நாடாளுமன்றத்தில் நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டு வரப்படும் என்று எதிர்க்கட்சிகள் தெரிவித்துள்ளன. (எ)

(மாகாண சபை அமர்வின் தொடர்ச்சி பக்கம் 9இல் இருந்து)

# நிரந்தர அதிபர் நியமனம் கிடைத்தோரை உடன் பாடசாலையில் பதவி நிலைப்படுத்த வேண்டுமா?

## ஆர்னோல்ட், அஸ்மின், அரியரத்தினம் மற்றும் தர்மலிங்கம் கேள்வி

''இலங்கை அதிபர் சேவையில் சித்தியடைந்து அதிபர் நியமனக் கடிதம் கிடைத்தோருக்கு உடன் அதிபர் பதவி வழங்க வேண்டும் என எழுத்துமூலம் உள்ளதா?'' என்றார் ஆர்னோல்ட்.

''நரேந்திரமோடி 1000 ரூபா, 500ரூபா நோட்டுக்களை செல்லாக்காசாக்கியமை போலகடமைநிறைவேற்று அதிபர்களை செல்லாக்காசாக்க முடியாது'' என்றார் அஸ்மின்

''பரீட்சை சித்தியடைந்தமைக்காக உடனே பாடசாலைப் பொறுப்பைக் கொடுக்க முடியாது. ஆசிரியர் சங்கங்கள் தான் எல்லாக் குழப்பத்திற்கும் காரணம்'' எனச் சினந்தார் வடமராட்சி உறுப்பினர் தர்மலிங்கம்.

மிக இக்கட்டான காலத்தில் யாழ்ப்பாணத்தில் இருந்து எவரும் வந்து வன்னியில் அதிபர் கடமையேற்க மறுத்த காலத்தில் கடமை நிறைவேற்று அதிபர்கள் செயற் பட்டார்கள். அவர்கள் தொடர்பில் உணர்ச்சி வசப்பட்டு அவசர தீர்மானம் எடுப்பதா? என ஆதங்கப்பட்டார் அரியரத்தினம்.

# சுத்திகரிப்பு சேவையை தனியார் மயப்படுத்துங்கள் !

## சபையில் சுகிர்தன் வேண்டுகோள்

சுத்திகரிப்பு சேவை என்பது வடக்கு முழுவதும் பெரும் பிரச்சினையாக உருவெடுத்துள்ளது. 200 சுத்திகரிப்பு தொழிலாளர்களது பிரச்சினையா? லட்சக்கணக்கான மக்களது சுகாதாரமா? எனும் கேள்வி எழுகிறது. யாழ் மாநகர சபை நாறிக்கிடந்தபோது நாய்கள் கூட நுழையமுடியாது கிடந்தன. அவ்வளவு நாற்றம். தொழிலாளர்கள் கடமையைச் செய்து கொண்டே எதிர்ப்பைக் காட்டியிருக்க வேண்டும். அவ்வாறான பொறுப்புணர்வும் சிந்தனையும் தொழிலாளர்களுக்கு இல்லையென்றால் அதை ஏற்க முடியாது. ஒரு இருநூறு பேரைக் கருத்திலெடுத்து இலட்சோபலட்சம் மக்களை நோயாளிகளாக்க முடியாது. அவ்வாறான நிலைமை ஏற்படுமாயின் வடமாகாண சுத்திகரிப்பு சேவையை தனியார் துறையிடம் ஒப்படையுங்கள் மீளவும் பணிப்புறக்கணிப்பு நடத்தப்பட்டால் அதற்கு தயாராக இருங்கள். முன் பெல்லாம் தொழிலாளர்கள் வேலை செய்யும்போதே நகரம் நாறுவதைக் கண்டிருக்கின்றோம். அவர்கள் வேலை செய்ய மாட்டோம் என்றால் எப்படி மோசமாகும் நிலைமை? உணவு விடுதிகளையே மூடிவிட விடுதி உரிமையாளர்கள் தீர்மானித்தமையை அறியமுடிந்தது. உள்ளூராட்சி நிர்வாகத்திடமிருக்கும் சுத்திகரிப்பு சேவையை படிப்படியாக தனியார் துறையிடம் ஒப்படைக்க உரிய தீர்மானங்களையும் நடவடிக்கைகளையும் எடுங்கள் என சுகிர்தன் முதலமைச்சரைக் கேட்டுக்கொண்டார்.

தவராசாவின் கருத்து

வாக்குறுதிகள் முன்னர்வழங்கப்பட்டு நிறைவேற்றப்படாததால் மாகாண சபையினரை இனிமேல் தாம் நம்பத் தயாரில்லை என தொழிலாளர்கள் தம்மிடம் கூறியிருந்தனர் என எதிர்க்கட்சித் தலைவர் சி.தவராசா சுட்டிக்காட்டினார்.

இப்படியான விடயங்களுக்கு தீர்வு, அந்த அதிகாரிகளுக்கு இந்த அதிகாரிகளுக்கு கடிதம் எழுதுவதால் கிடைக்காது என்பதை முதலமைச்சர் தயவுடன் விளங்கிக் கொள்ள வேண்டும். அதிகாரிகள் லாடன் அடித்த குதிரைகள். மாகாணத்தின் மக்களால் தெரிவு செய்யப்பட்ட அரசியல் தலைமை கொழும்பின் அரச தலைமையுடன் பேச வேண்டும். இது நிதிவிடயம் என்பதால் குறிப்பாக நிதியமைச்சருடன் பேசவேண்டும். வெளிநிலைத் தொழிலாளர்களை அல்லது தனியார் தொழிலாளர்கள் மூலமாக துப்புரவுப் பணியை மேற்கொள்வது பற்றி சிந்திக்கப்பட்டாலும் அது உடனே செய்யமுடியாது. இவ்வளவு காலமும் வேலை செய்த தொழிலாளர்களுக்குரிய தீர்வைப் பெற்றுக்கொடுத்து விட்டு அம்முயற்சியை எதிர்காலத்தில் மேற்கொள்வதே பொருத்தமாகும். இவ்விடயம் பற்றி ஜனாதிபதி மற்றும் பிரதமருடன் பேசி அவர்களுக்கு நிரந்தர நியமனத்தைப் பெற்றுக்கொடுக்க முயற்சியுங்கள்-என்றார் தவராசா.

# அதிபர் நியமனங்களில் ஏன் கேவலமான இழுபறிகள்?

## உறுப்பினர் அரியரத்தினம் கேள்வி

நிரந்தர அதிபர்களா? கடமை நிறைவேற்று அதிபர்களா? எனும் விவகாரம் வியாழனன்று வடமாகாண சபையை நீண்ட நேரம் ஆக்கிரமித்திருந்தது. அப்பொழுது முன்னாள் மாகாண மேலதிக கல்விப் பணிப்பாளரும் வன்னி மாவட்டத்திலிருந்து தெரிவாகி தற்போது மாகாணசபை உறுப்பினருமாகவுள்ள ப.அரியரத்தினம் வடமாகாணக் கல்வி அமைச்சருக்கும் முதலமைச்சருக்கும் இடையில் அதிபர் நியமன விவகாரத்தில் இடம்பெறும் முரண்பாடுகளையும் இழுபறிகளையும் விவரித்தார்.

''வடமாகாணக் கல்வி அமைச்சு நிரந்தர அதிபர் சேவையைச் சேர்ந்த 396 பேரில் 84 பேரை முறைப்படியாக பாடசாலைகளில் பதவி நிலைப்படுத்தியது. ஆனால் கல்வி அமைச்சின் தீர்மானத்தை முதலமைச்சர் விரும்பவில்லை. அவர்கள் பாடசாலைகளைப் பொறுப்பேற்று 7 நாள்களுக்குள் நியமனங்களை இரத்துச் செய்யுமாறு வடமாகாண கல்வி அமைச்சின் செயலாளருக்கு கடிதம் அனுப்பினார். செயலாளருக்கு கேவலமான வகையில் அழுத்தம் கொடுத்து அந்நியமனங்கள் இரத்துச் செய்யப்பட்டன'' என விசனம் வெளியிட்டார் அரியரத்தினம்.

''396 பேரில் 86 பேரையாவது நியமித்த பாடசாலைகளில் பதவியில் தொடர அனுமதித்திருந்தால் மிகுதிப்பேரின் பிரச்சினைகளை இலகுவில் தீர்த்திருக்க முடியும். இப்பொழுது அப்பாடசாலைகளில் அதிபர் பதவி வெற்றிடமாகவுள்ளது.

இது ஏற்கனவே வீழ்ச்சி அடைந்து வரும் வடமாகாண கல்வியை மேலும் அதலபாதாளத்திற்குள் தள்ளும்'' என்றார் அவர்.

அதேவேளை 4வருடங்களுக்கு நிறைவேற்று அதிபர் சேவையைப் பூர்த்தி செய்தவர்களை அப்பதவியிலிருந்து நீக்க வேண்டாம் என மத்திய கல்வி அமைச்சு சுற்றுநிருபம் அனுப்பியுள்ளதால், அவர்களை நீக்க முடியாத நிலையுள்ளது எனவும் அரியரத்தினம் தெரிவித்தார்.

# கட்டடம் சட்டத்திற்கு முரணா? அதை இடித்து அகற்றுங்கள்!!

## மாகாண சபையில் சயந்தன் சீற்றம்

''சட்டத்துக்கு முரண் என்றால் கோயிலோ, விகாரையோ, தேவாலயமோ பார்க்காமல் இடித்து அகற்றுங்கள்'' என்று பலமாகத் தெரிவித்தார் சயந்தன்.

மட்டக்களப்பு மாவட்ட விகாரையின் பிக்கு நடந்த விதத்தைக் கண்டித்து நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின் மீதான விவாதத்தின்போதே அவர் இவ்வாறு கூறினார்.

''நில ஆக்கிரமிப்பு, சட்டவிரோத கட்டடங்கள் இவைபற்றி இதுவரை ஏதாவது நடவடிக்கைகளை மாகாண சபை எடுத்துள்ளதா? என கேள்வி எழுப்பினார் சிவாஜிலிங்கம்

''அந்தப் பிக்கு வெறுமனே ஒரு கிராமசேவகரை மட்டும் இழிவு படுத்தவில்லை. அவர் தமிழினத்தையே இழிவுபடுத்தினார் என விசனம் தெரிவித்தார் அனந்தி.

வடமாகாண கல்வி கலாசார அமைச்சின் வைபவம் ஒன்றில் நாவற்குழியின் ஆக்கிரமிப்பு விகாரையின் மதகுரு ஆசி வழங்க அழைக்கப்பட்ட ஒரு சம்பவத்தைச் சுட்டிக்காட்டிய அனந்தி அச்சம்பவம் ஆக்கிரமிப்பை ஏற்றுக் கொண்டது போல அமைந்தது என்றும் அதனால் அந்நிகழ்ச்சியை மாகாண சபை உறுப்பினர்கள் பகிஷ்கரித்தனர் எனவும் கூறினார்.

நிரந்தர அதிபர் நியமனம் கிடைத்தோரை உடன் பாடசாலையில் பதவி நிலைப்படுத்த வேண்டுமா? -என்றார் அவர்.

**வடக்கு மாகாண சபையில்**

வியாழன் நடந்த விவாதம்




தொகுப்பு- வேலவன்

## வலி.வடக்கில் விடுவித்த பகுதிகளில்

# வீதிகளைத் திருத்தும் படையினர்; கண்டும் காணாமல் பிரதேச சபை

தெல்லிப்பளை, நவ.26

அண்மையில் விடுவிக்கப்பட்ட தையிட்டி, ஊறணி வேவரிப்பகுதிகளில் மக்கள் முன்னர் பயன்படுத்திய வீதிகள் காடு மண்டிக்கிடக்கின்றன. அவற்றைத்துப்புரவு செய்யும் பணியில் தற்போது படையினர் ஈடுபட்டு வருகின்றனர்.

ஆனால், இந்த வேலைகளைச் செய்ய வேண்டிய பிரதேச சபையினரே எந்தவொரு நடவடிக்கைகளிலும் ஈடுபடாமல் இருப்பது கவலையளிக்கிறது என்று மக்கள் முறையிடுகின்றார்கள்.

இப்பாதைகள் மேலும், விரிவடைந்தும், சுருங்கியும் செல்கின்றன. அப்பாதைகள் குறித்து படையினருக்குத் தெரியாமல் இருப்பதால் மேற்கொண்டு பாதை அமைக்கும் பணிகள் ஸ்தம்பித்து விட்டன. அதே சமயம் காணிகளின் எல்லைகள் தெரியாமல் மக்கள் அலைந்து திரிகிறார்கள். வீட்டுத் திட்டத்துக்குப் பதிய முடியாமலும் அவர்கள் தவிக்கின்றார்கள்.

எனவே, வலி.வடக்குப் பிரதேச சபையினர் சகல பாதைகளையும் துப்புரவு செய்து இந்தப் பிரச்சினையைத் தீர்த்து வைக்க வேண்டும் என்று மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (இ-61)

# பிரதிப் பொலிஸ் மா அதிபர் மறியல்: ஜாதிக ஹெல உறுமய கட்சி எதிர்ப்பு

கொழும்பு, நவ.26

முன்னாள் பிரதிப்பொலிஸ் மா அதிபர் விளக்க மறியலில் வைக்கப்பட்டமைக்கு, ஜாதிக ஹெல உறுமய கட்சி எதிர்ப்பு வெளியிட்டுள்ளது.

பொலிஸ் விசேட அதிரடிப் படைக்குச் சொந்தமான வாகனத்தை ஓய்வு பெற்ற பின்னரும் பயன்படுத்தினார் என்று விசேட அதிரடிப் படையின் முன்னாள் பொறுப்பதிகாரி, பிரதிப் பொலிஸ் மா அதிபர் கே.எல்.எம்.சரத்சந்திர மீது குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

வாகனத்தை பயன்படுத்தியமையால் அரசுக்கு ஒரு லட்சத்து 40 ஆயிரம் ரூபா நஷ்டம் ஏற்பட்டுள்ளது என்று குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

அவர் நாட்டின் தேசியப் பாதுகாப்பு பிரயுக்கள் பாதுகாப்பு உள்ளிட்ட துறைகளில் மிகச் சிறந்த பணிகளை ஆற்றியவர் என ஜாதிக ஹெல உறுமய கட்சி அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது.

பயங்கரவாதம் நிலவிய காலத்தில் கிழக்கு பாதுகாப்பு தொடர்பில் சிறந்த முறையில் முன்னாள் பிரதிப் பொலிஸ் மா அதிபர் கடமையாற்றியுள்ளார் என்றும் தேசப்பற்றாளர்கள் என்ற போர்வையில் அரசியல்வாதிகள் கோடிக் கணக்கில் கொள்ளையிட்ட போது அவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்காது பாதுகாப்பு அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுப்பதை ஏற்றுக்கொள்ள முடியாது எனவும் ஜாதிக ஹெல உறுமயவின் ஊடக அறிக்கையின் மூலம் தெரிவித்துள்ளது.



(ஐ)

# ஆஸ்திரேலியாவுக்கு எதிரான 3 ஆவது டெஸ்ட் போட்டி: 259 ஓட்டங்களில் ஆட்டத்தை நிறுத்தியது தென்னாபிரிக்கா

அடிலெய்ட், நவ.26

ஆஸ்திரேலியாவுக்கு எதிரான 3 ஆவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் தென் னாபிரிக்கா தனது முதல் இன்னிங்ஸில் 76 ஓவர்களில் 9 விக்கெட் இழப்புக்கு 259 ஓட்டங்கள் எடுத்த நிலையில் ஆட்டத்தை நிறுத்திக் கொண்டது.

தென்னாபிரிக்க அணி ஒரு கட்டத்தில் ஆஸ்திரேலியாவின் பந்துவீச்சை தாக்குப்பிடிக்க முடியாமல் ஆட்டம் கண்ட போதும், அணித்தலைவர் டு பிளெசிஸ் தனியாளாக களத்தில் நின்று ஆட்டமிழக் காமல் 118 ஓட்டங்கள் குவித்து குவித்து அணியைச் சரிவிலிருந்து மீட்டார்.

பகலிரவு டெஸ்ட் போட்டியான இது ஆஸ்திரேலியாவின் அடிலெய்ட் நகரில் நேற்று முன்தினம் தொடங்கியது. முதல் இரு போட்டிகளை வென்றதன் மூலம் தொடரைக் கைப்பற்றிவிட்ட தென்னா பிரிக்க அணி, இந்தப் போட்டியில் நாணயச் சுழற்சியில் வென்று துடுப்பாட்டத்தைத் தேர்வு செய்தது. தென்னாபிரிக்கா 76 ஓவர்களில் 9 விக்கெட் இழப்புக்கு 259 எடுத்தி ருந்தபோது ஆட்டத்தை நிறுத் திக் கொள்வதாக டு பிளெசிஸ் அறிவித்தார் .

அப்போது டு பிளெசிஸ் 164 பந்துகளில் 17 பவுண்டரிக ளுடன் 118, ஷம்ஸி 18 ஓட்டங்களுடனும் களத்தில் இருந்தனர். இரவில் பேட் செய்வது கடினம் என்பதை கருத்தில் கொண்டு ஆஸ்திரேலியாவுக்கு நெருக்கடி கொடுக்கும் வகையிலேயே டு பிளெசிஸ் முன்னதாகவே ஆட்டத்தை நிறுத்திக் கொண்டுள்ளார்.

ஆஸ்திரேலியத் தரப்பில் ஜோஷ் ஹேஸில்வுட் 4 விக்கெட்டுகளையும், மிட்செல் ஸ்டார்க், ஜாக்சன் பேர்ட் ஆகியோர் தலா 2 விக்கெட்டு களையும் சாய்த்தனர்.

தொடர்ந்து பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய ஆஸ்திரேலிய அணி நேற்றைய நாள் ஆட்ட முடிவில் 6 விக்கெட்டுக்களை இழந்து 307 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. ஹான்ஸ்கொம் அபோட்டின் பந்து வீச்சில் 54 ஓட்டங்களிலும், சிமித் 59 ஓட்டங்களில் ரன் அவுட் முறையிலும் ஆட்டமிழந்தனர். ஆட்ட முடிவில் ஸ்டார்க் 16 ஓட்டங்களுடனும் கவாஜா 285 பந்துகளில் 138 ஓட்டங்களுடனும் களத்தில் இருந்தனர்.

## மேன் முறையீடு செய்தார் பிளெசிஸ்!

ஆஸ்திரேலியாவுக்கு எதி ராக பந்தை சேதப்படுத்தி யதாக ஐ.சி.சி. விதித்த தீர்ப்பை எதிர்த்து டு பிளெசிஸ் மேன் முறையீடு செய்துள்ளார்.

ஆஸ்திரேலிய அணிக்கு எதிராக ஹோபார்ட்டில் இடம் பெற்ற 2 ஆவது டெஸ்டில் தென்னாப்பிரிக்க தலைவர் டு பிளெசிஸ் பந்தை சேதப் படுத்தியதாக போட்டி கட்ட ணம் முழுவதையும் ஐ.சி.சி அபராதமாக விதித்தது.

ஆனால் தான் பந்தை சேதப்படுத்தவில்லை என்றும் தீர்ப்பை ஏற்கமாட்டேன் என்று டு பிளெசிஸ் தெரிவித்தார். அவருக்கு 48 மணி நேரத் தில் தீர்ப்பை எதிர்த்து மேல் முறையீடு செய்ய வாய்ப்பு வழங்கப்பட்டது. இந்த நிலை யில் தனக்கு வழங்கப்பட்ட தீர்ப்பை எதிர்த்து டு பிளெசிஸ் ஐ.சி.சி.யிடம் மேன் முறையீடு செய்துள்ளார்.

## பந்து வீசுவதற்கு அதிக நேரம்; இலங்கை அணிக்கு அபராதம்!



கொழும்பு, நவ.26

முத்தரப்பு ஒருநாள் கிரிக்கெட் தொடரில் மேற்கிந் திய தீவுகள் அணிக்கு எதிரான ஆட்டத்தில் பந்துவீச அதிக நேரம் எடுத்துக் கொண்டதாக இலங்கை அணிக்கு அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

ஜிம்பாப்வேயில் மூன்று அணிகள் பங்கேற்கும் முத்தரப்பு ஒருநாள் போட்டி நடைபெற்று வருகிறது.

இதில் நேற்று முன்தினம் நடந்த போட்டியில் இலங்கை மற்றும் மேற்கிந்திய தீவுகள் அணிகள் மோதின.

பரபரப்பான இந்தப் போட்டியில் கடைசி பந்தில் இலங்கை அணி 1 ஓட்ட வித்தி யாசத்தில் 'திரில்' வெற்றி பெற்றது.

இந்நிலையில் இந்தப் போட்டியில் இலங்கை அணி பந்துவீச அதிக நேரம் எடுத்துக் கொண்டதாக ஐ.சி.சி. அபரா தம் விதித்துள்ளது.

இதன்படி அணித்தலைவர் உபுல் தரங்காவுக்கு போட்டிக் கட்டணத்தில் இருந்து 20 சதவீதமும், மற்ற வீரர்களுக்கு 10 சதவீதமும் அபராதமாக விதிக்கப்பட்டுள்ளது.

## ஆசிய ஹொக்கி சம்மேளனக் கிண்ண போட்டியில் இலங்கை அரை இறுதிக்கு தகுதி



ஹொங்கொங், நவ.26

ஹொங்கொங்கில் நடைபெற்றுவரும் ஐந்தாவது ஆசிய ஹொக்கி சம்மேளன கிண்ணப் போட்டியின் அரை இறுதியில் விளையாடுவதற்கு இலங்கை தகுதிபெற்றுள்ளது.

தாய்லாந்துக்கு எதிராக நேற்று முன்தினம் நடைபெற்ற போட்டியில் 2 - 0 என்ற கோல்கள் கணக்கில் வெற்றி பெற்றதை அடுத்தே அரை இறுதியில் விளையாடுவதற்கு இலங்கை தகுதிபெற்றது.

இரண்டு அணிகளுக்கும் தீர்மானமிக்கதாக அமைந்த 'பி' குழுவுக்கான இப் போட்டியின் முதல் 35 நிமிட பகுதியில் இரண்டு அணிகளா லும் கோல் போட முடியாமல் போனது.

இடைவேளையின் பின்னர் இரண்டு அணிகளும் கடுமை யாக மோதிக் கொண்டன. இந்நிலையில் போட்டியின் 57ஆவது நிமிடத்தில் கிடைக்கப்பெற்ற பெனல்டி கோர்ணரைப் பயன்படுத்தி இலங்கையின் முதலாவது கோலை இன்க தொரனேகல போட்டார்.

போட்டியின் 60, 61 ஆவது நிமிடங்களில் இன்கவும் தாய்லாந்தின் சடாகோன் விமுட்டானோனுடம் மத்தியஸ்தரின் மஞ்சள் அட்டைக்கு இலக்கா கினர்.

போட்டி முடிவடைய சில செக்கன்கள் இருந்தபோது ஷாமிக்க குணவர்த்தன சாதுரிய மாகவும் அபாரமாகவும் செயற் பட்டு கள கோல் ஒன்றைப் போட இலங்கை 2 - 0 என்ற கோல்கள் அடிப்படையில் அபார வெற்றியீட்டியது.

இலங்கை தனது ஆரம்பப் போட்டியில் உஸ்பெகிஸ் தானை 7 - 2 என்ற கோல்கள் அடிப்படையில் வெற்றி கொண்டது. சிங்கப்பூருடனான போட்டியை 3- 3 என வெற்றி தோல்வியின்றி முடித்துக் கொண்டது.

'பி' குழுவில் முதலாம் இடத்தைப் பெற்ற இலங்கை, ஏ குழுவில் இரண்டாம் இடத்தைப் பெற்ற ஹொங் கொங்கை இன்று நடை பெறவுள்ள இரண்டாவது அரை இறுதியில் எதிர்த் தாடவுள்ளது.

# 20 வயதின் கீழ் மகளிர் உலகக் கிண்ணம்; அரை இறுதிகளில் வட கொரியா, ஜப்பான்



பப்புவா நியூகினி, நவ.26

பப்புவா நியூகினியில் நடை பெற்றுவரும் பீபா 20 வயதுக் குட்பட்ட மகளிர் உலகக் கிண்ண கால்பந்தாட்டத்தின் அரை இறுதிகளில் விளையா டுவதற்கு ஆசிய நாடுகளான வட கொரியாவும் ஜப்பானும் தகுதிபெற்றுள்ளன.

ஸ்பெய்னுக்கு எதிரான கால் இறுதிப் போட்டியின் மேலதிக நேரத்தின்போது போடப்பட்ட கோலின் உதவியுடன் 3 - 2 என்ற கோல்கள் அடிப்படை யில் வட கொரியா அபார வெற்றியீட்டி அரை இறுதியில் விளையாட தகுதிபெற்றது.

போர்ட் மோர்ஸ்பி தேசிய விளையாட்டரங்கில் நேற்று முன்தினம் நடைபெற்ற முதலாவது கால் இறுதிப் போட்டியின் முதலாவது பகுதி யில் அபார ஆற்றலை வெளிப்படுத்திய வட கொரியா சார்பாக ஜே. ஹியோ சிம், ஆர். ஹியங் சிம் ஆகியோர் மூலம் 2 கோல்களைப் போட்டனர். ஸ்பெய்ன் சார்பாக நஹிகாரி கோல் ஒன்றைப் போட்டார். இடைவேளையின் பின்னர் திறமையை வெளிப் படுத்திய ஸ்பெய்ன் எல். கார்சியா மூலம் கோல் நிலையை சமப்படுத்தியது.


இதனை அடுத்து இரண்டு அணிகளும் வெற்றிக் கோலுக்காக முயற்சித்த போதி லும் முழு நேர ஆட்டத்தின் போது அது கைகூடாமல் போனது.

இதனை அடுத்து வழங்கப்பட்ட மேலதிக நேரத்தில் இரண்டாவது பகுதி யின் முதலாவது நிமிடத்தில் கே. பியொங் ஹுவா அலாதி யான கோல் ஒன்றைப் போட்டு வட கொரியா அரை இறுதி க்குள் நுழைவதை உறுதி செய்தார். போர்ட் மோர்ஸ்பி தேசிய விளையாட்டரங்கில் நடைபெற்ற மற்றொரு கால் இறுதிப் போட்டியில் பிரேஸிலை 3 - 1 என்ற கோல்கள் அடிப்படையில் ஜப்பான் இலகுவாக வெற்றி பெற்றது.

ஜப்பான் சார்பாக மோரியா, மட்சுபாரா ஆகியோர் கோல் களைப் போட்டனர்.

போட்டியின் கடைசிக் கட்டத்தில் பிரேஸிலுக்கு கிடைத்த பெனல்டியை கபி நனெஸ் கோலாக்கினார்.

மூன்றாவது கால் இறுதிப் போட்டியில் ஐக்கிய அமெ ரிக்கா, மெக்ஸிகோ அணிகளும் கடைசி கால் இறுதிப் போட்டியில் ஜேர்மனி, பிரான்ஸ் அணிகளும் விளையாடவுள்ளன.



# கோஹ்லி பந்தை சேதப்படுத்தினாரா?

## பயிற்சியாளர் கும்பிளே பதில்





மொகாலி, நவ.26

இந்திய அணித் தலைவர் விராட் கோஹ்லி பந்தை சேதப்படுத்தியதாக எழுந்த புகாரை பயிற்சியாளர் கும்பிளே திட்டவட்டமாக மறுத்துள்ளார்.

இந்தியா - இங்கிலாந்து அணிகளுக்கு இடையிலான 3 ஆவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டி மொகாலியில் இன்று ஆரம்பமாகிறது. இதையொட்டி இந்திய வீரர்கள் நேற்று முன்தினம் தீவிர பயிற்சியில் ஈடுபட்டனர்.

இந்த பயிற்சிகளின் பின்னர் இந்திய அணியின் தலைமை பயிற்சியாளர் அனில் கும்பிளே ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்தார். அப்போது அவரிடம், இந்திய அணித் தலைவர் விராட் கோஹ்லி ராஜ்கோட் டெஸ்டின் போது பந்தை சேதப்படுத்த முயற்சி செய்ததாக இங்கிலாந்து பத்திரிகை செய்தி வெளியிட்டு இருப்பது குறித்து கேள்வி எழுப்பப் பட்டது.

அதற்கு பதில் அளித்த கும்பிளே,


'ஊடகத்தின் புகாருக்கு பதில் அளிக்க விரும்பவில்லை. என்னைப் பொறுத்தவரை கள நடுவர்களோ அல்லது போட்டி நடுவரோ யாரும் இது பற்றி எங்களிடம் வந்துபேசவில்லை. இந்த விவகாரத்துக்கு நாங்கள் முக்கியத்துவம் கொடுக்க விரும்பவில்லை. அது பற்றி எங்களுக்கு எந்த கவலையும் இல்லை. மக்கள் குற்றம் சுமத் தலாம். ஊடகத்தினர் எதையும் எழுதிக்கொள்ளலாம்.

ஆனால், எங்கள் அணியை பொறுத்தவரை இது போன்ற செயல்களில் யாருக்கும் தொடர்பு கிடையாது. தென்னாபிரிக்க கிரிக்கெட் அணி அற்புதமான ஆட்டத்தை வெளிப்படுத்தி ஆஸ்திரேலியாவை அதன் சொந்த மண்ணில் 2-0 என்ற கணக்கில் தோற்கடித்து இருக்கிறது. பந்தை சேதப்படுத் தியதாக தென்னாபிரிக்க அணித்தலைவர் டு பிளெசிஸ் மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டு சிறுபிள்ளைத் தனமானது. சிறிய விடயத்தை பெரிதாக்கி விட்டார்கள்' என்று தெரிவித்துள்ளார்.

மேலும், சிறந்த அனுபவத்தையும், திறமை யையும் கருத்தில் கொண்டே இளம் விக்கெட் காப்பாளர் ரிஷாப் பான்ட்டை விட பார்த்தீவ் பட்டேலின் தேர்வுக்கு முன்னுரிமை அளிக்கப்பட்ட தாகவும் கும்பிளே தெரிவித்துள்ளார்.

இதேவேளை, இன்றைய 3 ஆவது டெஸ்ட் தொடரில் இங்கிலாந்து அணியின் சகலதுறை ஆட்டக்காரர் கிறிஸ் வோக்ஸ் நேற்று முன்தினம் ஊடகவியலாளர்களுக்குக் கருத்துத் தெரிவிக்கையில்,

'2 ஆவது டெஸ்டில் இந்திய அணித் தலைவர் விராட் கோஹ்லி அதிக ஓட்டங்களைக் குவித்து விட்டார். எனவே தகுந்த யுக்தியுடன் களம் இறங்கி அவரது ஓட்டக் குவிப்பை தடுக்க முயற்சிப்போம். ஆனால் களத்தில் அவர் நிலைத்து நின்று விட்டால், அதன் பின்னர் அவரை வீழ்த்துவது கடினம்' என்றும் தெரிவித்துள்ளார்.



### ஆசிய கோப்பை மகளிர் கிரிக்கெட் போட்டி இன்று ஆரம்பம்

கொழும்பு, நவ.26

ஆசிய கோப்பை மகளிர் கிரிக்கெட் போட்டி தாய்லாந் தின் பாங்கொங்கில் இன்று ஆரம்பமாகி எதிர்வாரம் டிசெம்பர் 4 ஆம் திகதிவரை இடம்பெறவுள்ளது.

இதில் இந்தியா, பாகிஸ்தான், இலங்கை, பங்களாதேஷ், நேபாளம், தாய்லாந்து ஆகிய 6 நாடுகள் கலந்து கொள்ள வுள்ளன.

இதற்கிடையே, ஐ.சி.சி.யில் நடவடிக்கையால் இந்திய கிரிக்கெட் சபை கடும் அதி ருப்திக்குள்ளாகி இருக்கும் சூழலில், ஆசிய கோப்பை கிரிக்கெட்டில் இந்திய பெண்கள் அணி பங்கேற் குமா? என்ற சந்தேகம் எழுந்தது.

இந்த நிலையில் ஆசிய கோப்பை பெண்கள் கிரிக்கெட் போட்டியில் இந்திய அணி கலந்து கொள்ளும் என்று இந்திய கிரிக்கெட் சபை இணை செயலாளர் அமிதாப் சவுத்ரி உறுதி செய்துள்ளார்.

இதேவேளை, இலங்கை அணியின் வீராங்கனைகள் இந்தப் போட்டியில் பங்குபற்றுவதற்காக நேற்றுக் காலை பாங்கொங்குக்கு புறப்பட்டு சென்றுள்ளனர்.

### இன்று 3 ஆவது டெஸ்ட்:

# இந்தியா அதிரடி தொடருமா?

மொகாலி, நவ.26

இங்கிலாந்து அணிக்கு எதிராக மொகாலியில் இன்று நடைபெறும் 3 ஆவது டெஸ்ட் போட்டியில் இந்திய அணியின் அதிரடி தொட ருமா? என்று எதிர்பார்க் கப்படுகிறது.

இந்தியாவில் சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ள இங்கிலாந்து கிரிக்கெட் அணி 5 டெஸ்ட் போட்டிகள், 3 ஒரு நாள் போட்டிகள், மூன்று 20 ஓவர் போட்டி களில் விளையாடவுள்ளது.

டெஸ்ட் தொடரில் ராஜ்கோட்டில் நடந்த முதல் டெஸ்ட் சமநிலையில் முடிந்தது. விசாகப்பட்டின த்தில் இடம்பெற்ற 2 ஆவது டெஸ்டில் இந்தியா 246 ஓட்டங்கள் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்றது. இத னால் 1-0 என்ற நிலையில் இந்தியாமுன்னிலையில்உள்ளது

இரு அணிகளும் மோதும் 3 ஆவது டெஸ்ட் போட்டி இன்று மொகாலியில் தொடங் குகிறது. இலங்கை நேரப்படி காலை 9.30 மணிக்கு போட்டி ஆரம்பமாகவுள்ளது. 2 ஆவது டெஸ்டில் அசத்திய இந்திய அணி இப்போட்டி யிலும் அதிரடியை தொடரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இதில் வென்று 2-0 என்ற கணக்கில் முன்னிலை பெறும் ஆர்வத்தில் இருக்கிறது.

இந்தியாவின் பேட்டிங்கில் அணித்தலைவர் விராட் கோஹ்லி முதுகெலும்பாக திகழ்கிறார். இத்தொடரில் அவர் இதுவரை ஒரு சதம்,



ஒரு அரைசதம் உட்பட 337 ஓட்டங்களைக் குவித்து உள்ளார். மேலும் முரளி விஜய், புஜாரா ஆகியோரும் நல்ல நிலையில் உள்ளனர்.

அணிக்கு திரும்பி உள்ள தொடக்க வீரர் லோகேஷ் ராகுல் 2 ஆவது டெஸ்டில் சோபிக்கவில்லை. எனவே அவர் இந்தப் போட்டியில் திறமையை நிரூபிக்கும் கட்டாயத்தில் உள்ளார். இதேபோல் ரகானேவும் ஓட்டங்களை குவிக்க வேண்டிய கட்டாயத்தில் உள்ளார். இருந்தபோதிலும் இந்தியாவின் துடுப்பாட்டம் வலிமையாகவே காணப் படுகிறது. காயம் அடைந்த சகாவுக்கு பதில் பார்த்தீப் பட்டேல் விளையாடுகிறார்.

பந்துவீச்சில் தமிழகத்தை சேர்ந்த சுழற்பந்து வீச்சாளர் அஸ்வின் முதன்மையாக உள்ளார். முதல் டெஸ்டில் சோபிக்காத அவர் 2 ஆவது டெஸ்டில் 8 விக்கெட் வீழ்த்தி னார். மேலும் ஜடேஜா, ஜெயந்த் யாதவ் ஆகியோரும் வேகப்பந்து வீச்சில் முகமது ஷமி, உமேஷ்யாதவ் ஆகி யோரும் நல்ல நிலையில் இருக்கிறார்கள்.

அதே உத்வேகத்தை தொடர்ந்தால் இங்கிலாந்தை வீழ்த்துவது எளிது. மொகாலி ஆடுகளமும் சுழற்பந்து வீச்சுக்கு ஒத்துழைக்கும். இதனால் இந்திய ஆதிக்கம் செலுத்தும் என்று எதிர்பார்க் கப்படுகிறது.

அலஸ்டர் குக் தலைமை யிலான இங்கிலாந்து அணி முதல் டெஸ்டில் போராட்ட குணத்தை வெளிக்காட்டியது. ஆனால் 2 ஆவது டெஸ்டில் சுழற்பந்து வீச்சுக்கு தாக்கு பிடிக்காமல் சரணடைந்தது.

இதனால் அந்த அணி சுழற்பந்து வீச்சை எதிர் கொள்ள தீவிர பயிற்சி எடுத்து வருகிறது. அஸ்வின் பந்தில் திணறிய பென் டக்கெட்டுக்கு பதிலாக பட்லர் சேர்க்கப்பட்டு ள்ளார். அணித்தலைவர் குக், ஜோரூட், ஹமீத், மொயின் அலி, பென் ஸ்டோக்ஸ், பேர்ஸ்டோவ் போன்ற சிறந்த துடுப்பாட்டக் காரர்களும் உள்ளனர்.

பந்துவீச்சில் ஆண்டர்சன், ரஷீத், ஸ்டோக்ஸ், மொயின் அலி உள்ளனர். காலில் காயம் அடைந்துள்ள ஸ்டுவர்ட் பிராட் விளையா டுவது சந்தேகம். இதேபோல் சுழற்பந்து வீச்சாளர் அன்சாரி யும் காயம் அடைந்துள்ளார்.

இவர்களுக்கு பதில் ஸ்டீவன் பின், கிரேப்பட்டி இடம் பெறலாம். இங்கிலாந்து அணி திடீரென எழுச்சி பெறும் திறமை கொண்ட அணியாகும். 2 ஆவது டெஸ்டில் ஏற்பட்ட தோல்விக்கு பதிலடி கொடுக்க முயற்சிக்கும் என்றும் எதிர்பார்க்கப் படுகிறது.

# இலங்கையை வறுமையின் பிடியிலிருந்து விடுவிக்கும் ஆண்டாக 2017 பிரகடனம்

*ஜனாதிபதி, பிரதமர் தலைமையில் நேற்று முக்கிய கூட்டம்*

இலங்கையை வறுமையிலிருந்து விடுவிக்கும் ஆண்டாக 2017 ஆம் ஆண்டு அரசால் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது. இது தொடர்பான உயர்மட்டக் கலந்துரையாடல் ஒன்று நேற்று வெள்ளிக்கிழமை நாடாளுமன்றத்தில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையில் இடம்பெற்றது. அதன்போது இதற்கான செயற்பாட்டுக் குழுவொன்று அமைக்கப்பட்டுள்ளது.

அமைச்சர் சரத் அமுனுகம தலைமையிலான அக்குழுவின் ஏனைய உறுப்பினர்களாக அமைச்சர்களான ரவி கருணாநாயக்க, கபீர் ஹசிம், சஜித் பிரேமதாச, தென் மாகாண ஆளுநர் ஹேமகுமார நாணயக்கார, வடக்கு மாகாண ஆளுநர் ரெஜினோல்ட் குரே, வணக்கத்துக்குரிய அத்துரலியே ரத்ன தேரர், ஜனாதிபதியின் செயலாளர் பி.பீ. அபேகோன், பிரதமரின் செயலாளர் சமன் ஏக்கநாயக்க ஆகியோர் செயற்படுவார்கள்.

நேற்றைய கலந்துரையாடலில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, அமைச்சர்கள், மாகாண ஆளுநர்கள், முதலமைச்சர்கள், ஜனாதிபதியின் செயலாளர் பி.பீ.அபேகோன், அமைச்சுக்களின் செயலாளர்கள், அரச அலுவலர்கள் பங்குபற்றியிருந்தனர்.

இக்கலந்துரையாடலில்பிரதமர், முதலமைச்சர்கள், மத்திய வங்கி ஆளுநர் மற்றும் சமூக வலுவூட்டல் அமைச்சின் அலுவலர்களும் விரிவாக கருத்துக்களை முன்வைத்தனர்.

அனைத்து விடயங்களையும் கவனத்திலெடுத்த ஜனாதிபதி, இச் செயற்றிட்டம் அடிமட்டத்திலிருந்து செயற்பாட்டு ரீதியாக அமுல்படுத்தப்பட வேண்டுமெனவும் அனைத்து மாகாண சபைகள் மற்றும் நிரல் அமைச்சுக்களும் ஒன்றுகூடி, கலந்துரையாடி, சுருக்கமான முன்மொழிவுகளைச் சமர்ப்பிக்க வேண்டுமெனவும் ஆலோசனை வழங்கினார்.

எதிர்வரும் ஜனவரி முதல் வாரத்தில் அனைத்து அமைச்சுக்களும் இச்செயற்றிட்டத்துக்குரிய செயற்பாடுகளை அமுல்படுத்த வேண்டும். நியமிக்கப்பட்ட விசேட செயற்பாட்டுக் குழு தொடர்ச்சியாக அவற்றை ஆராய்ந்து தேவையான ஒருங்கிணைப்பை மேற்கொள்ள வேண்டும் என்றும் ஜனாதிபதி ஆலோசனை வழங்கினார்.

நாட்டின் வறுமைச் சுட்டியை தாழ் மட்டத்துக்கு கொண்டுவந்து வறுமையால் வாடும் மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்காக இந்த செயற்றிட்டத்தை வெற்றியடையச் செய்ய வேண்டியதன் முக்கியத்துவத்தையும் ஜனாதிபதி இங்கு சுட்டிக்காட்டினார்.

இச் செயற்றிட்டத்தின் ஆரம்ப நடவடிக்கைகள் தொடர்பான கலந்துரையாடலொன்று ஜனாதிபதியின் தலைமையில் அடுத்த மாதம் இடம்பெறும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம)

*ஊர்காவற்றுறையில் கூட்டமைப்பு மீது தாக்குதல்*

# நடராஜா ரவிராஜின் சாட்சியம் மீது யாழ். மேல் நீதிமன்றில் விசாரணை



யாழ்ப்பாணம், நவ.26

ஊர்காவற்றுறையில் கடந்த 2001ஆம்ஆண்டுதமிழ்த்தேசியக்கூட்டமைப்புஉறுப்பினர்கள் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதலில்இருவர்கொல்லப்பட்டமை தொடர்பில் - அப்போது ஊர்காவற்றுறை நீதிமன்றில் –அமரர்நடராஜாரவிராஜ்அளித்தசாட்சியம் நேற்று யாழ்.மேல் நீதிமன்றில்விசாரணைக்குஎடுக்கப்பட்டது.

கடந்த 2001 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 28 ஆம் திகதி தீவகத்தில் தேர்தல் பிரசாரத்தில் ஈடுபடச் சென்ற தமிழ்த் தேசிய கூட்டமைப்பினரை ஊர்காவற்றுறையில் வழிமறித்து நடத்தப்பட்ட தாக்குதலில் இருவர் கொல்லப்பட்டனர்; 20 பேர் வரையில் படுகாயமடைந்திருந்தனர்.

இது தொடர்பான வழக்கு ஊர்காவற்றுறை, திருகோணமலை நீதிமன்றங்களில் நடைபெற்றுவந்தநிலையில்,தற்போது சட்டமாஅதிபரினால்யாழ்.மேல் நீதிமன்றுக்குமாற்றப்பட்டுஅங்கு விசாரணைகள் நடைபெற்று வருகின்றன.

இந்த வழக்கு விசாரணை நேற்று யாழ்.மேல் நீதிமன்றில் நீதிபதி மா.இளஞ்செழியன் முன்னிலையில் இடம்பெற்ற போது,கூட்டமைப்பின்முன்னாள் நாடாளுமன்றஉறுப்பினர்அமரர் நடராஜா ரவிராஜ், முன்னர் ஊர்வாற்றுறை நீதிமன்றில் இடம்பெற்ற பூர்வாங்க விசாரணையின் போது வழங்கிய சாட்சியம் விசாரணைக்கு எடுத்து கொள்ளப்பட்டது.

அரச தரப்பு சட்டத்தரணி நாகரட்ணம்நிசாந்தன்வழக்கை நெறிப்படுத்தியிருந்தார். ஊர்காவற்றுறைத்தாக்குதல்சம்பவம் தொடர்பில் சாட்சியம் வழங்கிய நடராஜா ரவிராஜ் கொழும்பில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டு சம்பவத்தில் இறந்து விட்டார் எனச்சுட்டிக்காட்டியசட்டத்தரணி, அதன் மரண சான்றிதழை நீதிபதியிடம் சமர்ப்பித்திருந்தார்.

ரவிராஜ் என்பவர் உயிருடன் இருக்கும் போது ஊர்காவற்றுறை நீதிவான் நீதிமன்றில் சுருக்கமுறையற்ற விசாரணையின் போது வழங்கிய சாட்சியத்தை நீதிமன்ற முதலியார் ஊடாகப்பதிவுசெய்வதற்குஅரச தரப்பு சட்டத்தரணி நீதிபதியின் அனுமதியைக் கோரினார்.

இதற்கு எதிர்தரப்பு சட்டத்தரணி மு.றெமிடியஸ் கடும் ஆட்சேபனைவெளியிட்டார்.அவரது ஆட்சேபனையைநிராகரித்த நீதிபதி மா.இளஞ்செழியன், ரவிராஜ்ஜின் சாட்சியத்தை பதிவு செய்ய அனுமதியளித்தார்.

ஊர்காவற்றுறை நீதிமன்ற வழக்கேட்டில்கோவைப்படுத்தப்பட்டிருந்த ரவிராஜின் சாட்சி யத்தை, சாவகச்சேரி நீதிமன்றில் இருந்து அழைக்கப்பட்டிருந்த முதலியார்நடராஜாதிருக்குமரன் வாசித்து சாட்சியம் அளித்தார். (ம-09)

*தெரணியகல நூரி தோட்ட முகாமையாளர் கொலை வழக்கில்*

# அவிசாவளை மேல் நீதிமன்றால் 18 பேருக்கு மரண தண்டனை!

கொழும்பு நவ.26

அவிசாவளை – தெரணியகல நூரிதோட்டத்தின் முகாமையாளர் நிஹால்பெரேரா வெட்டிக்கொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பில் தெரணியாகல பிரதேச சபையின் முன்னாள்தலைவர் அத்தகொட்டா உட்பட 18 பேருக்கு அவிசாவளை மேல் நீதிமன்றம் மரண தண்டனை விதித்து தீர்ப்பளித்துள்ளது.

அந்தச்சம்பவத்தில் 21சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டு விசாரணை இடம்பெற்று வந்த நிலையில், மூன்று பேரை நிபந்தனையற்று விடுதலை செய்வதற்கு மேல் நீதிமன்ற நீதிபதி தேவிகா அபேரத்ன உத்தரவிட்டார்.

மேற்படி, நூரி தோட்டத்தின் முகாமையாளர் நிஹால்பெரேரா கடந்த 2013 ஆம் ஆண்டு ஜுலை மாதம் 05 ஆம் திகதி காலை வெட்டிக்கொலை செய்யப்பட்டார். இந்தக் கொலைச் சம்பவத்தின் போது மரணமடைந்த முகாமையாளரின் காவலாளிகள் மூவரும் படுகாயமடைந்திருந்தனர்.

இந்தச் சம்பவம் தொடர்பான விசாரணைகள் கடந்த மூன்று வருடங்களாக இடம்பெற்றுவந்தன. இந்த நிலையில், குற்றம் நிரூபிக்கப்பட்ட தெரணியகல பிரதேச சபையின் முன்னாள் தலைவர் அனில் சம் பிக்க விஜேசிங்க எனப்படும் அத்தகொட்டா உள்ளிட்ட 18 பிரதிவாதிகளுக்கே நேற்று மரண தண்டனை விதிக்கப்பட்டது.

பிரதேசத்தில் இடம்பெறுகின்ற பல்வேறு குற்றச்சாட்டுக்களுடன் மேற்படி குழுவினர் சம்பந்தப்பட்டிருந்த போதிலும் அரசியல்வாதி ஒருவரின் அதிகாரத்தால் இவர்கள் மீது இது வரை சட்டநடவடிக்கை எடுக்கப்படவில்லை என்றும் பிரதேச மக்களால் குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டிருந்தமையும் குறிப்பிடத்தக்கது. (உ-அ-11)

# மன்னாரில் வாடி அமைத்த தெற்கு மீனவருக்குப் பிணை

மன்னார், நவ.26

மன்னார், முள்ளிக்குளம், காயாக்குழி பிரதேசத்தில் அத்துமீறி வாடிகளை அமைத்த தென்பகுதி மீனவர்களை சொந்த பிணையில் செல்ல மன்னார் மாவட்ட நீதிமன்றம் அனுமதி வழங்கியுள்ளது.

காயக்குழி பிரதேசத்தில் தென்பகுதி மீனவர்கள் தொழில் நடவடிக்கைகளில் ஈடுபடவும் அங்கு தங்கியிருப்பதற்கும் நீதிமன்றம் இடைக்கால தடை உத்தவைப் பிறப்பித்துள்ளது.

மன்னார் , முள்ளிக்குளம், காயாக்குழிப்பிரதேசத்தில் மீன்பிடியில் ஈடுபடும் தென்னிலங்கையைச்மீனவர்கள் அந்தப்பிரதேசங்களில் அத்து மீறி நிரந்தர வாடிகளை அமைக்கின்றமை தொடர்பாக மன்னார் மீனவர்களால் சிலாவத்துறை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டது.

அத்துடன், மன்னார் நீதிமன்றத்திலும் வழக்குத்தாக்கல் செய்யப்பட்ட நிலையில் நேற்று இந்த வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

இதன்போது நீதிமன்றத்தில் முன்னிலையான தென்னிலங்கையைச் சேர்ந்த 6 மீனவர்களைச் சொந்தப் பிணையில் செல்ல மன்னார் நீதி மன்றம் அனுமதி வழங்கியது.

அத்துடன், குறித்த வழக்கு விசாரணை எதிர்வரும் ஜனவரி மாதம் 19ஆம் திகதிக்கு ஒத்தி வைக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, சிங்கள மீனவர்களின் பிரச்சினை தொடர்பாக மீன்பிடி அமைச்சின் செயலாளர் சம்பவ இடத்துக்குச் சென்றுநிலைமைகளை ஆராயவுள்ளமையும்குறிப்பிடத்தக்கது.

எவ்வாறாயினும், மன்னார், முள்ளிக்குளம், காயாக்குழி பிரதேசத்தில் தென்னிலங்கை மீனவர்கள் மீன்பிடியில் ஈடுபடுவதை ஏற்றுக்கொண்டுள்ள மன்னார்மீனவர்கள், அந்தபிரதேசங்களில் அத்துமீறி வாடிகளை அமைப்பதற்கும், நிரந்தரமாகக் குடியேறுவதற்கும் அனு மதிக்க முடியாது எனத் திட்ட வட்டமாகத் தெரிவித்துள்ளனர். (உ)

# எங்களிடமும் துப்பாக்கிகள் இருந்தன நாம் சுடவில்லை; அடிபட்டு விழுந்தோம்

*மாவையின் மெய்ப்பாதுகாவலரான பொலிஸ் சாட்சியம்*

யாழ்ப்பாணம் நவ.26

''மாவை சேனாதிராஜா ஐயாவை அடிக்க இரும்புக் கம்பியை ஓங்கினார்கள். நான்தட்டி விட்டேன். அந்த அடி எனக்கு விழுந்தது. அன்று எங்களிடமும் துப்பாக்கிகள் இருந்தன. ஆனால்நாம்சுடவில்லை.பிரச்சினையை சுமுகமாக முடிக்கவே நினைத்தோம்"–

–இவ்வாறு, ஊர்காவற்றுறையில்கூட்டமைப்பு மீது 2001ஆம் ஆண்டு நடத்தப்பட்ட தாக்குதலின்போது,மாவைசேனாதிராஜாவின் மெய்ப்பாதுகாவலராகக் கடமையில் இருந்த பொலிஸ் உத்தியோகத்தர் தர்மரட்ணம் தமிழ்வேந்தன் தெரிவித்தார்.

மேற்படிசம்பவம்தொடர்பான வழக்கில் 15 ஆவது சாட்சியான இவர் நேற்று யாழ். மேல் நீதிமன்றில் சாட்சியமளிக்கையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

கடந்த 2001 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 28 ஆம் திகதி தேர்தல் பிரசாரத்துக்காக ஊர்காவற்றுறைக்குச்சென்றதமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் மீது தாக்குதல் நடத்தி இருவரை படுகொலை செய்த வழக்கு விசாரணை 15 வருடங்களின் பின்னர் யாழ்.மேல் நீதிமன்றில் நடைபெற்று வருகின்றது.

யாழ்.மேல் நீதிமன்றில் நீதிபதி மா.இளஞ்செழியன் முன்னிலையில் நடைபெற்று வரும்விசாரணையில் 5 ஆவது நாளான நேற்று தமிழ்வேந்தன் என்ற முன்னாள் பொலிஸ் உத்தியோகத்தர் சாட்சியமளித்தார்.

சட்டமாஅதிபர்திணைக்களத்தின் சட்டத்தரணி நாகலிங்கம் நிஷாந்தன் குறித்த சாட்சியிடம் கேள்விகளைக் கேட்க அவர் பதிலளித்தார்.

அவர் தனது சாட்சியத்தில்–

பொலிஸ்திணைக்களத்தில் சப்இன்ஸ்பெக்டராக இணைந்த நான், பின்னர் மாவைசேனாதிராஜாவின் மெய்பாதுகாவலராக நியமிக் கப்பட்டேன். சம்பவம் இடம்பெற்றதினமான 2001ஆம் ஆண்டுநவம்பர்மாதம் 28ஆம் திகதி கூட்டமைப்பின் தேர்தல் பிரசாரத்துக்காக நாங்கள் வாகனத்தில் ஊர்காவற்றுறைக்குப் போய்க் கொண்டிருந்தோம்.

அப்போது நாரந்தனைச் சந்தியில் வெள்ளை நிற ஹப் வாகனம் ஒன்றுவீதியை மறித்து நின்றிருந்தது. முதலாவதாக சிவாஜிலிங்கத்தின் வாகனம் நின்றது. எங்களுடையவாகனம் நான்காவதாக நின்றது. முதலாவது வாகனம் தாக்கப்பட்டு துப்பாக்கி சத்தமும் கேட்டது. அப்போது எங்கள் காரைத் திருப்பமுடியாமல்போனது. வாகனத்தை ஓரமாக நிறுத்திவிட்டு வெளியில் வந்து நின்றோம்.

அப்போது, அங்கிருந்த 60 தொடக்கம் 80 பேர் வரையானோர் கையில் வாள், இரும்புக் கம்பி, செயின், துப்பாக்கி என்பவற்றுடன் எங்களை நோக்கி ஓடி வந்தனர். அப்போது மாவை சேனாதிராஜா மீது தாக்குதல் நடத்தவந்தவர்களை நான்தட்டி விட்டேன். அவருக்குவிழவிருந்த இரும்பு அடி என் மீது பட்டது. இப்போதும் அதன் உள்காயம் இருக்கிறது.

நிறையப் பேர் என்னை பிடித்துக்கீழேதள்ளிவீழ்த்தினார்கள். அப்போது, "இவன் தமிழ் பொலிஸ். இவனை விடுங்கோ" என்று யாரோ சொன்னார்கள்.

நான்வெளியில்வந்துபார்த்த போது மாவை சேனாதிராஜா தலையிலும் கையிலும் இரத்த காயத்துடன் நின்றிருந்தார். அவரை ஆஸ்பத்திரிக்கு அழைத்து வந்தோம். – என்றார்.

மேலும், 'வெள்ளைக் காற்சட்டை அணிந்து இருந்த நபர் தான் எங்களைத் தாக்கினார்' என நான் வைத்தியசாலையில் கூறினேன். அப்போது, 'அவர் தான் நெப்போலியன் என வைத்தியசாலையில் நின்றவர்கள்கூறினார்கள்' என்றும் அவர் தனது சாட்சியத்தில் கூறினார்.

இந்த வழக்கு விசாரணை எதிர்வரும் 28 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது. அன்றைய தினம் மாவை.சேனாதிராஜா, எம்.கே.சிவாஜிலிங்கம் ஆகியோர்சாட்சியம்அளிப்பர்என்றும் கூறப்பட்டது. (ம-09)

காலைக்கதிர்
Kalaikkathir

# தகவல் அறியும் உரிமைச் சட்டம் ஜனவரி முதல் நடைமுறைக்கு வரும்

தகவல் அறியும் உரிமை தொடர்பான சட்டம் அடுத்த வருடம் ஜனவரி4ஆம் திகதி முதல் முழுமையாகஅமுல்படுத்தப்படும் என்று நாடாளுமன்ற விவகாரங்கள்மற்றும்தகவல்ஊடகத்துறை பிரதி அமைச்சர் கருணாரட்ன பரணவிதான தெரிவித்தார்.

இந்தச் சட்டத்தை அரச அங்கீகாரம் பெற்ற நிர்வாகச் சட்டமாக மாற்றி அமைப்பதற்கான வேலைத்திட்டத்தின் இறுதி நடவடிக்கைகள் தற்சமயம் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என பிரதி அமைச்சர் கூறினார்.

தகவல் அறியும் உரிமை தொடர்பாக அரச அதிகாரிகளுக்கு அறிவுறுத்தும் செயலமர்வு நேற்று முன்தினம் கொழும்பில் இடம்பெற்றது. இந்தச்செயலமர்வை இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிலையம் ஏற்பாடு செய்திருந்தது.

நாடாளுமன்ற விவகாரங்கள் மற்றும் தகவல் ஊடகத்துறை பிரதி அமைச்சர் கருணாரட்ன பரணவிதான இங்கு மேலும் உரையாற்றுகையில்:-

இந்தச் சட்டத்துக்கு அமைவாக அங்கீகரிக்கப்பட்ட அரச நிறுவனங்கள் மற்றும் தேசிய ஆவணங்கள் திணைக்களம் உட்பட வேறு பல அரச நிறுவனங்களும் இந்த வேலைத்திட்டத்தில் இணைந்துள்ளன. இந்தச் சட்டம் முழுமையாக அமுலாக்கப்படுவதற்கு முன்னர் அதற்கான முன்னேற்பாட்டு வேலைத்திட்டங்கள் பூர்த்தி அடைய வேண்டும். – என்றும் குறிப்பிட்டார்.

# காயங்களுடன் மீட்கப்பட்டவரை அடையாளம் காண உதவுங்கள்



யாழ். – வட்டுக்கோட்டை வீதியில், கல்லுண்டாய் வெளியில் வாள்வெட்டுக்கு இலக்காகி படுகாயமடைந்த நிலையில், யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்ற நபரை அடையாளம் காண உதவுமாறு மானிப்பாய் பொலிஸ் பொறுப்பதிகாரி எச்.ஜீ.என்.டி.ஜெயவீரகோரிக்கை விடுத்துள்ளார்.

45-50 வயது மதிக்கத்தக்க மேற்படி நபர் கடந்த 16 ஆம் திகதி முன்னிரவு கல்லுண்டாய் வெளிப் பகுதியில் வாள்வெட்டுக்கு இலக்கான நிலையில் மீட்கப்பட்டு யாழ். போதனா வைத்தியசாலையின் அதிதீவிர சிகிச்சைபிரிவில்சேர்க்கப்பட்டுள்ளார்.

இவர்இதுவரைபேசமுடியாத நிலையில் உள்ளமையால் அவரை அடையாளம் காண பொலிஸார் பொதுமக்களின் உதவியை நாடியுள்ளனர்.

இது தொடர்பாக தகவல் தெரிந்தவர்கள் 0212255160, 0773162135 ஆகிய தொலைபேசி இலக்கங்களுக்கு அறியத் தருமாறுகோரப்பட்டுள்ளது.(ம-09)

## வன்னி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பினர் திருமதி சாந்தி சிறிஸ்கந்தராஜா ஒழுங்குபடுத்துவார் எனவும் அந்தத் தகவல்கள் தெரிவித்தன.

முல்லைத்தீவு பிரதேச மக்களும் பிரமுகர்களும் வன்னி வேளாங்குளத்தில்நாளைமாலை நடைபெறும் நினைவேந்தல் நிகழ்வில் பங்குபற்றுவர் என எதிர்பார்க்கப்படுகிறது.

இதேசமயம், மன்னார்மாவட்டத்தில்பண்டிவிருச்சான், ஆண்டான்குளம், ஆட்காட்டி வெளி ஆகியஇடங்களில்உள்ளமாவீரர் துயிலும்இல்லங்கள்இராணுவப் பிடியிலிருந்து விடுவிக்கப்பட்டாலும், அவற்றைத் துப்புரவு செய்யும்நடவடிக்கைஏதும்முன்னெடுக்கப்படும் சாத்தியம் இருப்பதாகத் தெரியவில்லை.

அந்தத் துயிலும் இல்லங்களுக்குஅருகேபடைமுகாம்கள் இருக்கின்றன. அல்லது அவை பரந்த வெட்டவெளிக்கு நடுவில் உள்ளன. அதனால் அங்கு சென்று சிரமதானம் செய்யும் சூழல் காணப்படவில்லை என மன்னார் வட்டாரங்கள் சில தகவல்கள் வெளியிட்டன.

எனினும், ஆண்டான்குளத்தில் மாவீரர் துயிலும் இல்லத்துக்கு நேரெதிரே உள்ள கிறிஸ்தவ சேமக்காலையில் அஞ்சலி நிகழ்வு ஏற்பாடுசெய்யப்படலாம் என எதிர்பாக்கப்படுகிறது.

இதேசமயம், மன்னார்நகரப் பகுதியிலும் நாளை மாலை நினைவு அஞ்சலி நிகழ்வுகள் கனகச்சிதமாகநடத்தப்படும்என ஒரு தகவல் தெரிவித்தது. (உ)

## உறவுகளுக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

களுக்காக கண்ணீர் வருவதும், அஞ்சலி செலுத்துவதும் மக்களின் அடிப்படை உரிமையாகும். இவ்வுரிமைமணங்களுக்கு, ஆத்மாக்களுக்கு ஆறுதல் தருவதாகும்.

மதநம்பிக்கைகொண்டமக்கள் உயிர் நீத்தஉறவுகளின் ஆத்மாக்களுக்கு அஞ்சலி செலுத்துவது மட்டுமல்ல, அவரவர் நம்பிக்கையின் படி ஈமைக்கடன் செய்வதும் பாரம்பரியம் ஆகும். கடமையுமாகும்.

இதில் வெற்றி – தோல்வி என்றபரிசீலனைக்குஇடமில்லை. தெற்கு – வடக்கு என்ற வேறுபாடில்லை. அதில் மனித குலத்தின் அடிப்படை உரித்தே முக்கியமானதாகும்.

இந்தச் சந்தர்ப்பத்தில் அனைவரும் மனிதநேயத்துடன் தங்களுக்கேற்றவாறு அஞ்சலி செலுத்துவதே உயர்ந்த பண்பும் நாகரிகமும் ஆகும்.

எனவே இன்றுள்ள சூழ்நிலைகளை மதிப்பிட்டு எந்த சன்னதங்களுக்கும் இடம் கொடுக்காமல் அமைதியான முறையில் கோவில்களில், வீடுகளில் நீர் நிலைகளில், நினைவிடங்களில் அஞ்சலி செலுத்துமாறும்ஈமக்கடனை நிறைவேற்றுமாறும் கேட்டுக்கொள்கின்றோம். – என்று உள்ளது. (உ)

## துயிலும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஆட்காட்டிவெளி ஆகிய பகுதிகளிலும் –

முல்லைத்தீவு மாவட்டத்தில் வன்னி வேளாங்குளத்திலும் –

யாழ்ப்பாண மாவட்டத்தில் சாட்டியிலும் –

இருந்தமாவீரர்துயிலும் இல்லங்கள், இராணுவப் படையெடுப்பின்போது கைப்பற்றப்பட்டு முற்றாக அழிக்கப்பட்டு இராணுவத்தினரால் ஆக்கிரமிக்கப்பட்டு, பயன்படுத்தப்பட்டபின்னர், இப்போது விடுவிக்கப்பட்டுள்ளன.

அப்படி விடுவிக்கப்பட்ட துயிலும் இல்லங்களை சிரமதானம் மூலம் துப்புரவு செய்யும் பணி தற்போது நடைபெற்று வருகின்றது.

நாளைய தினம் மாலை 6.05 மணிக்கு துயிலும் இல்லங்களில் நினைவஞ்சலி நடைபெறும். அந்தந்த இடங்களுக்குச் செல்ல முடியாதவர்கள் தத்தமது வீடுகளில் அமைதியாக ஒன்றுகூடி, பணிந்து, இந்த நிகழ்வுகளை முன்னெடுக்கும்படியும் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் அங்கத்துவக் கட்சிகள், ஜனநாயகப் போராளிகள் கட்சி, தமிழர் விடுதலைக் கூட்டணி போன்றவை ஒன்றுபட்டு இந்த உணர்வுபூர்வ நிகழ்வில் பங்குபற்றும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

## கனகபுரம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யடுத்துமாவீரர்துயிலும்இல்லங்கள் அனைத்தும் இராணுவத்தினரால் இடிக்கப்பட்டு பற்றைக் காடுகளாகக் காட்சியளித்தன.

சிலமாவீரர்துயிலும்இல்லங்கள் அமைந்திருந்த காணிகளைப் படையினர் விடுவித்ததைத் தொடர்ந்து கிளிநொச்சி கனகபுரம்மற்றும்முழங்காவில் மாவீரர் துயிலும் இல்லங்கள் நேற்று சிரமதானப் பணி மூலம் பொதுமக்களால் துப்புரவு செய்யப்பட்டன.

நேற்றைய சிரமதானப்பணிகளின்போது எதுவித அசம்பாவிதங்களோ நெருக்கடிகளோ இடம்பெறவில்லை. முழங்காவில் மாவீரர் துயிலும் இல்லத்தில் நடைபெற்ற சிரமதானப் பணிகளைப் பொலிஸார் வந்து பார்வையிட்டுச் சென்றனர் என ஒரு செய்தி தெரிவித்தது.

## பயங்கரவாதத்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

டத்தை விலக்கிக் கொள்ள உதவுமாறு அவர்கள் அமைச்சரிடம் கோரிக்கையொன்றை முன்வைத்திருந்தனர்.

இது குறித்து நேற்று மாலை கூடிய ஐ.தே.முன்னணி கட்சி தலைவர்கள் கூட்டத்தில் அமைச்சர் மனோ கணேசன் விரிவாக எடுத்துரைத்துள்ளார்.

இதனையடுத்து கைதுசெய்யப்பட்டுள்ள ஆவா குழு சந்தேக நபர்களான இளைஞர்கள், பயங்கரவாதத் தடை சட்டத்தின் கீழிருந்து அகற்றப்பட்டு சாதாரண சட்டத்தின் கீழ் விசாரிக்கப்படுவார்கள் என்று தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் இனிவரும் காலங்களில் பயங்கரவாதத் தடைச்சட்டத்தின்கீழ்எந்தவொருநபரையும் கைது செய்வதில்லை என்றும் கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் இணக்கம் காணப்பட்டுள்ளது.

இந்த தகவலை அமைச்சர் மனோகணேசன்தன்முகநூலில் பதிந்துள்ளார்.

# ரவிராஜ் படுகொலை வழக்கு: அரச சாட்சியின் நம்பகத்தன்மை கேள்விக்குரியது என வாதம்

யாழ்ப்பபாணம், நவ.26

நாடாளுமன்ற உறுப்பினர் ரவிராஜைச் சுட்டுக் கொன்றவர் இராணுவப் புலானய்வு அதிகாரியே என நீதிமன்றில் சாட்சியமளித்த கான்ஸ்டபிள் விஜய விக்ரம மனம்பெரிகே சஞ்சஜ பிருதிவிராஜின் நேர்மைத் தன்மைகுறித்துநேற்றையவிசாரணையின் போது கேள்வி எழுப்பட்டபது.

எதிர்த்தரப்புசட்டத்தரணிகள் மேற்படி அரசுத் தரப்பு சாட்சியின்சாட்சியத்தைநம்பமுடியாது என்பதற்கான காரணங்களை நீதிமன்றில் முன்வைத்தனர்.

ரவிராஜ் கொலை வழக்கு விசாரணைகள்கொழும்புமேல் நீதிமன்றத்தில் ஜுரிகள் சபை முன்னிலையில் நேற்று தொடர்ந்து நடைபெற்றன.

அப்போது பிரதான சாட்சி கான்ஸ்டபிள்பிருதிவிராஜைஎதிரிகளின் சட்டத்தரணி குறுக்கு விசா ரணை செய்தார்.

இந்தச் சாட்சிக்கு எதிராக இலங்கை நீதிமன்றங்களில் ஏழு வழக்குகள் உள்ளன.

126 கிராம் கஞ்சாவைத் தன் உடைமையில் வைத்திருந்த குற்றச்சாட்டை இவர் ஒப்புக்கொண்ட நிலையில் ஏற்கனவே இவருக்கு பத்து வருடங்கள் ஒத்திவைக்கப்பட்டசிறைத்தண்டனையை மொனறாகலை மேல் நீதிமன்றம் வழங்கியுள்ளது.

அரிசி ஏற்றிச் செல்லும் லொறிகளைக் கொள்ளையிட்டமை தொடர்பாக கொழும்பு மற்றும் எம்பிலிப்பிட்டி மேல் நீதிமன்றங்களில்அவருக்குஎதிராக நிலுவையில் இரண்டு வழக்குகள் உள்ளன.

இரண்டு தனித்தனி நபர்களைக் கப்பம் கேட்டுக் கடத்திய இரு வேறு வழக்குகளும் அவருக்கு எதிராக உள்ளன.

அம்பாந்தோட்டை மேல் நீதிமன்றத்லும் பிறிதொரு வழக்கு உள்ளது.

இதேசாட்சி2008இல்குற்றப் புலனாய்வுப்பிரிவினருக்குஇதே ரவிராஜ் படுகொலைச் சம்பவம் தொடர்பாக ஒரு வாக்குமூலமளித்துள்ளார். அதில்அவர்தற்போதுரவிராஜைச்சுட்டவர்எனக் கூறப்படும் நபர் அந்தக் கொலையுடன் சம்பந்தப்படவேயில்லை என அந்த வாக்குமூலத்தில் குறிப்பிட்டுள்ளார்.

தானும் இந்த விடயத்தில் சம்பந்தப்பட்டமையால். அன்று அப்படிவாக்குமூலம்அளித்தார் என்றும், இப்போது நிலைமை மாறிவிட்டதால் இப்படி இங்கு சொல்லுகின்றார் என்றும் சாட்சியே குறிப்பிட்டுள்ளார்.

அவர் இந்தக் கொலையில் கருணா குழுவினருக்கும் சம்பந்தம் உள்ளது என்றும் கூறுகின்றார்.

ஆகவே, இந்த சாட்சியின் நம்பகத் தன்மை கேள்விக்குரியது. குற்றஞ்சாட்டப்பட்டுள்ள புலனாய்வு அதிகாரியை மாட்டிவைப்பதற்காக, வேண்டுமென்றே இந்தச் சாட்சி இப்படிக் கூறுகின்றார்.

-இவ்வாறு எதிர்த்தரப்பு சட்டத்தரணிகள் நேற்று நீதிமன்றத்தில் வாதிட்டனர். (உ)

## தமிழ்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

1988 பெப்ரவரியில் விஜேகுமாரதுங்கவை ஜே.வி.பி. வேட்டையாடியது. அதன் பின்னர் அக்கட்சியின் ஏனைய பிரமுகர்களைத் தேடி ஜே.வி.பியினர் வலை விரித்தனர்.

அந்த வகையில் ராஜித சேனாரத்தனவும், ரெஜினோல்ட் குரேயும் கூட ஜே.வி.பியினரின் தாக்குதலுக்கு இலக்காகினர். பலத்த காயங்களுக்கு இலக்கான அவர்கள் ஒருவாறு தப்பிப் பிழைத்தனர். இவர்களின் குழுக்களைச் சேர்ந்த 150 பேருக்கு மேற்பட்டோர் வடமாகாணத்தில் தஞ்சம் புகுந்தனர். நாங்கள்தான் இவர்களுக்குப் பாதுகாப்பு ஏற்பாடு செய்தோம். இவர்களில் சில பேரைப் பாதுகாப்புக் கருதி தென்னிந்தியாவுக்கும் அனுப்பி வைத்தோம்.

ஜே.வி.பியின் கிளர்ச்சிக் காலகட்டத்தில்அப்பிரச்சினைகளுக்கு அவர்கள்முகம்கொடுப்பதற்காக அவர் களில் சிலருக்கு ஆயுதப் போராட்டப் பயிற்சியும் வடக்கில் வழங்கப்பட்டது. அப்படிப் பயிற்சி பெற்றவர்தான் தற்போதைய அமைச் சரவைப் பேச்சாளரான ராஜித சேனாரத்ன. வடக்கு மாகாண சபையின் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உறுப்பினராக இருக்கும் ஒருவரே ராஜிதசேணாரத்ணாவுக்குஆயுதப் பயிற்சி வழங்கியிருந்தார்.

அதையெல்லாம்மறந்துவிட்டு இன்று அவர் எங்களை சீண்டிப் பார்க்கின்றார்.

உயிர்நீத்த தமது உறவுகளை தமிழ் மக்கள் நினைவு கூரும் மாவீரர் தினத்தில் விடுதலைப் புலிகளை நினைவு கூர்ந்தால் அது குறித்துஇராணுவம்கவனத்தில் கொள்ளும் என்று அமைச்சரவைப் பேச்சாளர் ராஜித சேனாரத்ன இப்போது கூறியிருக்கிறார். அப்ப டியானால் வடக்கில் இன் னும் இராணுவ ஆட்சியா உள்ளது?

எமதுதரப்பிடம்ஆயுதப் பயிற்சி பெற்ற ஒருவர் இன்று அதனை மறந்து, எமதுஉரிமைகளைமறுத்துப் பேசுகின்றார். இது தான் எமக்கு மிகுந்த மன வேதனை யைத்தருகின்றது. அவர் இப்படிச் செய்யலாமா?–என்றுநேற்றைய செய்தியாளர் மாநாட்டில் கேள்வி எழுப்பினார் சிவாஜிலிங்கம்.

## ஒற்றை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விட்டுக்கொடுப்பு என்ற பேச்சுக்கே இடமில்லை.

இந்தநாட்டில்உள்ளஅனைத்து மதங்களும், பௌத்தத்துக்கு முதலிடம் கொடுப்பதை ஏற்றுக் கொண்டுள்ளன. புதிய அரசமைப்பில் அந்த நிலைமை தொடரும். மாற்றம் ஏதும் வராது. – என்றார் அவர்.

நாட்டின்ஒற்றையாட்சிமுறைமை என்பது கைவிடப்படமாட்டாது என ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் மூத்த அமைச்சர்களுள்ஒருவரும் ஐக்கியமக்கள்சுதந்திர முன்னணியின் முன்னாள் செயலாளருமான அமைச்சர் சுசில் பிரேமஜயந்த நேற்று முன்தினம் கூறியிருந்தமை தெரிந்ததே. (உ)




இப்பத்திரிகை யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள சிவராம் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 672B கே.கே.எஸ் வீதியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 26.11.2016 இல் அச்சிடப்பட்டுவெளியிடப்பெற்றது.